உ

சிவமயம்.

தெய்வப்புலமைத்

திருவள்ளுவநாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

திருக்குறள் விளக்கமாக

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

கச்சியப்பமுனிவரால்

அருளிச் செய்யப்பட்ட

விநாயகர் புராணத்துள் ஓர் சரித்திரமாகிய

அரசியற்கைப் படலம்.

அதிலடங்கிய

திருக்குறள் மூலமும், உரையும்.

இவை

ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்கதேசிக மஹா சந்நிதானம்

அவர்கள்

கட்டளையிட்டருளியபடி

திருப்பரங்குன்றம்

அ. நாராயண சரணரால்

கும்பகோணம்

ஸ்டார் பிரஸ், ஹெட் ஆபீஸில்,

பதிப்பிக்கப்பட்டது

1927.

பிரபவ-ஹை வைகாசிமீ.

திருக்கைலாயபரம்பரை

திருவாவடுதுறை ஆதீனம்

கச்சியப்பசுவாமிகள்

சரித்திர மான்மியம்.

இந்நூலாசியர் தொண்டைமண்டலத்திலே, தணிகைப்பதியிலே, வழிவழிச்சைவர் வேளாளர் குலத்திலே தோன்றி ஒழுக்கம், அன்பு, அருள், வாய்மை, அடக்கம் முதலிய வற்றைத் தமக்குச் சிறந்த அணிகலன்களாகக் கொண்டு கல்வி கேள்விகளிற் சிறந்திருந்தனர். இவர் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பல திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடியற்றிவரும்போது திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தையடைந்து, ஆண்டெழுந்தருளியிருந்த ஸ்ரீ நமச்சிவாய சுவாமிகளை வணங்கி, அப்போது சின்னப்பட்டத்திலெழுந்தருளியிருந்த பின் வேலப்பதேசிகரிடத்தே சைவத்துறவும், சிவதீக்கையும் பெற்றுக்கொண்டனர். பின்னர் வடநூற்கடலும், தென்னூற்கடலும் நிலைகண்டுணர்ந்த ஸ்ரீ மாதவச்சிவஞான சுவாமிகளிடத்தே இலக்கண இலக்கிய நூற்களும், தருக்கமும், மெய்கண்ட சாத்திரம் பதினான்கும், பண்டார சாத்திரம் பதினான்கும். மற்றும் பல அரிய நூற்களும் கற்றுணர்ந்து ஆசிரியரது மாணவர் பன்னிருவருள் தலைமைபெற்றிருந்தனர். இவர் தாம் பாடிய திருவானைக்காப்புராணம், திருப்பேரூர்ப்புராணம், திருத்தணிகைப் புராணம் என்று மூன்றிலும் மூன்று படலங்களில் சிவாகமங்களிலும், தமிழ்ச் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் பரந்துகிடக்கும் முப்பொருளிலக்கணங்கள் எளிதினுணருமாறு தொகுத்துக் கூறியிருக்கின்றனர். பின்னர் தமது மாணாக்கரிற் சிறந்த கந்தப்பையருக்கு வயிற்றிலே கொடிய நோயுண்டானபோது தணிகையாற்றுப்படையென்னும் அரிய பெரிய நூலினை இயற்றியருளி பின்பு சென்னைமாநகரினை யடைந்து விநாயகர்புராணம் பாடியரங்கேற்றுகையில் அச்சபைக்கு வந்த பெரிய பிரபுவாகிய ஐயாப்பிள்ளை யென்பவர் 'இஃதென்ன இராமாயணமோ' என்று பரிகசிக்க, உடனே முனிவர் இராமாயணத்தில் ஆறு செய்யுட்களெடுத்து நூறு குற்றமேற்றக் கண்ட பிரபு, நூறுவராகனும், உயர்ந்த பட்டாடைகளும் முனிவரவர்கட்குப் பாதகாணிக்கையாக வைத்து வணங்கி மன்னிப்புக்கேட்டுக்கொண்டார் என்ப.

இவரியற்றியருளிய நூற்கள் பல. அவற்றிற்றெரிந்த சிலவற்றை ஈண்டுக் கூறுவாம்.

1. திருவானைக்காப்புராணம்.
2. பேரூர்ப்புராணம்
3. திருத்தணிகைப்புராணம்.
4. பூவாளூர்ப்புராணம்.
5. விநாயகர்புராணம்.
6. காஞ்சிபுராணத்துள் இரண்டாங்காண்டம்.
7. திருத்தணிகையாற்றுப்படை
8. கச்சியானந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது
9. கச்சியானந்த ருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி.
10. பஞ்சாக்கரதேசிகரந்தாதி.
11. பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி
12. பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.
13. தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி.
14. சென்னை விநாயர் பிள்ளைத்தமிழ்
15. சென்னை விநாயகர் யமகவந்தாதி.

இவர் பேரூரில் வசிக்கும்போது அரசம்பலவாணர்மீது ஒரு நூலைப்பாடி மழையை வரவழைத்தும், பட்டீசர்மீது பலபாக்களைப் பாடிப் பலருக்குக் குட்டநோய் முதலியவற்றைப் போக்கியருளினார். இன்னோரன்ன நூற்கள் பல அருளிக் காஞ்சீபுரத்திலே சாலிவாகன சகாப்தம் ௯௭௱௧௨க்குச் சரியான சாதாரண-௵ சித்திரைத்திங்கள் பதினொன்றாம் நாளில் எல்லாம் வல்ல இறைவன் திருவருளில் இரண்டறக்கலந்தனர்.

ஷை ஆதீனம் மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய

திருக்குறளின் புகழ் நிலையம்.

பொன்பூத்தமகரந்தப்புதுமதுவச்செழுங்கமலப்பொகுட்டுவாழ்வோன்
தென்பூத்தநான்முகத்தோனலனாலைமுகத்தோனேதெளிமினென்னக்
கொன்பூத்ததமிழ்வழங்குநிலத்தினறமினிதெழுந்துகுதிகொண்டாட
மின்பூத்தசெங்கதிரின்வள்ளுவரென்றொருநாம்மேவத்தோன்றி (1)

பொலிதரமுன்னுணர்ந்தமறையகத்தமைந்தவறமுதனாற்பொருளுமேன்மேற்
லொலிதரமற்றந்நான்குமொருமூன்றிலடக்கியின்றேனொழுக்கியாங்கு
மெலிதரலில்வரைமுதற்பேருருவொருசிற்றாடியகம்விளங்கன்மான
நலிதரறீர்சிலசொல்லிற்பல்பொருளுஞ்செறித்துநவைநண்ணாதாக (2)

மொழிசுருங்கல்பொருள்விளங்கல்மொழியவினிதாதனலமொழிபுணர்த்தல்
வழியமையோசையிற்பொலிதலாழ்ந்திருத்தன்முறைநிறுவன்மலைவுதீர்தல்
பொழிவிழுமியதுபயத்தல்காட்டாதலிப்பத்தும்பொலியவாய்ந்த
கழிபொருளுங்கருதணியுநோக்குமிடந்தொறுங்கிடந்துகளிப்புச்செய்ய (3)

மையேறுபொழின்மதுரைமாநகரத்தருட்புலமைமாட்சியோர்முன்
கையேறுதிருமூலாகமச்சோதிமறைமுளித்தகனிவாய்விண்டு
பையேறுமணிபொருமோர்துதிகவிசொற்றிடப்பலரும்பாவிப்போற்ற
வையேறுதிருக்குறளென்றொருநூல்செய்துலகுவப்பவளித்தான்மன்னே. (4)

திருமயிலை தெய்வப்புலமைத்

திருவள்ளுவநாயனார்

சரித்திரச்சுருக்கம்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார், நூலாசிரியர் பலரினும் உயர்வொப்பில்லாத சிறப்புப்பொருந்திய முதனூலாசிரியராய் மேற்கொள்ளப்படுகின்றனர். அவரினின்றுந்தோன்றிய திருக்குறளாவெனின், மக்களுக்கு உணரவேண்டுவனவனைத்தும் பயத்தற்சிறப்புடைத்தாய் விளங்குகின்றது. அவர், மதுரையில் அரசாட்சிசெய்த உக்கிரப்பெருவழுதியென்னும் பாண்டியராஜன் காலத்திலே ஆதிபகவன் என்னும் தாய்தந்தையருக்குப் புத்திரராகத்தொண்டை மண்டலத்தில் திருமயிலாப்பூரென்னும் சிவஸ்தலத்திற்கு வடபுறம் இலுப்பைத்தோப்பில் திருவவதாரஞ்செய்தருளினர். அவரிடத்தே விளங்கிய பலவகைப்பட்ட அபூர்வகாரியங்களாலே அவரது தெய்வத்தன்மை உலகத்திற்கு வெளியாக்கப்பட்டது. அவர் யாவர்க்கும் பொதுவான பரமாசாரியராய் பொழுந்தருளியிருந்தாலும், அக்காலத்திலே பரிபாகப்பட்டிருந்த கொங்கணசித்தர் ஏலேலசிங்கர் முதலானோர் அவரை வழிபட்டு உபதேசம்பெற்றுய்ந்தனர். அவராலே செய்யப்பட்ட திருக்குறள் மதுரைகடைச்சங்கத்தில் அரங்கேறியது. அச்சங்கத்துப்புலவர்கள் அப்போது திருவருளினாலே திறக்கப்பட்டதமது மேய்ஞ்ஞானப்பார்வையைக்கொண்டு அவரை நான்முகக்கடவுளது திருவவதாரமாய் வந்தவரென்றும், அவரினின்றுந்தோன்றிய நூலைச் சிறந்த உத்தரவேதமென்றும், கண்டுகொண்டு யாவரும் உணர அவரது மேன்மையைத் திருவள்ளுவமாலையால் விளக்கினர்கள்:—அப்பால், நாயனார் உலகத்தார்க்கு இல்லறநெறியைக் காட்டும் பொருட்டு வாசுகியென்னுமனைவியாரோடுகூடி நெடுங்காலமிருந்து வீடுதக்முத்தியடைந்தருளினர்.

திருவள்ளுவநாயனார் சரித்திரச்சுருக்கம் முற்றிற்று.

நாயனார் குருபூசைத்திருநட்சத்திரம்

வெண்பா.

மாசியுத்தி ரத்தினத்தில் வள்ளுவனார் மாநிலம்விட்
டாசில்பர முத்தியடைந் தாரால்—காசினியில்
கொல்லா விரதங் குறிக்கொண்டா ரெல்லாரும்
நல்லார்வஞ் செய்மினந்த நாள்.

இந்நாயனாருடைய திருக்கோயில் ஸ்ரீ கபாலீசுரர் சந்நிதிக்கு வடபுறம் இருக்கின்றது.

ஆசிரியர் பெயர் கூ.	நூலின் பெயர் கூ.
திருவள்ளுவர், நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர்.	திருக்குறள், முப்பாலினால், உத்தர வேதம், தெய்வநூல். திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை.

சங்கப்புலவருள் ஒருவராகிய சீத்தலைச்சாத்தனார் இயற்றிய வெண்பா.

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றூரன்றே
பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்.

இந்நூலின் உரையாசிரியர் பெயர் கயி.

வெண்பா.

கருமர் மணக்குடையர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்.

இந்நூற்கரின் சிறப்பு.

வெண்பா.

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர்தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

வள்ளுவர்நூ லென்பர்திரு வாசகந்தொல் காப்பியமே.
தெள்ளுபரி மேலகர் செய்தவுரை—ஒள்ளியசீர்
தொண்டர் புராணந் தொகைச்சித்தி யாரறுந்
தண்டமிழின் மேலாந் தரம்.

திருவள்ளுவநாயனார் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாய பரம்பரைத்
தருமபுரம் ஆதீன அடியார் குழாத்து ளொருவரும்
திருப்பனந்தாள் காசிவாசி
ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகளின்
மாணவருள் ஒருவருமாகிய
வித்துவான்
சட்டைநாதத் தம்பிரான் இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

திருவளர்நற்றுறைசைநமச்சிவாயனடிதொழுதேத்துஞ்சீர்த்திமிக்கான்
உருவளர்பின்வேலப்பனுபதேசமிருசெவியினுவந்துமாந்திக்
கருவளர்மும்மலக்குறும்பாங்காடெறிந்தசிவஞானக்கருணையோன்பால்
இருவளர்நன்மொழிதனிலுமின்மொழியாந்தென்மொழியேயியல்பாவோர்ந்தோன்

சீவகநற்சரிதமதைத்தேனெனவேசொன்னயத்தாற்சிந்தைசெய்வார்
பாவமெலாமறவுந்தன்பாவலிமைதனைக்கண்டுபாரில்யாரும்
நாவகத்திற்சுவையொழுகுமாவளித்தானெனத்தணிகைநாதனாடற்
பாவகத்திலெந்நாளும்பதித்துய்யப்பரிந்தளித்தபான்மையாளன். (உ)

நீரூர்க்கும்பேரூர்க்குநிறைபூவாளூரதற்குநேர்மையாகச்
சீரூர்க்கும்மான்மியத்தைத்தென்றமிழாலின்சுவைத்தாய்த் தெருட்டிப்பின்னுங்
காரூர்க்கும்பச்சிகரக்கதிர்நிலவுமாடமுடைக்காஞ்சியென்னு
மோரூர்க்குஞ்சிவஞானமாமுனிவனுரைத்ததற்பின்னுரைத்ததூயோன். (௩)

பன்னரியசின்னூலும்பலவியற்றிப்புகழ்படைத்துப்பரந்தசீர்த்தி
தன்னரியபொருளென்னத்தான்படைத்தகச்சியப்பதவத்தோன்முன்னால்
உன்னியவர்நினைகருமமுடன்முடித்துமெவராலுமுன்னற்கேலாத்
தன்னரியபதமருள்விநாயகற்கோர்புராணமதைதழைக்கச்செய்தான். (௪)

இவ்வரியநூலினொருபடலமரசியற்கையதிலிலகுஞ்செய்யுட்
கொவ்வியநற்குறள்களெலாமுடனுடனேசேர்த்தவற்றிற்குரையுஞ்சேர்த்து
செவ்விதினேயெவராலும்தெளிதருமாவச்சியற்றிச்சிறப்பினீந்தான்
திவ்வியநம். அரு. நாராயணசரணனெனும்புலவர்திலகன்மாதோ. (௫)

திருக்குறள் அதிகாரம் நூற்றுமுப்பத்துமூன்றின் பகுப்புகள்.
மதுரைச்சங்கப்புலவருள் ஒருவராகிய
சிறுமேதாவியார் இயற்றியது.

வெண்பா.

வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்றொன்றூழ்—கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

இதிஃ-வீடு (க) பாயிரம் (ச) அறம் (௩௨) ஊழ் (க) பொருள் (௭௦)
இன்பம் (௨௫) ஆ அதிகாரம் (௱௩௦௩).

புத்திரன் பிறந்தமை

இன்னசுதன்மைவயிற்றுதித்தானேமகண்டனெனும்பெயரான்
கொன்னும்பதினுயிரம்யானைகோணைவலியான்பகைத்தெதிர்ந்த
மன்னர்நடுங்கப்புகையுயிர்க்குமடங்கலனையானிவர்பலருந்
துன்னவளர்செங்கோலோச்சிச்சோமகாந்தன்வாழ்ந்திடுநாள். (12)

வேறு.

தோமகன்றவமைச்சருந்துணையாவியன்னசுதன்மையு
மேமகண்டனும்வேறுவேறினிதோதும்வார்த்தையெனுஞ்சுதை
காமவச்சிரவேலின்மன்னவனன்றுதுய்த்துளமுங்குளிர்ந்
தேமகண்டனைவேறுநோக்கியெடுத்திரும்பொருள்கூறுவான் (13)

பிள்ளைமைப்பருவத்துளாயலேபேதுகொண்டெவன்பேசினை
தள்ளரும்பனுவற்றிறத்தொடுதந்தைதாயரையோம்பிநின்
றெள்ளரும்பலதானமாதியியற்றியேகயபூமியின்
வள்ளரும்பலிபிண்டமிட்டவன்மெச்சுபுத்திரனுயினும். (14)

தாயர்தந்தையர்வார்த்தையிற்றவறுதுநின்றிடலேமுத
லாயதன்மமறிந்தபுத்திரனைவற்கருமைந்தனே
மேயவென்னுரைகொண்டமைச்சரிலுடுமேதினிகாத்தியென்
றேயும்வண்ணமியம்பியுண்மனையேமகண்டனுடெய்தினன். (15)

ஒருவரெய்தியிருப்பினும்பலருற்றுவைகினரோவென
மருளும்வண்ணநிழற்றிருங்கதிர்மாமணித்திரண்மாளிகைக்
கருதலற்குருமேறனுளெருகாமருந்தவிசெய்தினன்
அருமைமைந்தனைமுன்னிருத்தியவற்குநீதியுரைக்குமே. (16)

திருக்குறள் விளக்கம், அரசியற்கைபடலம் மூலமும் உரையும்.

இச்செய்யுளால் இப்படலத்தின் பயனிஃதென விளக்கினர்.

இவை சோமகாந்தராசன் தன் புத்திரனுகிய எமகண்டனை மந்திரி முதலிய ஆன்றோர்கள் முன் இருத்தி அறிவு போதித்தது வரையினுங் கூறப்பட்டது.

இருணிறப்பெருங்கடன்மருங்குடுத்தொளிரிருநிலத்தவர்க்கெல்லாம்
வருணமேநிலையெனுமிரண்டொடுக்தகவகுத்திடுமாசாரந்
தருமமென்பனவளவிலவவையெலாஞ்சாற்றிலனவைநிற்க
வருமைமைந்தனேயுனக்குரித்தாகியவாசியலினிக்கேண்மோ.

(இ—ள்.) (சோமகாந்தராசன் எமகண்டனை நோக்கி) என்னருமை மகனே! இருள்போலக் கருநிறமாகிய பெரிய கடலை யாடையாகவுடுத்

தொளிரும் பெரிய உலகத்திலுள்ளவர்க்கெல்லாம் விதித்திருக்கும் வருணச் சிரம தருமங்கள் அளவில்லாதன. அவை யாவும் (உரைக்கப் பெருகுமாத லின்) சொல்கிலேன். அவையிருக்க, உனக்கு இன்றியமையாததாகிய அரசியனீதியை மாத்திரம் (கூறுகின்றேன்) கேட்பாயாக. எ–று. (1)

இதுமுதல் (9) கவி நித்தீய கருமவிதி கூறப்பட்டது.

விடியன்முக்குறக்கடிகையைக்தெனத்துயில்விடுத்துடற்சுசிசெய்து
கடிமலர்த்திராளமளிசேர்பள்ளியைக்கடிந்துவேறிடம்வைகிக்
கொடியவல்வினைக்குழாத்தினைப்பொடிசெயுங்கோமளப்பொடிபூசி
யடிகளாகியகுரவனைவழிபடுமமலனையகத்தெண்ணி.

(இ–ள்.) பொழுது விடிய ஐந்துகாழிகை முற்பட்டுத் துயினீங்கி, தேகத்தைச் சுத்திசெய்து, வாசந்தங்கிய மலர்த்தொகுதி நிறைந்த படுக்கை யரையை விடுத்துப் புறத்தேயமர்ந்து, கொடிய பாவகூட்டங்களை நீக்கத் தக்க திருநீறிட்டுக்கொண்டு, தலைவனுகிய ஆசானையும் உபாசனை மூர்த்தி யையும் மனதிற் றியானித்து. எ–று. (2)

பரந்தபூமியையெதிருறநோக்குபாரெனப்படுந்தாயே
யரந்தையின்றியான்றிரிதருந்தொறுமெனதடியுனதருமீதே
நிரந்தரித்துறப்படும்பிழைபொறுவெனநெகிழ்ந்தவுள்ளகத்தோடு
மிரந்துபின்னிருமதப்பெருங்களிற்றினையினிதுறத்தியானித்து.

(இ—ள்.) விசாலமான பூதேவியை யெதிராகப்பார்த்து, பூமியென்று சொல்லப்படுந் தாயே! தன்பமின்றி யான் சஞ்சரிக்கும் பொழுதெல்லாம் என்கால் உன் வடிவின்மேற் பொருந்தப் பரவிப்படுகின்ற குற்றத்தை (எண்ணுது) பொறுத்தருள்கவென்று, உருக்கமான மனதுடன் பிரார்த் தனை செய்து, பின்னர் இருமதங்களையுடைய பெரிய யானைமுகமமைந்த விநாயக மூர்த்தியை யினிதாகத் தியானஞ்செய்து. எ–று. (3)

இருமதம்:- கன்னமதம், கைமதம்

எண்ணிலாகமமறைக்கெலாமுடிவெனவிருந்திடுமிறைதன்னைக்
கண்ணனுதிவிண்ணவர்களாயிருந்திடுங்கணேசனைமனமாதி
கண்ணெனுந்தகாயகனைநாற்பொருளையுகண்ணினார்க்கருள்வானை
யண்ணலாகியவனுதியையனந்தரூபியையருட்கடலானை.

(இ—ள்.) கணக்கில்லாத வேதாகமங்களுக் கெல்லாம் முடிவாக வீற் றிருக்குந் தலைவனும், திருமால் முதலிய தேவர்களாயிருந்திடுங் கணேச னும், மனுதிகளுக்கு எட்டாத முதல்வனும், அடைந்தவர்களுக்கு (தர்ம

முதலிய) நால்வகைப்பட்ட புருடார்த்தங்களையுங் கொடுப்பவனும், கடவுளாகிய அருகதியும், அருகதவடிவனும், கிருபாசமுத்திரமு மானவனும்.எ-று

சகலலோகமுமளித்திடுங்காரணமானதத்துவன்றன்னை
யகலுறுதவிக்கினங்களேயாயினுமடித்தவர்க்கறுப்பானைப்
புகல்விநாயகக்கடவுளைப்புலரியின்வணங்குகின்றேனென்று
மிகல்செய்காதலின்வழுத்திமற்றமரரைவேறுவேறுறகாக்கி.

(இ—ள்) சர்வலோகாகாரணமாகிய காரணமாகிய தத்துவசொரூபியும், தன்னை யடித்தவர்களுக்கு நீங்காத விக்கினங்களேயாலுலுக் தீர்க்க வல்லவனுமாயிருக்கின்ற விநாகயப் பெருமானைப் பிராதகாலவந்தனஞ் செய்கின்றேனென்று, மிக்க ஆசையுடன் தியானித்து, பின்பு தனித்தனி தேவவணக்கஞ் செய்து. எ—று. (5)

உரகமாலையான்சந்திரசேகரனுழுவையினுரிசூழ்ந்த
பரமன்பேரழகினன்பெருங்கருணையன்பண்ணவரனேவோர்க்கும்
வரமெலாங்கொடுத்தருள்பவன்பார்ப்பதிமணாளனல்வழிவாராப்
புரநிலாவகையழித்தபுண்ணியன்றனைப்புலரியிற்றொழுகின்றேன்.

(இ—ள்) சர்ப்பாபரணமணிந்தவனும், சந்திரசேகரனும், புலித்தோலையாடையாக வணிந்த பரமனும், சலட்சணனும், தயாநிதியும், தேவர்களெல்லாருக்கும் வரங்களெல்லாவற்றையுங் கொடுத்தருள்பவனும்,உமாநாயகனும் கல்வழியில் வாராத திரிபுரங்களை நில்லாவழியாக எரித்த புண்ணிய மூர்த்தியாகிய சிவபெருமானைப் பிராதகால வந்தனஞ்செய்கின்றேன். (என்று பணிந்து.) எ—று. (6)

பெத்தமுத்தியும்பரப்புபெண்ணரசியைப்பிறழுமுக்கண்ணுளைத்
தத்துவத்தினுக்காதிகாரணியையத்தத்துவங்கடந்தாளைச்
சித்தர்தேவர்கடிதிகொளுமிறைவியைத்திகழ்சமுசாரத்தின்
புத்திநீங்குமாறருளும்பார்ப்பதிதனைப்புலரியிற்றொழுகின்றேன்.

(இ—ள்.) பெத்த முத்திகளை யருள்புரியும் பெண்களையகியும், பிறழ்கின்ற மூன்று கண்களையுடையவளும், தத்துவங்களுக்கு ஆதிகாரணியும், தத்துவாதீதியும், சித்தியாளர்களுந் தேவர்களுந் தொழுமிறைவியும், விளங்குகின்ற சமுசார பந்தவினை நீங்கும்படி யருள்பவளுமா யிருக்கின்ற பார்ப்பதி தேவியைப் பிராதகாலவந்தனஞ்செய்கின்றேன்.(என்று பணிந்து)(7)

தொக்கபாவத்தைச்சத்துருக்குழாத்தினைத்தொடர்ந்துசென்றிறப்பா
தக்கபூமகண்மணாளனைப்பாற்கடற்றனித்துயிலமர்வானை [னைத்
மிக்கவீரனுய்வேதியரிடர்தபவேறுவேறுருக்கொண்டு
புக்கமாயனையிந்திரனிளவலைப்புலரியிற்றொழுகின்றேன்.

(இ—ள்.) தொகுதியான பாவத்தையும், சத்துரு கூட்டத்தையுந் தொடர்ந்து சென்றழிப்பவனும், தகுந்த தாமரைமலரில் வசிக்குந் திருமகள் மணாளனும், திருப்பாற்கடலில் ஒப்பற்று (யோக) நித்திரைசெய்பவனும், மேம்பட்ட வைதீகர்க்கு இடரகற்றும்படி (தசாவதாரமுதலிய) வெவ்வேறு வடிவெடுத்த மாயாவீரனும், உபேந்திரனுமாயிருக்கின்ற விஷ்ணுமூர்த்தியைப் பிராதகால வந்தனஞ் செய்கின்றேன் (என்று பணிக்து.)(8)

பெருமைதங்குமெண்ணத்தினையுடையவன்பேணறிவொடுகன்ம
மருவுதற்குறுகாரணமானவன்மறையுருவினனித்த
மிருளுந்தானவர்மாயையுந்துரப்பவனியாவருந்தொழுதேத்தும்
பொருவிலாதபேரொளிவளர்பரிதியைப்புலரியிற்றொழுகின்றேன்.

(இ—ள்.) பெருமைதங்கிய எவ்வகை யிலக்கங்களுக்குங் கருத்தனும், காக்கத்தக்களானமும் கருமமும் (ஆதியவற்றின் பலன்கள்) அடைதற்குக் காரணமானவனும், வேதரூபியும், காடோறும் உலகவிருளையும்அசுரமாயையையுந் தவிர்ப்பவனுமாகி எல்லோரும் பணிந்து துதிக்கும் ஒப்பில்லாதபேரொளி வளரும் சூரியபகவானைப் பிராதகால வந்தனஞ்செய்கின்றேன்.(9)

முறையினிவ்வகைவழுத்தியேயேனையமுடிகொள்வானவர்தம்மைக்
கறையிலாமுனிவோர்களையன்பினுற்கருத்துறத்தொழுதேத்தி
யறையுநாட்கடன்விதிப்படிமுடித்தபினறங்களின்வழுவாமே
நிறையும்வேதியரமைச்சாதியரொடுநிலம்புரப்பதுமாண்பால்.

(இ—ள்.) கிரீடமணிந்த மற்றைய தேவர்களையும், களங்கமில்லாத முனிவர்களையும் அன்புடன் மனத்திற் பொருந்த இவ்வாறு முறைப்படி துதித்து, சொல்லப்படும் நித்தியாநுட்டானத்தை விதிமுறையே செய்து, அதன் பின்னர் நீதிதவறுதபடி மிகுதியாகிய அந்தணர் மந்திரர் முதலியவரோடனவளாவி உலகினைப் பாதுகாப்பது மாட்சிமையாகும். எ—று. (10)

நீதிபோதித்தல் அறத்துப்பால் இல்லறவியல்.

இதுமுதல் (24) அதிகாரங்களாலும் (31) செய்யுள்களாலும் இல்லறவியல் சொல்லலாயினர்.

1-வது அதிகாரம் கடவுள் வாழ்த்து.

அஃதாவது— தான் வழிபடுகடவுளையாயினும், எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளுக்கு ஏற்புடைக் கடவுளையாயினும் வாழ்த்துதலாம். அவைகளுள் இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுளை யென்றறிக. குறள் 4.

ஒருப்படுமறத்திலுலேயொண்பொருளின்பஞ்செம்பொற்
பருப்பதங்கடல்போல்வந்துபயப்படுமதனைக்கேண்மோ
விருப்பொடுவெறுப்பிலாதமிக்கவெண்குணத்தோடொன்று
யிருப்பவன்யாவனன்ருனிணையடிவணங்கல்வேண்டும்.

(இ—ள்.) (மகனே! நீ யடையவேண்டிய கால்வகைப் புருடார்த்தங்களுள்) ஒருமைப்பட்ட தருமத்திலுலே ஒள்ளிய பொருளும் இன்பமும் மேருமலையுங் கடலும்போல வந்து பயன்படும். அதனைக் கேட்பாயாக. விருப்பும் வெறுப்புமில்லாத மேம்பட்ட எண்குணத்தோடு கூடியிருக்குங் கடவுள் எவனே அவனுடைய உபயபாதங்களைப் பணிதல்வேண்டும். எ—று.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு.

(கருத்துரை.) எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன அதுபோல உலகம் கடவுளை முதலாக உடையது.

வேண்டுதல்வேண்டாமையிலானடிசேர்ந்தார்க்
கியாண்டுமிடும்பையில.

[இல்லை.

(க—ரை.) கடவுளடிகளைச் சேர்ந்தவர்களுக்குப் பிறவித்துன்பங்கள்

அறவாழியந்தணன்ருள்சேர்ந்தார்க்கல்லாற்
பிறவாழிநீந்தலரிது.

(க—ரை.) கடவுளடிகளைச் சேராதார்க்குப் பொருளும் இன்பமுமாகிய கடல்களைக் கடத்தல் கூடாது.

கோளில்பொறியிற்குணமிலவேயெண்குணத்தான்
ருளைவணங்காத்தலை.

(க—ரை.) கடவுள் பாதங்களை வணங்காததலைகள் பயன்படா.

எண்குணங்களாவன. தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கினவன், பேரருளுடையவன், முடிவிலாற்றலுடையவன், வரம்பில்லின்பமுடையவன். என்பனவாம்.

2—வது அதி. வான்சிறப்பு.

அஃதாவது—கடவுளது ஆணையால் உலகமும் அதற்குறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு எதுவாகிய மழையினது சிறப்பைச் சொல்லுதலாம். குறள் 4.

வானின்றுலகம்வழங்கிவருதலாற்
ருனமிழ்தமென்றுணரற்பாற்று.

வேறு (இச்செய்யுளால் மழைவளம்பெருக்கு எனக்கூறியதாம்.)

அறமுதற்பொருளுலகமலனுணையா
னிறுவுதற்கேதுவாய்நிகழுமாமழை
வறுமையெய்தாவகைவயங்குவேள்வியை
யுறுகருமங்களையுளுற்றல்வேண்டுமால். (உ)

உ-ம் அதி.—வான்சிறப்பு.

அஃதாவது - கடவுளது ஆணையால் உலகமும், அதற்குறுதி யாகிய அறம் பொருள் இன்பங்களும், நடத்தற்கு ஏதுவாகிய மழை யினது சிறப்பைச் சொல்லுதலாம் (குறள் ச)

• வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றுனமிழ்த மென்றுணரற் டாற்று.

(க-சை.) மழையானது நீங்காமற் பெய்துநிற்க உயிர்களானவை நிலை பெற்றுவருகையால் அம்மழை உயிர்களுக்கு அமிர்தம்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

(க-சை.) உண்பவர்க்கு நன்மையாகிய உணவுகளையுண்டாக்கி அவ்வுணவை உண்பவர்க்குத் தானும் உணவாகநிற்பது மழை.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(க-சை.) மழைபெய்யா விட்டால் இவ்வுலகில் தேவர்களுக்கும் பூசை நடவாது.

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

• (க-சை) மழைபொழியாவிடில் உலகத்தில் தருமமும் தவமும் உண்டாகா.

(இதுமுதல் மூன்றுசெய்யுள்களாற் பெரியோரை வழிபடுக எனக் கூறியதாம்.)

விழுப்பொருணன்கையும்விளங்கத்தெள்ளுபு
முழுப்பவைம்பொறியையுமுனிந்துநீத்தவர்
வழுப்படாமறையவர்மற்றைக்கல்வியோர்
குழுப்புறத்தாதரங்கூர்தல்வேண்டுமால். (ஊ)

ஊ-ம். அதி —நீத்தார் பெருமை.

அஃதாவது-முற்றத்துறந்த முனிவரது பெருமையைச்சொல்லுதலாம் (குறள் ஈ)

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(க-ரை) நூல்களது நிச்சயமானது துறந்தவர்மகிமையை மேலானதென்று விரும்பும்

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(க-ரை.) பெரியோர் செய்தற்கு அரிதானவைகளை அறிந்துசெய்வார்கள், சிறியோர் அவ்விதம் அறிந்து செய்யார்கள்.

நீத்தவராகியோர்நெருப்புயிர்த்திடிற்
காத்திடுங்கடவுளுங்கலங்குமாதலா
லேத்துவதேகடனென்றுமைந்தனே
யாத்தர்கள்பொறுப்பரென்றவமதித்திடேல். (௪)

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(க-ரை) கௌதமமுனிவல்லமைக்குத் தேவேந்திரனே சாக்ஷியாம்.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(க-ரை) முனிவரது கோபம் கோபிக்கப்பட்டவராலே தடுக்கமுடியாது.

குரவரைப்பெரியரைக்கூறுமாகம
விரவுறுமறைகளைமேதகும்படி
பரவுதலலதவர்பாங்கர்நிந்தனை
கரவுறவுளத்தினுங்கருதொணாததே. (௫)

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(க-ரை.) முனிவரது மகிமையை அவர்கள் மந்திரங்களே காட்டும்.

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்.

(க-ரை) அந்தணர் என்று சொல்லப்படுவோர் முனிவர்களேளே.

(இதுமுதல் மூன்று செய்யுள்களால் தருமத்தை விரும்புஎனக்) கூறியதாம்.)

தேங்குவிண்போகமுஞ்சிறந்தமுத்தியு
மீங்குறுமாக்கமுமினிதுநல்கலா
லோங்கியவறத்தினையுளமுன்மூறின்னும்
பாங்குறநித்தலும்பரிந்துசெய்தியால்.

(௬)

௪-ம். அதி — அறன்வலியுறுத்தல்.

அஃதாவது-அம்முனிவரால் அறிவிக்கப்பட்ட மூன்றுள் அறமானது மற்றைப்பொருள் இன்பங்கள்போல் ஆகாமல் இம்மை மறுமை வீடு என்கிற மூன்றையும் தருதலால் அவற்றினும் உறுதியுடைத்தென்றுசொல்லுதலாம். (குறள்சு)

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(க-ரை.) மக்களுயிர்க்குத் தருமத்தின் மேற்பட்டது இல்லை.

ஒல்லும் வகையா லறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(க-ரை.) மனம் வாக்கு காயம் இம்மூன்றாலும் தருமஞ்செய்யக்கடவர்.

வழுக்கறுமறத்தினைமற்றுச்செய்துமென்
றொழுக்கிடாதொல்லுறும்வகையின்னாச்சொலு
மழுக்கெனுமுளத்தழுக்காறவாமுத
லிழுக்கொடுவெகுளியுமின்றிச்செய்கலே. (எ)

அழுக்காறவாவெகுளி யின்னாச்சொன்னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(க-ரை.) பொறாமை ஆசை கோபம் கடுஞ்சொல் இந்நான்கும் கடிந்துநடந்ததேதருமம்.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

(க-ரை.) இறக்கும்போது தருமம்செய்வோமென்னாது இருக்கும்போதே தருமம் செய்க. அத்தருமம் இறக்கும்போது உதவியாம்.

அன்புறுமறத்தினாலடுக்குமின்பமே
யின்பெனத்தக்கதாலேனையின்பெலாந்
துன்பமும்பழியையுந்தோற்றுமாதலால்
வன்புறுமறத்தினைமறப்பிற்கேடுறும். (அ)

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(க-ரை) தருமத்தின் மேற்பட்ட செல்வமும் இல்லை, அத்தருமத்தை மறத்தலைப்பார்க்கிலும் கேடும் இல்லை.

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(க-ரை.) தன்மனைவியோடு கூடும் இன்பமே இன்பமாகும்,—பிறன்மனைவியோடு கூடும் இன்பம் துன்பமாகும்.

(இதுமுதல் இரண்டு செய்யுள்களால் மனையாணலமோம்புக எனக் கூறியதாம்.)

பிரமசாரிவனத்துறைவோன்பேணுந்துறவிதன்புலத்தார்
குரவர்தேவர்விருந்தொக்கல்கோக்கண்மறையோரிறந்தோர்க
ளிரவலாளருறப்பிலர்சளெய்தும்பினியாளர்கண்முதியோர்
விரவுபாலர்சிசுதமதுமிசையாரிவரையோம்புகவே. (கூ)

ரு-ம் அதி.—இல்வாழ்க்கை.

அஃதாவது - மனையாளோடு கூடிவாழ்தலின்து சிறப்பாம். (குறள்கூ)

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

(க-ரை.) இல்லறத்தில் வாழ்பவன், பிரமசாரி வானப்பிரத்தன் சந்நியாசி இம்மூவர்க்கும், துணையாவான்.

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை

(க-ரை.) துறந்தவர்க்கும், வறியவர்க்கும், இறந்தவர்க்கும், இல்வாழ்வான் துணை.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்ருங்
கைம்புலத்தா ரோம்ப றலை.

(க-ரை.) பிதிர்க்கும் தெய்வத்திற்கும் விருந்திற்கும்இனத்திற்கும்தனக்கும் கருமம்செய்தல் தலைமையான கருமம்,

வருவாய்க்கியையவாழ்தலுறுமதுவில்கற்பின்மனையாள்போற்
பொருள்யாவுளவாமதுவன்றிப்புகழும்பயனுமிகவுண்டாங்
கருதாரெதிரேயிமிலேற்றுக்காமார்நடையுமுறுமதனா
லொருவாதவமேளாடுவப்புறவேயுற்றுவாழ்தலறனாகும். (ஏ)

கூ-ம் அதி.—வாழ்க்கைத்துணைநலம்.

அஃதாவது-அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளதுகன்மையாம்(கூ-ச)

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்கைத் துணை.

(க-ரை.) இல்லறத்திற்குத்தக்க நற்குணநற்செய்கை உடையவளாகித் தன்னைக்கொண்ட கணவன் வரவுக்குத்தக்க செலவுசெய்பவள் இல்வாழ்க்கைக்குத் துணையாவாள்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(க-ரை.) ஒருவன் பெறும்பேறுகளுக்குள் கற்புடைய மனைவியைப் பார்க்கிலும் எவையிருக்கின்றன?

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

(க-ரை.) கற்பு என்னும் கீர்த்தியை விரும்பிய மனைவியில்லாதவர்க்குத் தமது பகைவர்முன் சிங்கம்போலும் பெருமிதநடை இல்லை.

(இச்செய்யுளால் மக்களோடு மகிழ் எனக்கூறியதாம்.)

எழுமைப்பிறப்புந் தீவினைவந் தெய்தாச்சிறப்புந்தென்புலத்தார்
முழுதுமுவக்குங்கடன்சாலமுடிக்குமாண்பும்பெறுதலினாற்
பழுதிறவங்கண்மிகப்புரிந்தும்பயந்துமைந்தர்தமையவர்க்குக்
குழுமுமனையின்முந்திருப்பவறிவுகொளுத்தல்வேண்டுமால். (கக)

எ-ம் அதி.—புதல்வரைப்பெறுதல்.

அஃதாவது - முனிவர்கடன் கேள்வியாலும் தேவர்கடன் வேள்வியாலும் தென்புலத்தார்கடன் புதல்வரைப்பெறுதலாலுமல்லது செலுத்தக்கூடாமையால், அக்கடன் செலுத்தற்பொருட்டு நல்லமக்களைப் பெறுதலாம். (குறள் சு)

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

(க-ரை.) ஒருவன் பெறும்பேறுகளுக்குள் அறியவேண்டியவைகளை அறிந்த மக்கட்பேற்றை யல்லது பிறபேற்றையாம் மதிக்கவேண்டியதில்லை.

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(க-ரை.) பழிக்கப்படாத நற்குணமுடைய புதல்வரைப் பெறுவாளுயின்; எழுவகைப் பிறப்பிலும் துன்பங்கள் அணுகா.

தம்பொருளென்பதம் மக்கள்வர்பொரு
டந்தம் வினையான் வரும்.

(க-ரை.) தம் புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர், (எனினில்) பிள்ளைதேடியபொருள் பிதாவிற்கு வருமாகையால்.

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

(க-ரை.) பிதா பிள்ளைக்குச்செய்யும் உதவியானது சபையில் கல்விபில் வல்லவன் என முற்பட்டிருக்கச்செயல்.

(இதுமுதல் இரண்டு செய்யுள் வருவிருந்து உபசரியென்றும், நன்மொழி யுரையென்றுங் கூறியதாம்.)

இடனும்பொருளுமேவலருமிருந்தும்பயனென்னேவந்த
வுடலின்பயனுகியவன்பையுறுதவிடத்துநொதுமலரும்
படர்செய்பகையுமுறவாக்கும்பற்றுமனிக்குமனைமைந்தர்
தொடர்பின்வளர்க்குமன்பதனுற்சார்ந்துமன்பின்வழுவற்க. (கஉ)

அ-ம் அதி.—அன்புடைமை.

அஃதாவது - அம்மனைவி புதல்வர் முதலாகிய சம்பந்தமுடையவரிடத்து ஆசையுடையவளுயிருக்கை. (குறள் ச)

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(க-ரை.) அன்பானது ஆசையைத்தரும், அது சிநேகத்தையுந்தரும்.

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(க-ரை.) அறியாதவர்கள் அறத்திற்கே அன்புதுணையென்பர், மறத்தை நீக்குதற்கும் அவ்வன்பே துணையாம்.

புறத்துறுப் பெல்லா மெவன் செய்யும்யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(க-ரை.) உள்ளன்பு இல்லாதார்க்குப் பிறவுறுப்புக்கள் இருந்துபயனில்லை.

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(க-ரை.) அன்பொடுபொருந்தியவுடலே உயிருள்ளவுடலாகும், அவ்வன் பில்லாவுடலே உயிரற்றவுடலாகும்.

வந்தவிருந்துமலராதவதனைநோக்குமுன்குழைபு
மந்தமடைவாலகத்தன்பையலர்ந்தமுகத்தால்வெளிப்படுத்திச்
சந்தமணிவாயினுந்தோன்றச்சற்றும்வஞ்சங்கலவாமே [ன்.
யுந்தனுஞ்சுவையின்மொழியென்றுமுரைத்தல்வேண்டும்பயன்வேண்டி

கூ-ம். ல-ம் அதி —விருந்தோம்பல். இனியவைகூறல்.

அஃதாவது விருந்தினரை இனியமொழியுடன் உபசரித்தலாம். (குறள் ச)

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்

(க-ரை.) விருந்தினரைக் காப்பவன் வீட்டில் இலக்குமி வாசம்பண்ணுவாள்,

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

(க-ரை.) அனிச்சப்பூ மோந்த இடத்து வாடும் விருந்தினர்முகம் வேறுபட்டுப்பார்க்க வாடும்.

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(க-ரை.) அறத்தின்வழியை அறிந்தவரது வாய்ச்சொற்களே இனிய சொற்களாம்.

சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

(க-ரை.) இனிய சொற்களானவை இருபிறப்பிலும் இன்பத்தைத்தரும்.

(இதுமுதல் இரண்டுசெய்யுள்களால் நன்றிமறவாதே எனக்கூறியதாம்)

பயன்காரணத்தைக்குறியாமற்பரிந்துகாலத்தாற்செய்த
நயன்சேர்நன்றிசிறிதேனுநாடினதற்கோரளவில்லை
பயன்காரணத்தைக்குறித்தினையும்பதத்திற்புரிந்தநன்றியையும்
வியன்பூதலத்திற்பெரிதாகவிரும்பிமதித்தல்வேண்டுமால். (கச)

கக-ம் அதி.—செய்நன்றியறிதல்.

அஃதாவது - தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாமையாம். (குறள் கூ)

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(க-ரை.) ஒருவன் பிறர் உதவிவேண்டாது செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் தந்தாலும் ஒத்தல் அரிது.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதேனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

(க-ரை.) ஒருவன் காலத்திற்செய்த உதவி சிறிதாயினும் அது உலகினும் பெரிதாகும்.

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது

(க-ரை) பின்வரும் பலனையெண்ணாமல் செய்த உதவியினது நன்மை, கடலினும்பெரிது.

நன்றிபுரிந்தோர்மற்றொருகானவைகள்புரிந்தாராயிடினு
மொன்றுமுதவியேமதித்திட்டோம்பாநவையைமறந்தவரை
யென்றுமறவாதிருந்திடுகவிகப்பிற்கருவான்மறையோரைக்
கொன்றுதிரிவோர்பிழைசிறுகக்குன்றமெனவேபிழைபெருகும். (கதி)

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
வீழுமந் துடைத்தவர் நட்பு.

(க-ரை.) துன்பத்தை நீக்கினவரது சிநேகத்தை எழுபிறப்பினும் நினைப்பர் பெரியோர்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(க-ரை.) நன்மைசெய்தவர் கொன்றாற்போலுந் துன்மைசெய்யினும், அவர் முன்செய்த நன்மை யொன்றை நினைக்க அத்துன்மையெல்லாம் கெடும்.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(க-ரை.) எவ்வகைத்தருமங்களை அழித்தவர்களுக்கும் ஈடேறும்வழியுண்டாம். செய்தநன்றியைக் கெடுத்தவர்களுக்கு ஈடேறும்வழியில்லை.

(இச்செய்யுளால் ஓரஞ்சொல்லேலெனக்கூறியதாம்.)

ஆக்கமொடுமைந்தரையளிக்குமவற்றைமருமான்வழிக்குநிலை
யாக்குமனையநடுநிலையையடுத்தோர்முதன்மூவரினொப்ப
நோக்குமதுசெய்யாதிகப்பினுனித்துக்கருவினமைத்தபயன்
போக்கியிடையேபயன்வேறுபொருந்தாபொருந்தும்பெரும்பிழையே

கஉ-ம் அதி.—நடுவுநிலைமை.

அஃதாவது-பகைவர் அயலோர் நட்பினர் இம்மூவகையோரிடத்தும் அறத்தின்வழுவாமல் ஒப்பநிற்கு நிலைமையாம்.

செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து

(க-ரை.) நடுவுநிலைமையுடையவன் செல்வமானது அவன் சந்ததிக்கு உறுதியுடைத்து.

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(க-ரை.) பெரியோர்க்கு நடுவுநிலைமையே அழகு.

(இச்செய்யுளால் அடங்கி இரு எனக்கூறியதாம்.)

இல்லினிருந்தேயைம்பொறியுமெல்லாநுகருங்காலத்துஞ்
செல்லும்வழிமெய்மொழிமனத்தைச்செல்லாதடக்கினெழுபிறப்பு
நல்லபயனேயாமேனைநல்லவினைதீவினையாகா
வல்லலறுக்குமறக்கடவுளடுக்குமமரருலகுறுமே

(கள்)

கஉ-ம். அதி.—அடக்கழடைமை.

அஃதாவது—காயமும், வாக்கும், மனமும், தீயவழியிலே செல்லாமல் அடக்குதலுடையனாயிருத்தலாம். (குறள் கூ.)

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

(க-ரை.) அடங்கியடப்பவன் அடக்கம் மலையைப் பார்க்கினும் மிகப்பெரிது.

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

(க-ரை.) ஒருவன் ஐம்பொறியடக்க வல்லவனாயின் அது எழுபிறப்பிற்கும் ஊறுதியுடைத்தாம்.

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(க-ரை) கற்று அடங்கவல்லவனாயிருப்பவனிடத்து அறக்கடவுள் அடைவன்.

(இச்செய்யுளால் நன்னடையை விடாதே எனக்கூறியதாம்)

தாழ்ந்தவருணத்துநித்தவருத்தக்கோராவொழுக்கத்தால்
வீழ்ந்தவொழுக்கத்தாழிவர்மேலாம்வருணத்துநித்திடினுஞ்
சூழ்ந்துதுணையாஞ்சிறப்பின்பஞ்சாக்குமதனாலுயிர்தனினும்
வாழ்ந்தவொழுக்கமோம்பிடுகவழுக்கினிடும்பையேதருமே. (கஅ)

கச-ம் அதி.—ஒழுக்கழடைமை.

அஃதாவது—தங்கள் தங்கள் வருணச்சிரமங்களுக்குச் சொல்லப்பட்ட ஆசாரத்தை உடையவனாயிருக்கையாம். (குறள் சு.)

ஒழுக்கம் விழுப்பந் தரலா லொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

(க-ரை.) ஆசாரமானது சிறப்பைத்தரலால் அவ்வாசாரம் உயிரினும் மேலானது.

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந் தோம்பித்,
தேரினு மஃதே துணை.

(க-ரை.) ஆசாரத்தைக் காக்கக்கடவன் அவ்வாசாரமே தனக்கு துணையாம்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

(க-ரை.) ஆசாரமேகுலமாம். அவ்வாசாரமில்லாமையே குலவீனமாம்.

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

(க-ரை.) ஆசாரமானது தருமத்திற்குக் காரணமாகும், தீயவாசாரமானது துன்பத்தைக் கொடுக்கும்.

(இதுமுதல் இரண்டு செய்யுள்களால் பரதாரபோகம் விரும்பாதே எனக்கூறியதாம்.)

காமங்குறித்துப்பாவத்திற்கலந்தபேதையாருள்ளும்
வாமங்கனிந்தபிறன்மனையைமதிக்கும்பேதையோர்பயத்தாற்
றுமங்கிழிக்குமறம்பொருள்போற்சற்றுமின்பமுறாததனற்
றேமங்குரிப்பப்பிறன்மனைவிதோள்காமுறுதல்சூழ்மலே. (கக

கரு-ம் அதி.—பிறனில்விழையாமை.

அஃதாவது-காமமயக்கத்தினுலே பிறனது மனையாளை விரும்பாமையாம். (கு. இ. ெ

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

(க-ரை.) பிறன்மனைவியை யிச்சித்து நடக்கும் தன்மையானது பெரியோரிடத்தில்லை.

அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(க-ரை.) பிறன்மனைவியை இச்சித்து நடப்பவரைப்போல அறிவீனரில்லை.

பகையேபழியேபாவமேபயமேநான்குந்தினங்கொடுக்குந்
தகையார்பெருமைமுழுதழிக்குஞ்சார்ந்தபிறனில்விழைவொழிந்தோர்
தொகையாரறமேபொருளின்பந்தோலாப்பெருமையொடும்வாழ்வர்
நகையாலதனைக்கனவிடத்துநவிற்றியிடினுந்தீங்காமே. (உ

எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந்
தோரான் பிறனில் புகல்.

(க-ரை.) தினையளவும் அறியாதவனுகப் பிறன் மனையாளிடத்திற் செல்லுதல் எவ்வளவு சிறப்புடையராயினும் பிரயோசனமில்லை.

பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(க-ரை.) பிறன்மனைவியைச் சேர்பவனிடத்தில் பகை பாவம் அச்சம் பழி இந்நான்கு குற்றங்களும் விட்டு நீங்கா.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனென்றே வான்ற வொழுக்கு.

(க-ரை.) பிறன்மனைவியை இச்சியாமையே பெரியோர்க்குத் தருமம்.

(இச்செய்யுளால் சாந்தனுகஇரு எனக் கூறியதாம்.)

வெறுப்பவொருவன்காரணத்தான்மிக்கமடத்தாற்புரிபிழையைப்
பொறுப்பினதுவேபேரறமாம்புகழுநிறையுமிகவளருங்
கறுப்பொன்றறியாவறிவினர்கள்கருத்தின்மகிழ்ச்சியுளவாகு
மொறுப்பின்வருவதொன்றில்லையதனற்பொறுமையுயிர்த்துணையாம்.

கசு-ம். அதி.—பொறையுடைமை.

அஃதாவது - காரணமற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தமக்குத் தீங்குசெய்தவிடத்துத்தாமும் அதனை அவனுக்குச்செய்யாது பொறுத்தலுடையராதலாம். (குறள் இ)

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

(க-ரை) வெட்டுவோரைத்தாங்கு நிலம்போல இகழ்வாரைப் பொறுத்துக் கொள்ளுதலே தலைமையான தருமம்.

இன்மையு ளின்மை விருந்தோரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(க-ரை:) தரித்திரத்திலே தரித்திரமாவது விருந்தினரைக் காப்பாற்றுமையே வல்லமையிலே வல்லமையாவது அறிவீனர்செய்த குற்றத்தைப்பொறுத்தலே.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

(க-ரை) நிறைமையை வேண்டுவானாகில், பொறுமையைக் காக்கக்கடவன்.

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

(க-ரை.) பிறர்குற்றங்கண்டு தண்டித்தவர்க்கு ஒருநாளையின்பம், பொறுத்தவர்க்கு உலகம் அழியுமளவும்புகழ்.

துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ லேற்கிற் பவர்.

(க-ரை) தீயவழியில் நடப்பவரது கொடுஞ்சொற்களைப் பொறுப்பவர் துறவிகள்போலப் பரிசுத்தகுணமுடையவர்.

(இச்செய்யுளால் பொருமை கொள்ளாதே எனக் கூறியதாம்.)

ஒழுக்காறெழுக்கும்பொருளனைத்துமொழிக்குமிம்மைமறுமையினும்
வழுக்காதனைத்தமுறுவிக்குமருங்குளார்க்குங்கேடுறுக்கு
மிழுக்காறுடையவெரிநிரையத்தேய்க்குமிதனாலமகண்டா
வழுக்காறுயபெரும்பகையையமாரிடத்தும்புரியற்க. (உஉ)

கள-ம்: அதி.—பொறாமையுடைமை.

அஃதாவது -பிறர்செல்வம் முதலானவை கண்டவிடத்துப் பொருமைப்படாமையாம். (குறள் சு.)

ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

(க-ரை.) ஒருவன் பொறுமையில்லாமையே நல்லவழியாகக் கொள்ளக்கடவன்.

அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்கம்,
பேணு தழுக்கறுப் பான்.

(க-ரை.) பிறன்செல்வத்தைக்கண்டு பொறுமைகொள்வோன் மறுமைக்குத் தருமமும் இம்மைக்குச் செல்வமும் வேண்டாதான் என்று சொல்லப்படுவான்.

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ-
மூண்பதூஉ மின்றிக் கெடும்.

(க-ரை) பிறருக்குக் கொடுப்பதைக் குறித்துப் பொறுமைகொள்பவனது சுற்றமானது, உண்ண ஆடையும் உண்ணச்சோறும் இல்லாமற்கெடும்.

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(க-ரை.) பொறுமையென்னும் பாவியானவன் பொறுமைகொண்டவனது செல்வத்தைக்கெடுத்து அவனை நரகத்தில் தள்ளுவான்.

(இச்செய்யுளால் பிறர்பொருள் கவராதே எனக் கூறியதாம்.)

படுமுன்பொருட்குப்புதுவெள்ளம்பழையநீரையுடைப்பதுபோற்
கெடுதிபயக்குங்குடிகெடுக்குங்கெடாதபெருந்துன்பமும்விளைக்கும்
வடுமிக்கியன்றபழியென்றும்வளர்க்குமதனன்மறுமையினு
நடுவுநிலையிற்றிரிந்தொருவர்நன்பொனைகவரக்கருத்தெண்ணேல். (உ

கஅ-ம். அதி.—வெஃகாமை.

அஃதாவது - பிறர்பொருளை வௌவுதற்கு நினையாமையாம். (குறள் க

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபோன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(க-ரை.) நடுவுநிலைமையில்லாமல் பிறர்பொருளை இச்சித்தால் அவ்விச்சையானது குடியைக்கெடுத்துக் குற்றத்தையும் கொடுக்கும்.

சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(க-ரை.) பேரின்பத்தை இச்சிப்பவர் சிற்றின்பத்தை இச்சித்துத் தருமம் அல்லாதவற்றைச்செய்யார்.

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை.
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(க-ரை.) குறையாத செல்வத்திற்கு காரணம் யாதென்றால் பிறன்பொருளை விரும்பாமையாம்.

இச்செய்யுளால் பிறரைப் பழித்துரையாதே எனக்கூறியதாம்.)

கேளிர்பிரிவர்நட்பினராய்க்கெழுமுவாருமிலராவர்
மூளும்வடுச்சொனேராகமொழிவரெவருமாதலினு
ளுளுமறத்தைக்கொன்றனந்தகவைகள்செயினுமெதிர்நின்று
மாளவுரைசெய்யினுஞ்செய்யேல்மைந்தாமறந்தும்புறங்கூறல். (உச)

கசு-ம். அதி.—புறங்கூறுமை.

அஃதாவது – காணுதவிடத்தே பிறரை இகழ்ந்து பேசாமையாம். (கு. கூ.)

அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

(க-ரை.) ஒருவனைக் காணுதவிடத்து இகழ்ந்து, கண்டவிடத்துப் புகழ்ந்து பேசுதல், தருமத்தை அழித்து அதருமத்தைச் செய்தலினும் குற்றம்.

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(க-ரை.) ஒருவனை முன் இகழினும் பின் இகழாதிருக்கக்கடவன்.

பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்.

(க-ரை.)பிறன்குற்றத்தைச் சொல்லுவோனது குற்றம் பிறனுல்சொல்லப்படும்.

(இச்செய்யுளால் வீண்மொழிகூறுதே எனக்கூறியதாம்.)

தகைமையுடையவறிவினர்கள்சாலவெறுப்பச்செயுமன்றி
நகையுட்பினைக்கும்வெளிற்றறிவைநவிற்றுநன்குமதிப்பொழிக்கு
மிகைசெய்விழுப்பந்தபுமதனுல்விழையுமறமாதிகள்பயவா
வகையினுரைக்கும்பயனிலசொன்மைந்தாவுரையேயுரையேலே (உரு)

உல-ம். அதி.—பயனிலசொல்லாமை.

அஃதாவது - தமக்கும் பிறர்க்கும் அறம்பொருள் இன்பங்களுள் ஒன்றையும் தாராத சொற்களைச் சொல்லாமையாம். (குறள் க.)

பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மேள்ளப் படும்.

(க-ரை.) பயனில்லாச் சொற்களைச் சொல்பவன் யாவராலும் இகழப்படுவான்.

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(க-ரை.) நற்குணமுடையோர் பயனில்லாச் சொற்களைச்சொன்னுல் அவர் மேன்மை குறையும்.

பயனில்சொற் பாராட்டு வானை மகனெனன்
மக்கட் பதடி யெனல்.

(க-ரை.) பயன்படாச்சொற்களைச் சொல்பவனை மக்களுக்குள்ளே பதரென்று சொல்க.

வேறு (இச்செய்யுளால் தீமைசெய்யற்கவெனக் கூறியதாம்.)

பாயபல்பகைக்குந்தப்பிப்பாரிடையுய்யலாகு
மேயவெக்கதிசென்றாலும்விளிதராதுடங்குசென்றே
யாயநன்றனைத்துங்கொன்றங்கருந்துயர்பலவுநல்குந்
தீயவல்வினையின்யாதுஞ்செய்யற்கவேமகண்டா. (உக)

உக-ம். அதி.—தீவினையச்சம்.

அஃதாவது – பாவங்களாயுள்ளவைகளைச் செய்தற்கு அஞ்சுதலாம். (கு-கூ.)

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(க-ரை.) பாவமானவை துன்பங்களைக் கொடுத்தலால், அவைகள் அக்கினியிலும் கொடியன.

எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(க-ரை.) எவ்வகைப்பகையை அடைந்தவர்களும் கடைத்தேறுவர், தீவினைப் பகையை அடைந்தவர்கள் கடைத்தேறார்.

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

(க-ரை.) தன்னைக்காக்க விரும்பினால் பிறனிடத்தில் எவ்வளவும் பாவம் செய்யாதிருக்கக்கடவன்.

(இச்செய்யுளால் பரோபகாரஞ்செய் எனக் கூறியதாம்.)

ஊருணிநடுவூர்நின்றவொண்பழத்தருவும்போலப்
பேருறுமுயற்சிதன்னாற்பெருக்கியபொருள்களெல்லாஞ்
சீருறயாவர்மாட்டுஞ்செலுத்தியொப்புரவினிற்றி
யாருமொப்புரவாற்கேடுண்டாயினுமதுவுநன்றே. (உஎ)

உஉ-ம். அதி.—ஒப்புரவறிதல்.

அஃதாவது – உலகநடையை அறிந்துசெய்தலாம். (கு-ள் ௪)

தாளாற்றித்தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(க-ரை.) முயற்சிசெய்து சம்பாதித்தபொருளெல்லாம் உபகாரம் செய்யும் பொருட்டு.

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(க-ரை.) அறிவாளர் செல்வமானது ஊரார் உண்ணுங்குளத்திலே நீர்நிறைந்தாற்போலும்.

பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றுற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

(க-ரை.) செல்வம் உபகாரம் செய்பவரிடத்தில் உண்டாயில் நடுவூரிலே மரம்பழுத்தாற் போலும்.

ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து

(க-ரை.) ஒருதவிசெய்தலால் கேடுவருமெனில், அவ்வுதவியைத் தன்னை விற்றுகினும் செய்யக்கடவன்.

(இதுமுதல் மூன்று செய்யுட்களால் உதாரணுக இரு எனக்கூறியதாம்)

இரப்பவன்வாளாதேதகவிலனெனுமெவ்வங்கூரு
நிரப்பினைநிரப்பனன்றுமிதனினன்றுவதாகு
மிரப்பவனிலனென்றாவியம்பியவெவ்வஞ்சொல்லென்
றிரப்பினும்பிறர்பாற்கூறுதிரக்கமொடுதன்மைந்தா. (உஅ)

அருத்தியினிலனென்னுமுனளித்தலுமிலனென்றப்பா
லுரைத்திலனுகச்சாலவுதவலுமேற்கின்றனும்
வருத்தமிலனென்னுமைவழங்கிடவரையில்செல்வம்
பொருத்தலுமொன்றினென்றுபுகழ்மிகவிளங்கிநிற்கும். (உக)

நலமிகுசெல்வம்பெற்றுநல்குரவினரைக்காத்த
லினறமாதிசீர்த்தியிலனெனப்பிறர்சொலெவ்வ
வலனுரைக்கஞ்சியேனும்வறியனேயிலனென்றெள்ளா
தலர்புகழ்பயனும்வேண்டினுக்கையுமளிக்கமைந்தா. (ஈ)

உக-ம். அதி.—ஈகை.

அஃதாவது-வறியவராய் இரந்தவர்க்கு இல்லை என்னுமல் கொடுத்தலாம். (கு. உ.)

நல்லாரெனினுங் கொளறீது மேலுல
மில்லெனினு மீதலே நன்று.

(க-ரை.) யாசித்தல் நல்லது என்றாலும் வாங்குதல் குற்றமே, கொடுத்தலால் முத்தி இல்லை என்றாலும் கொடுத்தல் நல்லதே.

இலனென்னு மேவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(க-ரை.) நற்குடியில் பிறந்தவரிடத்தில் இல்லையென்னுமையும், கொடுத்தலும் உண்டு.

(இச்செய்யுளால் கீர்த்தியைத்தேடு எனக்கூறியதாம்.)

சாதல்வந்தடுத்தகாலுந்தனக்கொருசாதலின்றிப்
பூதலமிறக்குங்காறும்புகழுடமிருக்குமந்தக்
கோதறுபுகழின்யாக்கை கொடையினாற்செல்வங்கூர
வாழ்தலையுடையாரன்றேவானமும்வணங்குநீரார். (௩௧)

உச-ம். அதி.—புகழ்.

அஃதாவது — இல்வாழ்க்கை முதல் ஈகை ஈறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தில் தவறாதவர்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகத்திலே செய்தபடியே நிற்பதாகிய கீர்த்தியாம். (குறள் ச.)

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(க-ரை.) கொடுத்தலால் கீர்த்தியுண்டாக வாழக்கடவர் அக்கீர்த்தியை அல்லாமல் மக்களுயிர்க்கு இலாபம் இல்லை.

ஒன்றா வுலகத் துயாந்த புகழல்லாற்
போன்றாது நிற்பதொன் றில்.

(க-ரை.) உலகத்தில் அழியாமல் நிற்பது புகழே அல்லாமல் வேறொன்று இல்லை.

நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு.

(க-ரை.) உலகில் அழியாது நிற்கும் புகழை ஒருவன் செய்வானாகில், தேவலோகம் தேவர்களைத் துதியாது அவனையே துதிசெய்யும்.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

(க-ரை.) புகழுடம்பிற்குப் பெருக்கமாகும் வறுமையும், அவ்வுடம்பு நிலைபெறுவதாகும் மரணமும் அறிவில்லார்க்கு இல்லை.

இல்லறவியல் முற்றிற்று.

பொருட்பால்.

பொருளாவது — அறவழியினாலே சேர்க்கப்பட்ட பொன் மணி முதலானவையாம்.

அரசியல்.

அரசாவது — உலகத்திற்கு உயிர் எனச்சிறந்த அரசனது தன்மையாம். அவ்வரசின் இயலை இருபத்தைந்து அதிகாரங்களினாலே சொல்லத்தொடங்கி முதலிலே இறைமாட்சி சொல்லலாயினார்.

(இது முதல் நான்கு செய்யுள்களால் இராஜாங்கம்பேணுவனைக் கூறியதாம்.)

உரைசெயுமறத்தினுற்றுவொருகுடைநிழற்றமுந்நீர்த்
தரைமுழுதாளவேண்டிற்றகைபெறுமமைச்சுநாடு
புரையறுமரணேமிக்கபொருள்படைநட்பென்றுறும்
வரைசெயப்படாதயாக்கையுறுப்பெனமதித்துக்கோடி. (கூஉ)

கூகூ-ம். அதி.—இறைமாட்சி.

அஃதாவது - அரசனது நற்குணமும் நற்செய்கைகளுமாம். (கு-ள் அ)

படைகுடி கூழமைச்சு நட்பா ணுறு
முடையா னரசரு ளேறு.

(க-ரை.) சேனை நாடு பொருள் அமைச்சு நட்பு அரண் இவ்வாறு அங்கங்களையும் உடையவன் அரசருள் ஆண்சிங்கம்போன்றவன்.

வினையினஞ்சாமைநிற்றல்வினையருக்களித்தல்செய்யும்
வினையிடைமனமேற்சேறல்விளங்கியவறிவுவல்லே
வினையினைமுடித்தலாண்மைவெங்கோலையாதிநீக்கல்
வினைவளர்மானமற்றும்வேந்தருக்கியல்புமைந்தா. (கூகூ)

அஞ்சாமை யீகை யறிவுக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

(க-ரை.) அரசனுக்கு இயல்பாவது அல்லமை ஈகை அறிவு மனவெழுச்சியாம்.

தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவர்க்கு.

(க-ரை.) விசைவு உடைமை, கல்வி உடைமை, வலி உடைமை இம்மூன்றும் அரசனைவிட்டு நீங்காவாம்.

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

(க-ரை.) தன் அறத்தில் இருந்து பாவங்களைக்கடிந்து வலிமையினாலே தவறுதமானம் உடையவன் அரசன் ஆவான்.

குடிதளர்வுற்றகாலைகொள்பொருளாறிலொன்றும்
விடுவதுசெய்துதங்கள்விழுக்குறைமுறைசொல்வார்க்குத்
தடையறக்காட்சிநல்கித்தண்ணியவின்சொல்காட்டி
வடுவறவிடித்துச்சொல்வார்வன்மொழிபொறுத்தல்வேண்டும். (கூச)

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

(க-ரை.) அரசன் காண்கைக்கு எளியவனுகி இன்சொல் சொல்பவன் ஆனல் அவன் நிலத்தை உலகம் உயர்த்திச்சொல்லும்.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

(க-ரை.) மந்திரி முதலானவர்கள் கடிந்து உத்திசொல்லும் சொற்களைப் பொறுக்கும் அரசன் குடைநிழற் கீழ் உலகம் தங்கும்.

கொடையளி செங்கோல் குடியோம்ப னன்கு
மூடையானும் வேந்தர்க் கொளி.

(க-ரை.) கொடுத்தலும் இன்சொல்சொல்லுதலும் செங்கோல்செலுத்துதலும் குடிகளைக்காத்தலும் இந்நான்கு செயல்களையும் உடையவன் அரசருக்குள் விளக்கம் ஆவான்.

செருவிளைட்டலைக்கொன்றுதிறைகொண்டுநாடுகாத்துப்
பொருளினையீட்டிக்கள்வர்புல்லலர்சுற்றமாதி
பருகுதலிலாமைக்காத்துப்பயிலறமாதிமூன்றில்
மருவுறவிடுத்துச்செங்கோல்வளர்ப்பதுமாட்சியாமே. (நஉ)

இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(க-ரை.) பொருள் வரவுதேடலும் பொருளைக்காத்தலும் அப்பொருளை அறத்தின்வழிச் செலவு செய்தலுமான இவைகளில் வல்லவன் அரசனுவான்.

(இச்செய்யுளால் கற்றுணர்ந்தோழுகு எனக் கூறியதாம்)

ஐயமெதிரிவேயென்னுமவையறவறநூனீதி
வையமல்யானைபாய்மாவன்படைத்தொழினூலாதி
பையவேகற்றுக்கற்றபண்பினரோடுநாளு
முய்யவேயளவளாவியுரைத்தவாநிற்றல்வேண்டும். (நஊ)

சூடி-ம். அதி.—கல்வி.

அஃதாவது - அவ்வரசன் தான்கற்றற்கு உரிய நூல்களைக்கற்றல் அவையாவன-அறநூலும், நீதிநூலும், தேர், யானை, குதிரை, படைக்கலம் எனப்பட்ட இவற்றின் நூல்களும் மற்று முதலானவையாம்.

கற்க கசடறக் கற்பவை கற்றபி (கு-ள் நு)
னிற்க வதற்குத் தக.

(க-ரை.) ஒருவன் கற்கப்படும் நூல்களைக் குற்றம் அறக் கற்கக்கடவன் கற்றபின் கல்வி அறிவிற்குத் தக்கபடி நிற்கக்கடவன்.

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(க-ரை) கணிதநூற்களும் இலக்கணநூற்களும் மனிதர்களுக்குக் கண்களாகும்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(க-ரை.) கற்றவர்க்கு எந்நாடும் தனது நாடாம் அப்படியிருக்க ஒருவன் மரணபரியந்தமும் கற்காமல் இருப்பது என்ன.?

(இச்செய்யுளால் கல்லாமை யொழிகவெனக் கூறியதாம்.)

உடல்வயத்தாகுஞ்சாதிவுயர்ந்தவர்சாதிதாழ்ந்தோர்
நிடமுறவுயிரிலேடுசெல்லுறுங்கல்விதம்மா
லடர்தரும்பெருமையெய்தாராதலாலகக்கண்ணுகித்
தொடர்வுறுங்கல்விகல்லாத்தொழிலினைவிடவேவேண்டும். (கஎ)

சுக-ம். அதி.—கல்லாமை.

அஃதாவது - கற்றலைச்செய்யாமையின் இழிவாம். (கு-ள் உ)

நுண்மா நுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

(க-ரை.) நூல் அறிவு இல்லாத எழுச்சியும் அழகும் சுண்ணம்புச்சாந்தால் அலங்கரிக்கப்பட்ட பாவையின் எழுச்சியும் அழகும் போலுமாம்.

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ற ரனைத்திலர் பாடு.

(க-ரை.) கல்லாதவர் மேலாகியகுலத்தில் பிறந்தாராலும் கீழ்க்குலத்தில் பிறந்து கற்றவரை ஒப்பாகார்.

(இச்செய்யுளால் கற்றறிந்தார் சொற்கேளெனக் கூறியதாம்.)

வறுமையான்மடமைதன்னல்வருந்திநெஞ்சழியுங்காலை
வுறுதிசெய்துணையாங்கற்றவுணர்வினைவளர்க்குமென்று
மிறுதியில்லாதவின்பமீட்டுமாதலினுற்கற்று
மறுவறுமொழுக்கமுள்ளார்வாய்மொழிகேட்டல்வேண்டும். (கஅ)

சஉ-ம். அதி.—கேள்வி.

அஃதாவது- கேட்கத்தகும் நூலின் பொருள்களைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்குதல். (கு-ள் ச)

செவியுண்விற் கேள்வி யுடையா ரவியுணவி
னன்றுரோ டோப்பர் நிலத்து.

(க-ரை) கல்வி கேள்வியை உடையவர் பூமியில் இருப்பினும் தேவரை ஒப்பாவார்.

கற்றில் னுயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுங் துணை.

(க-ரை.) கல்லாதவன் ஆனலும் கற்றவர்சொல்லும் நூல்களைக் கேட்கக்கட வன், அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சிவந்த இடத்துத் துணையாம்.

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

(க-ரை.) நல்லவர்கள் வாயில் பிறக்குஞ்சொல் ஒருவர்க்கு ஆபத்து வந்த விடத்தில் சேற்றுநிலத்தில் ஊன்றுகோல்போல் உதவியாம்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(க-ரை.) ஒருவன் நல்லவைகளைக் கேட்கக்கடவன் அவை மிகுந்த பெரு மையைத்தரும்.

(இதுமுதல் மூன்றுசெய்யுள்ால் நுண்ணறிவிற்பயில் எனக்கூறியதாம்.)

இழிந்தவனுயர்ந்தகொன்றையியம்பினுமுயர்ந்தோன்வாயி
விழிந்தகொன்றுறினுமுள்ளவியல்பறிந்தோம்பிநீக்கிப்
பொழிந்தனப்பிறர்தாங்கூறும்புலப்படாப்பொருளுந்தெள்ளி
வழிந்தனத்தெளியக்கேட்போர்மனங்கொளப்புகறல்வேண்டும்.

சுருக்கம். அதி.—அறிவுடைமை.

அஃதாவது - கல்வி கேள்விகளினுல் ஆகிய அறிவோடு உண்மை அறிவு உடையவன் ஆதலாம்.

(கு-ள் எ)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(க-ரை.) எந்தப்பொருளை எவர் வாயினுல் கேட்பினும் அந்தப்பொருளின் உண்மைப்பொருளைக் காண்பதே அறிவாம்.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

(க-ரை.) தன்னுல் சொல்லப்படும் பொருளை எளிதாகச்சொல்லிப் பிறர் சொல்லும்பொருளை அறிவதே அறிவாம்.

எவ்வகையுலகத்துள்ளாரியல்புடனெழுகுன்ரு
ரவ்வகையொழுகினின்றேயழிவனவருமுன்காத்துத்
தவ்வெனும்பழிபாவங்கடபுதியெய்தாமையஞ்சிச்
செவ்வியநெறியினுளுஞ்செல்லுகபொறிகளைந்தும்.

(கு

சென்ற விடத்தாற் செலவிடா தீதோரீஇ
நன்றின்பா லய்ப்ப தறிவு.

(க-ரை.) அறிவானது மனம்போனவழியில் போகவிடாமல் நன்மையிடத்து விடுவதே அறிவாம்.

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(க-ரை) உலகமானது எவ்வகையினுலே நடப்பதாய் இருக்கின்றதோ அவ்வகையிலே தான்நடப்பது அறிவாம்.

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

(க-ரை) அஞ்சத்தகுவதற்கு அஞ்சாமை அறிவு இல்லாமையாம், அஞ்சத்தகுவதற்கு அஞ்சுதல் அறிவு உடைமையாம்.

எதிரதாக் காக்கு மறிவினுர்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

(க-ரை.) வரும் துன்பங்களை முன்னமே அறிந்து காத்துக்கொள்ளும் விவேகிகளுக்குத் துன்பம் இல்லை.

நலமிகவுயர்ந்தோர்தம்மைநண்புறத்தழுவிக்கொள்க
நிலவியகயத்துப்பூவைநிகர்த்தராவுயர்ந்தகோட்டி
னலரெனவவர்பானிற்கவாக்கமிக்கடுத்தகாலை
மலர்வதும்வறங்கூர்காலைகூம்பலுமொழிகமைந்தா. (சக)

உலகந் தழீஇய தோட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

(க-ரை.) ஒருவன் உயர்ந்தோரைச் சிநேகிப்பது அறிவாம், கட்பின் இடத்து முன் முகமலர்ந்து பின்முகம்குவிதல் இல்லாமையும் அறிவாம்.

(இதுழுதல் முன்றுசெய்யுளால் தவறோழித்தொழுகு எனக்கூறியதாம்.)

அருந்தவர்குரவர்முன்னோரந்தணருயர்ந்தோர்தம்பாற்
றிருந்தியவணக்கமின்மைசெருக்குவேண்டியபக்கத்தும்
பொருந்தியபொருள்கொடாமைபொங்கியவெகுளிகாமம்
விருந்துசெய்கழிகண்ணோட்டமிலையெலாம்விடுகமைந்தா. (சஉ)

சசு-ம். அதி.—தற்றங்கடிதல்.

அஃதாவது - காமம் குரோதம் உலோபம் மானம் உவகை மதம் எனப்பட்ட ஆறுகுற்றங்களையும் அரசன் தன்னிடத்தே தோன்றுமல் கடிதலாம். (கு-ள் சு)

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

(க-ரை.) மதமும் கோபமும் காமமும் இல்லாத அரசனது செல்வமானது மேலானதாகும்.

இவறலு மாண்பிறந்த மானமு மாணு
வுவகையு மேத மிறைக்கு.

(க-ரை.) கொடாமையும் நன்மையினில் நீங்கிய மானமும் அளவிலாமகிழ்ச்சியும் அரசனுக்குக் குற்றங்களாம்.

குற்றம்புரியா திருந்துபிறர்குற்றங்களைகசிறிதேனுங்
குற்றம்புரியிற்சிற்றெரிவைக்குவையையழிக்குமாறேபோற்
பற்றும்பெருவாழ்வினையழிக்கும்பகைவர்க்காக்கமிகப்பெற்க்கு
முற்றும்பெருநோயுழப்பிக்குமுனியாராணுமுனிக்கும். (சசு)

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(க-ரை.) குற்றம் வருமுன்னே காத்துக்கொள்ளாத அரசனது வாழ்வு அடினிமுன் நின்ற வைக்கோல் போலக்கெடும்.

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகுமிறைக்கு.

(க-ரை.) தன் குற்றத்தை முன்கடிந்து பிறர்குற்றத்தைப் பின்கடிவானுமே அவ்வரசனுக்குக் குற்றம் இல்லை.

கன்றுமினியபொருள்பலவுங்காதல்பகைவாறியாமே
நன்றுநுகர்கநினையென்றுநன்குமதித்துவியவற்க
நன்றிபயவாவினையினையுநண்ணுமதத்தான்முடியற்க
வென்றிவிளங்கப்புகழ்விளங்கவிழுப்பம்விளங்கவேண்டிடினே. (சச)

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

(க-ரை.) எக்காலத்தும் ஒருவன் தன்னை மதியாதிருக்கக்கடவன், நன்மையைத்தராத தொழிலை இச்சியாதிருக்கக்கடவன்.

காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

(க-ரை.) தன்னால் இச்சிக்கப்பட்ட பொருள்களையும் தன்னுடைய இச்சையையும் பகைவர் அறியாமல் அநுபவிக்க வல்லவன் ஆனால் அப்பகைவர் என்னைம்பழுதாம்.

(இதுமுதல் மூன்று செய்யுளால் உயர்ந்தோரைச் சினேகஞ்செய் எனக் கூறியதாம்.)

தண்மையறனுமிகத்தெளிந்து நூலினியல்புமுலகியல்பும்
வண்மையுறத்தேற்றிடுமாற்றல்வல்லராகிவளர்சீலந்
திண்மையறிவாயுளின்முதிர்ந்தோர்சேரநன்குமதித்திடுக
வெண்மைபுரியாதுயர்த்திடுகவியம்பும்வழியேநின்றிடுக. (சரு)

சரு-ம். அதி பெரியாரைத்துணைக்கோடல்.

அஃதாவது - அவ்வறுவகைக் குற்றங்களையும் கடிந்த அரசன் தன்னைத் தீய வழியில் விலக்கி நல்லவழியிலே செலுத்தும் பேரறிவுடையவரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதலாம்.

அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

(க-ரை.) அரசன் அறிவுடையோர் சினேகத்தைக் கொள்ளக்கடவன்.

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

(க-ரை.) தம்மைவிடப் பெரியோரைச் சினேகித்தொடத்தல் அரசன் வல்லமை பலவினுள்ளும் தலைமையாம்.

மழையின்மிகுதிமழையின்மைவளிதிப்பிணியால்வந்ததுயர்
குழைவிலமரர்தக்கோரைக்குறித்துச்சாந்தியாற்கடியா
விழைவில்பகைவர்கள்வர்வினைசெய்வார்சுற்றமிவர்களினும்
பிழையைவுபாயநான்காலுபெயர்க்கும்பெரியரெனுந்துணையே.

உற்றநோய் நீக்கி யுருவமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(க-ரை.) தன்பங்களை நீக்கும் விதம் அறிந்து நீக்கி அத்துன்பங்கள் வாராமல் காக்கவல்லவரை அரசன் சினேகிக்கக்கடவன்.

நற்பான்மையினுற்றேறவர்களானண்ணலாகுமெதிர்வினையை
யுற்பாதகங்களானறிந்தேயொழிப்பர்மனித்தரால்வருவ
பொற்பாரவரிங்கிதகுணமாசாரஞ்செயலாற்புக்கறிந்து
பிற்பாலுறச்செய்குவரதனற்பெரியோர்துணையேதுணையாகும். (சஎ)

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

(க-ரை.) பெரியோரைச் சினேகித்தல் அரசன் பெறும் பேறுகள் பலவினும் பெரியதாம்.

(இச்செய்யுள்களால் அற்பரை சிநேகியாதே எனக்கூறியதாம்.)

நல்லவினைக்குநற்பயனுந்தீயவினைக்குத்தீப்பயனு
மில்லையெனும்வல்லிழுதையருமெள்ளும்விடருந்தூர்த்தர்களுஞ்
சொல்லுநடருமுதலாகத்தொக்ககுழுவைச்சேர்ந்தொழிகின்
புல்லுமறிவைத்திரித்திருமைப்புகழுங்கெடுக்கும்புகழோடே. (சஅ

சகூ-ம். அதி.—சிற்றினஞ் சேராமை.

அஃதாவது - சிறிய இனத்தைப் பொருந்தாமை சிறிய இனமாவது கல்லதிலே கன்மையும் தீயதிலே தீமையும் இல்லை என்போரும், விடரும், தூர்த்தரு முதலாயினவரது கூட்டமாம்.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

(க-ரை.) பெரியோர் இயல்பு சிறிய இனத்திற்கு அஞ்சும் சிறியோ இயல்பு சிறிய இனத்தைச் சுற்றமாகக்கொள்ளும்,

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

(க-ரை.) நிலத்தின் இயல்பினாலே நீர் திரிந்தால்போல அவாவர் சேர்ந்த இனத்தினாலே அறிவுதிரியும்.

நல்லினத்தினூங்குந் துணையில்லைத்தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

(க-ரை.) ஒருவனுக்கு நல்ல இனத்தின் மிகுந்த துணை இல்லை தீய இனத்தின் மிகுந்த கேடுஇல்லை.

(இதுமுதல் ஐந்துசெய்யுளால் ஆராய்ந்துதொழில்செய் எனக்கூறியதாம்)

செய்யும்பொழுதேயழிபொருளிற்சிறப்பதெரப்பதிரண்டினுளொன்
றுய்யவுதவிவலிபயக்குமொண்மைவினையைத்தேர்ந்துளத்தி
னேயமகன்றவினத்தோடுமாய்ந்துதனித்தம்புரிந்திடுக
வெய்யவாக்கங்கருதிமுதல்விளிக்கும்வினையைப்புரியற்க. (சக

சஎ-ம். அதி.—தெரிந்துசெயல்வகை.

அஃதாவது - அரசன் தான் செய்யும் தொழில்களை ஆராய்ந்து செய்யுந் திறமாம்.

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

(க-ரை,) ஒருவன் அழிவதையும் ஆவதையும் இலாபத்தையும் ஆராய்ந்து தொழில்செய்யக்கடவன்.

தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள்யாதொன்று மில்.

(க-ரை.) நல் இனத்தோடு ஆராய்ந்து செய்யும் அரசருக்குப் பெறுதற்கு அரியபொருள் ஒன்றும் இல்லை.

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

(க-ரை.) அறிவுடையோர் இலாபத்தை நினைத்து முதல் இழக்கும் தொழிலைச் செய்யார்.

வலியேகாலப்வினையிவற்றுன்மாற்றுன்றனக்குமுனக்குமுள
பலவாநிலையும்வினைதொடங்கும்பண்புமதற்காமிடையூறும்
விலகாததனைவிலக்குவதுவெல்லுமாறும்வென்றதனு
லுலவாப்பயனுமுதலினைத்தூமோர்ந்துதெளிந்தேவினைசெய்க. (ருவ)

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ நாறு.

(க-ரை) அரசன் யோசியாமல் பகைவர்மேல் செல்லல் அப்பகைவரை நிலைபெறச்செய்தலாம்.

பெரியமுயற்சிவினைபயனாம்பேணுவினையேபயன்சிறிதா
மரியவினையேயின்றுயரமாக்கும்வினையேபுரிந்தாலும்
பெரியமுயற்சிமுதலாகப்பேசும்வினைக்குமறுதலையா
முரியவினையைவிடுத்தாலுமுலவாப்பெருமையொழியுமே. (ருக)

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

(க-ரை.) அரசன் செய்யத்தகாதவற்றைச் செய்தலாலும் செய்யத்தக்கவற்றைச் செய்யாமையாலும் கெடுவான்.

கொடுத்தல்பொருள்வேட்கையனிடத்துங்குளிர்சொற்செவ்வியான்ம
னடுத்துப்பிறரோடமாற்றியயர்ந்தானிவர்பாங்கினும்வேறு [டிய
படுத்தறுணையாம்படையினனின்பகுதியொடுசேரானிவர்க
ளிடத்துமொறுத்தலிவற்றின்வாவிவர்கீழ்மக்களிடத்தினுமாம். (ருஉ)

எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

(க-ரை.) அரசன் செய்தொழில்ல முடிக்கும் உபாயத்தை எண்ணிச் செய்யக்கடவன் தொடங்கியபின் எண்ணுதல் குற்றம்.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

(க-ரை.) முடியும் உபாயத்தால் வருந்தாமுயற்சியானது பலர்காத்தாலும் குற்றம்படும்.

வலியாரானகாலத்துவழங்கலாதிமுன்றனையு
மெலியாரிடத்துச்செய்திடலுமெலியாரானகாலத்து
வலியாரிடத்திறைத்தலையும்வகுக்கின்வேந்தர்க்கவைமைந்தா
நலிவாமதனுலவரவர்பானடத்துமுறைதேர்ந்தியற்றிடுக. (ருஉ)

நன்குற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

(க-ரை.) அவரவர் குணங்களை அறிந்து இசையச் செய்யாவிடில் நன்மை செய்தலுள்ளும் குற்றம் உண்டாம்.

எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

(க-ரை.) அரசர் பொருந்தாத உபாயங்களைச் செய்வாரு லல் உலகம் ஏற்றுக்கொள்ளாது.

(இதுமுதல் மூன்றுசெய்யுள்களால் வலிமைகண்டு தொழில்செய்எனக் கூறியதாம்.)

வினையின்வலியாதிகணுன்கும்வேறுவேறுசீர்தூக்கி
நினதுவலிமிக்குழிவினையைநிகழ்த்துநிகர்த்தகாலத்துப்
புனையும்வென்றியுருவிழுக்கும்பொருந்துமதனுலவ்விடத்து
வினையுந்தோல்வியுறுங்குறைந்தவிடத்தும்வினையையெண்ணற்க (ருச)

சுஅ-ம். அதி.—வலியறிதல்.

அஃதாவது - அவ்வுபாயங்களுன் தண்டம்செய்யக்குறித்த அரசனவன் நால்வகைவலிமைகளையும் அளந்து அறிதலாம். (குறள் ஏ)

வினைவலியுந் தன்வலியு மாற்றுன் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

(க-ரை.) தொழில்வலிமையும் தன்வலிமையும் பகைவன்வலிமையும் துணை வலிமையும் ஆராய்ந்து தன்வலிமிகுமாகில் அரசன் அத்தொழிலைச் செய்யக் கடவன்.

உடைத்தம் வலியறியா ருக்கத்தி னுக்கி
விடைக்கண் முரிந்தார் பலர்.

(க-ரை.) தமது வலிமையைத் தெரிந்துகொள்ளாது வலியவரோடு போர் செய்து இடையில் புறங்கொடுத்த அரசர்பலர்.

குறைந்தவலியராயிடினுங்கொற்றமைந்தர்பலர்கூடி
னிறைந்தவலியென்னுமதனினாகிதாழிகபலரொடுளத்
துறைந்தவூக்கந்தணைக்கொண்டேபுற்றினதுவலியளவி
னிறந்தும்மினேமேனடவற்கவிறவாவென்றிவேண்டிடினே. (நிரு)

பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

(க-ரை.) மயில் இறகு ஏற்றப்பட்ட வண்டியும் அச்சுமுறியும் அவ்விறகை அதிகமாக ஏற்றினால்.

நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறங் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

(க-ரை.) நுனிக்கொம்பில் ஏறினவர் அவ்வளவைக் கடந்து ஏறுவாகில் அவருக்கு முடிவுவரும்.

வந்தபொருளிற்காற்கூறுவருமேலிடார்நீக்குதற்கமைத்து
மைந்தவிருகாணினக்காக்கிமற்றைகாலேவழங்கிடுக
சிந்துநெறிகளகலாமற்சேருநெறிகள்சுருங்கிடினு
கந்தலிலதாமொப்பினுமாடினதிகச்செலவிழுக்காம். (நிசு)

ஆற்றி னளவறிந் தீக வதுபோருள்
போற்றி வழங்கு நெறி.

(க-ரை.) தனக்கு உள்ள அளவு அறிந்து கொடுக்கக்கடவன் அக்கொடை பொருளைக்காப்பாற்றும் வழியாம்.

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லைப்
போகா றகலாக் கடை.

(க-ரை.) அரசனுக்குப் பொருள்வரவு சிறுத்தாலும் சிலவு மிகாவிடில் கெடுதி இல்லை.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கையுளபோல
வில்லாகித் தோன்றுக் கெடும்.

(க-ரை.) தனக்கு உள்ள பொருள் அளவை அறிந்து வாழாதவன் வாழ்கை உள்ளவைபோலத்தோன்றி அழியும்.

(இதுமுதல் இரண்டு செய்யுள்களால் பருவம்பார்த்து தொழில்செய் எனக்கூறியதாம்.)

ஆற்றன்மூன்றுமுபாயங்களுன்குமிடத்தோடமைந்திடினும்
போற்றினைக்குவென்றியுறும்பொழுதுதேர்ந்துவினைபுரிக
வேற்றகாலம்வருமளவுமெண்ணியிருக்கவதுமைந்தா
னீற்றுச்சமர்க்குப்பின்வாங்கும்வெற்றித்தகேர்யாகுமால் (நிஎ)

சகஉ.மீ. அதி.—காலமறிதல்.

அஃதாவது – வலிமையிலுலே மிகுதி உடையவனுய்ப் பகைவன்மேல் போர்க்குச்செல்லும் அரசன் அச்செல்லுதலுக்கு ஏற்றகாலத்தினை அறிதல். (க)

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

(க-ரை.) காலம் அறிந்துசெய்தால் அரியதொழில்கள் உளவோ?

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

(க-ரை.) பூமி முற்றும் ஆளநினைக்கும் அரசர் பகைவரை வெல்லக் காலம் பார்த்திருப்பார்.

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

(க-ரை.) ஆடுபின்வாங்கல் பாய்தற்பொருட்டு, வலிமை உள்ள அரசன் பின்வாங்குதல் வெல்லும் பொருட்டாம்.

மிகைமிக்கியற்றித்திரிந்திடினும்வெல்லுங்காலம்வருமளவும்
பகைமைபுறத்திற்றேற்றுமற்பகைவர்தம்மைப்பண்போடு
நகைசெய்தமர்போற்சுமந்திடுகநாடுங்காலம்வந்துவிடின்
றகைசெய்வினையையவ்வளவிற்றப்பாவண்ணமுடித்திடுக. (ருஅ)

பொள்ளென வாங்கே பறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

(க-ரை.) அறிவுடைய அரசர் கோபத்தைப் புறங்காட்டார் காலம்வரும் அளவும் அக்கோபத்தை உள்வைத்திருப்பார்.

செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

(க-ரை) அரசர் பகைவரைக்கண்டால் அவர்க்குமுடிவுகாலம் வரும் அளவும் பணியக்கடவர்.

எய்தற் கரிய தியைந்தக்கா லங்கிலேயே
செய்தற் கரிய செயல்.

(க-ரை.) அரசர் பகையைவெல்லக் காலம்வாய்த்தால் அப்பொழுதே அத் தொழிலைச் செய்யக்கடவர்.

(இது முதல் இரண்டுசெய்யுள்களால் இடமறிந்து தொழில்செய் எனக்கூறியதாம்.)

வாயினுழில்வழக்கமறமதிலுவளைத்தொன்றற்கொன்று
மேயதுணையாப்பலபடையுமெலிவற்றிருப்பமதிலகழி
யேயவியற்றியரசிருக்கவேற்றகிடக்கைநிலத்தோடு
பாயபுனலுமுடையதுவேபகையையழிக்குமிடனுகும் (ருசு)

நிலம்-ம். அதி.—இடனறிதல்.

அஃதாவது - வலியும் காலமும் அறிந்து பகைமேல் செல்லுவோன் தான் வெல்லுதற்கு ஏற்ற நிலத்தினை அறிதலாம். (குறள் கூ)

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

(க-ரை.) அரசர் பகைவரைவெல்ல இடம்கண்டால் அல்லது எத்தொழிலையும் செய்யாது இருக்கக்கடவர்.

ஊக்கமிலனுயினுமிடத்தேதாடுற்றவினைசெய்குவனுயி
லூக்கமுடையார்க்கிடனின்றுயொழியுமூக்கமிலாதவனுக்
கூக்கமுடையானுயிடினுமுற்றபடையும்பலவேனு
மூக்கமழிவ்னிடத்தேதாடுமுற்றுவினைசெய்யாவிடினே. (கூ@)

ஆற்றுரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றுர்கட் போற்றிச் செயின்

(க-ரை.) வல்லமையில்லாத வேந்தரும் இடம் அறிந்து போர் செய்வராகில் வெற்றிபெறுவர்.

சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

(க-ரை) சிறை சேனையை உடைய அரசன் குறைசேனையை உடைய அரசன் இடத்தைச் சேர்ந்து அழிக்க நினைக்கில் அவனுல் பெருமை இழந்து விடுவான்.

(இதுமுதல் ஒன்பது செய்யுள்களால் ஒருவனைப் பரீக்ஷித்து நம்பு எனக் கூறியதாம்)

பிறப்புங்குணமுமறிவுமெனப்பே ணுமிவையுஞ்செயல்களையுஞ்
சிறக்குங்காட்சியொடுகருத்தேசெயிரி னுலென்றிவைதம்மா
னிறுக்குமமைச்சர்முதலோரைநின்றுராய்ந்துதெளிந்திடுக
வறுக்கும்வினையாற்றுதற்பொருட்டுமறைபோகாமைப்பொருட்டுமே.

அறவோர்புரோகிதரைவிடுத்திட்டவராலிந்தவரசன்று
னறவோனல்லனிவற்போக்கியறவோடுரிமையுடையானை
யுறவேவைத்தற்கெண்ணினமீதாத்தனதவர்க்குநின்கருத்தென்
னுறவோதெனச்சூளுறவோடுமோர்ந்தேயொருவன்றனத்தெளிக.

சேனைத்தலைவனெடுமவனைசேர்ந்தாரையும்விட்டவ்வரச
னினப்பொருளாசையனிவனையிழுக்கிக்கொடையோடுரிமையுடை
யானைப்புரத்தற்கெண்ணினமீதமைந்ததெவர்க்குநின்கருத்தென்
னுனப்படாமையுரைத்தியெனச்சூளோடுரைப்பித்தேதெளிக. (கூங)

தொன்றுதொட்டவுரிமையொடுசூழ்ந்ததவமூதாட்டியைவிட்
டொன்றுமுரிமைதனிலின்னாளுனைக்கண்டுயங்கியெனைவிடுத்தாள்
சென்றங்கவளைக்கூடுதியேற்சிறந்தபொருளுங்கூடுநினக்
கென்றுதெளியச்சூளுறவோடிசைப்பித்திதனானுந்தெளிக. (௬௪

வேறு.

ஒருநிமித்தமேலிட்டேயோரமைச்சாலவன்மனையிலேனையோரை[காவ
யொருமையுறவழைப்பித்திங்கிவர்பிழைப்பக்குழீஇயினரென்றுத்திக்
லொருவனிலிவ்வரசனமையொறுக்கமுயன்றானிவனையொறுத்துவேறே
யொருவனைவைப்பதற்கிசைந்தேமுன்கருத்தென்னெனச்சூளொடுரை
[ப்பித்தோர்க. (௬௫

௫௧-ம். அதி.—தெரிந்து தெளிதல்.

அஃதாவது - மந்திரி முதலானவர்களைப் பிறப்பு குணம் அறிவு எனப்படு கின்றவைகளையும், செய்கையையும், காட்சி கருத்து ஆகமம் என்கிற பிரமாணங் களினாலே ஆராய்ந்து தெளிதலாம். (குறள் ௬

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
றிறந்தெரிந்து தேறப் படும்.

(க-ரை.) ஒருவன் அறம் பொருள் இன்பம் உயிரச்சம் என்கின்ற நான்கின் திறத்தால் தேர்ந்து கொள்ளப்படுவான்.

நல்லகுடியிற்பிறந்தாறுநவையுமறப்புமடிபிழைப்பென்
றல்லலுறுக்குமிவைமுதலாமனைத்துநீக்கிப்பழிக்கஞ்சி
யொல்லலுறுநாணுடையானேயோர்ந்துதெளியப்படுமைந்தா
வல்லகலைதேராசற்றார்மாட்டும்வெளிறுமருவிடுமே. (௬௬)

குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

(க-ரை.) நல்லகுடியில் பிறந்து குற்றத்தில் இருந்து நீங்கிநிற்கும் நாணம் உடையவனை அரசன் தெளிந்துகொள்வான்.

அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

(க-ரை.) அரிய நூல்களைக்கற்றுக் குற்றமற்றவர் இடத்தும் அறியாமை இல்லாதிருக்கை அரிது.

சுற்றமிலரானவர்தம்மைச்சூழேல்பழிபாவமுநாணார்
பற்றுமிலராகுவர்விடுகபண்பார்தருநற்குணங்களே
முற்றுமுடையாரிலரதனான்முனியுங்குற்றங்குணமிவற்றைத்
தெற்றென்றுணர்ந்துகுணமிகுந்தசெம்மையுடையார்தமைத்தெளிக.

குணனாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

(க-ரை.) அரசன் ஒருவன் குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து மிக நியைக் கொள்ளக்கடவன்.

அற்றுரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி.

(க-ரை) அரசன் குற்றம் அற்றவரைத் தெளிதல் ஒழியக்கடவன் அவர் உலகத்தோடு ஒட்டாதவர் ஆதலால் பழிக்கு அஞ்சார்.

பெருமைசிறுமையளந்துகொளப்பேணுங்கருவிதத்தமது
கருமமதுபோற்பிறக்கருவிகழியச்சிறந்தவலவறிக
மருவுகாதலாலறியார்மாட்டுவினையைவைபற்க
வொருவர்தமையுந்தேராமேயொருகாலத்துந்தெளியற்க. (சுஅ)

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

(க-ரை.) மனிதர்பெருமையும் சிறுமையும் அறியும் உரைக்கல்லாவது அவரவர் தொழில்களாம்.

காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்.

(க-ரை.) அறியவேண்டியவைகளை அறியாதவர்களை அரசன் தெரிந்து கொள்ளுதல் அவனுக்கறிவின்மை எல்லாந்தரும்.

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் டோருள்.

(க-ரை) அரசன் யாவரையும் ஆராயாமல் கொள்ளாதிருக்கக்கடவன் ஆராய்ந்தபின் கொள்ளக்கடவன்.

தேர்ந்துதெளியப்பட்டவன்பாற்றேர்ந்தவினையுந்தகவிடுக்க
தேர்ந்துதெளியப்பட்டவனைத்தீதுகாணுதயிரற்க
தேர்ந்துதெளியப்பட்டவவன்தீவினையை விடுமதனை
தேர்ந்துபகைவர்பிரித்திடுவர்தேரான்றெளிவேபோற்கேடாம் (சுசு)

தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

(க-ரை.) அரசன் ஒருவனை ஆராய்ந்திலனுதித் தெளிதலும், ஆராயப்பட்டவன் இடத்தில் ஐயங்கொள்ளுதலும், அவனுக்குத் துன்பம்தரும்.

(இதுமுதல் நான்குசெய்யுளால் திறனறிந்துதொழிலிடு எனக்கூறியதாம்)
முன்னர்ப்பொதுவாகியவினையின்மூளவிடுத்துத்தீகற்றி
நன்மைபுரிந்துவருமாயினுடியவனைச்சிறந்தவினை
தன்னில்விடுக்கசிறந்தவினைசார்ந்துபுரிவானிடைத்திரியின்
பின்னரதனைப்பொதுவினையிற்பெயர்த்துமுழுவவிட்டிடுக. (எடு)

ருஉ-ம். அதி.—தெரிந்துவினையாடல்.

அஃதாவது - தெளியப்பட்டவரை அவர்செய்யவல்ல தொழில்களை அறிந்து அவைகளிலே ஆளும் திறமாம். (குறள் கூ)

நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா ளளப் படும்.

(க-ரை.) நன்மை தின்மைகள் அறிந்து ஆகுமவைகளைச் செய்பவன் அரசால் ஆளப்படுவான்.

எனவகையாற் றேறியக் கண்ணும் வினவகையான்
வேறுகு மாந்தர் பலர்.

(க-ரை.) எவ்வகையால் அறிந்த இடத்தும் தொழில்வகையால் வேறுபடு மனிதர்பலர்.

ஆளுமரசன்பாலன்புமவனுக்காவதறியறிவு
நாளுமவற்றைக்கலங்காமனன்றுமூடிக்குமுளத்துணிவு
மூளும்வினைக்குத்தன்காத்தின்மொய்க்கபொருளின்விழையாத
கோளுமுடையான் புரிவினையிற்குற்றமுறுதுகுணமேயாம். (எக)

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

(க-ரை) அன்பு அறிவு தெளிவு ஆசையில்லாமை ஆகிய இந்நான்கும் உடையவனிடத்தே அரசனுக்குத்தெளிவு உண்டாம்.

அறிந்தாற்றிற் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

(க-ரை.) தொழில்செய்யும் உபாயங்களை அறிந்து முடிப்பவனுக்கு அல்லாமல் மற்றவனுக்குத்தொழில் கொடுக்கலாகாது.

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

(க-ரை.) அரசன் தொழில் செய்பவனை அறிந்து பின் தொழிலை அறிந்து அவனைத் தொழிலில் வைத்து ஆளக்கடவன்.

வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

(க-ரை.) அரசன் ஒருவனைத்தொழிற்கு உரியவனாய் இருக்கையை அறிந்து அவனை அத்தொழிற்கு உரியவனாகச் செய்யக்கடவன்.

தெளிந்தவினையிற்றெளிந்தவனைசிறந்தகாலத்தொடும்விடுக்க
விளைந்தவறிவாற்றலுமிலையென்மிக்கவுரிமைநின்பாலே
தளைந்தமனத்தானுயிடனுந்தான்பால்வினையைச்சார்த்தற்க
வளைந்துவினையில்விடுத்தவனையதற்குத்தகுமாறுரிமைசெய்க. (எஉ)

அறிந்தாற்றிற் செய்சிற்பாற் சல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

(க-ரை.) தொழில்செய்யும் உபாயங்களை அறிந்து முடிப்பவனுக்கு அல்லாமல் மற்றவனுக்குத் தொழில் கொடுக்கலாகாது.

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

(க-ரை.) அரசன் தொழில் செய்பவனை அறிந்து பின் தொழிலை அறிந்து அவனைத் தொழிலில் வைத்து ஆளக்கடவன்.

வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

(க-ரை) அரசன் ஒருவனைத்தொழிற்கு உரியவனாய் இருக்கையை அறிந்து அவனை அத்தொழிற்கு உரியவனாகச்செய்யக்கடவன்.

வினைக்கண்முயற்சிதவாதுவினையின்கேண்மைவேறாக
நினைக்குமவன்மற்றவ்வினையினீங்கும்பிறருமதினோரார்
முனைக்கும்வினைஞன்கோடாதேமுதிர்நீருலகங்கோடாது
தனைப்பின்வைகறொறுநாடிச்சாரும்வினையுநாடுகவே (எ௩)

வினைக்கண் வினையுடையான் கேண்மைவேறாக
நினைப்பானை நீங்குந் திரு.

(க-ரை.) தனது தொழிலிலே முயற்சி உடையவனை வேறாகநினைக்கும் அரசனைச் சீதேவிவிட்டு நீங்குவாள்.

நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

(க-ரை.) தொழில்செய்பவன் கோணாதிருக்க உலகம்கோணாது ஆகையால், அரசன் அவனை நாள்தோறும் ஆராயக்கடவன்.

(இச்செய்யுளால் உறவினரை ஆதரி எனக்கூறியதாம்)

பற்றும்வெறுக்கையொழிந்துழியும்பழமையெடுத்துப்பாராட்டுஞ்
சுற்றமதனைப்பெருங்கொடையாற்றாயமொழியாற்றழுவலுறி
னற்றமவனுக்கொருகாலுமணுகாதாக்கமிகப்பெருகு
முற்றநினைக்கும்பகைவர்தொழில்முற்றாதேமகண்டனே (எச)

ரு௩-ம். அதி.—சுற்றந்தழால்.

அஃதாவது அரசன் தனது சுற்றத்தாரைத் தன்னைவிட்டு நீங்காதிருக்கும் படி தழுவுதலாம். (குறள் ச)

பற்றற்ற கண்ணும் பழமைபாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

(க-ரை) ஒருவன் செல்வப்பற்று அற்ற இடத்தும் பழமைகொண்டாடுஞ் சுற்றத்தாரிடத்தே உண்டாம்.

விருப்பறுச் சுற்ற மியையி னருப்பறு
வாக்கம் பலவுந் தரும்.

(க-ரை.) ஒருவனுக்கு அன்புள்ள சுற்றம் கிடைத்தால் அது பலசெல்வங் கொடுக்கும்.

கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப்படும்.

(க-ரை.) கொடுத்தலும் இனியசொல் சொல்லுதலும் ஒருவன் செய்தால் அவன் சுற்றத்தால் சூழப்பட்டு வாழ்வான்.

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னீ ரார்க்கே யுள.

(க-ரை.) காகம் இரைகிடைத்தால் இனத்தை அழைத்து உண்ணுதல்போல அச்செய்கை நல்ல இனத்தார்க்கு உளவாம்

(இதுமுதல் மூன்று செய்யுள்களால் மறவிக்குணத்தை விடு எனக் கூறியதாம்.)

பெருமிதம்பெரியசெல்வம்பேரெழில்பெரியவின்பந்
தருமிகுகளிப்பின்மூழ்கித்தங்குறினேமகண்டா
வருமிகுபொச்சாப்பந்தபறவியானின்னைக்காத்துப்
பொருமிகுபகையைவெல்லும்பொருளெலாமிழப்பதாகும். (எடு)

ருசு-மீ. அதி.—போகீச்சாவாமை.

அஃதாவது - அழகும் செல்வமும் ஆற்றலும் முதலானவைகளால் மகிழ்ந்து தன்னைக் காத்துக்கொள்ளுதலிலும் பகையழித்தல் முதலாகிய காரியங்களிலும் மறதி செய்யாமையாம்.

(குறள் சு.

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

(க-ரை.) மிகுமகிழ்ச்சியால் வரும் மறதியானது அளவுகடந்த கோபத்தைப் பார்க்கிலும் அரசனுக்குக் கெடுதியைத்தரும்.

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

(க-ரை.) பயம் உடையவர்க்கு கால்வகை அரணங்கள் இருந்தும் பயன் இல்லை அதுபோல் மறதி உடையவர்க்குச் செல்வங்கள் இருந்தும் பயன் இல்லை

முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னு நிரங்கி விடும்.

(க-ரை.) துன்பம் வருமுன் காக்காமல் மறந்து இருந்தவன் தன் குற்றத்தைக்குறித்துப் பின் விசனப்படுவான்.

உற்றிடுமாற்றல்மூன்றுமுபாயங்கணான்குநன்மை
பற்றியதொழில்களைந்தும்பண்புறுகுணங்களாறு
மற்றையவினத்தும்கடாம்வளர்பிறப்பேழன்காறும்
பற்றிடுநன்மையின்றும்பாழ்த்தபொச்சாப்புச்சாரின். (எசு)

(ஆற்றல் மூன்று) அறிவு, ஆண்மை, பெருமை. (உபாயங்கள் நான்கு) சாம, பேத, தான, தண்டம் (தொழில்கள் ஐந்து) எளிய முயற்சி, பயன் விளைவது, பெரும்பயன்தருவது, சந்தேகமில்லாதது, பின் நன்மைபயப்பது, (குணங்கள் ஆறு) அன்பு, நாண், ஒப்புரவு, தாகூண்யம், வாய்மை, மாட்சிமை.

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

(க-ரை) மேலானவற்றை அரசர் எண்ணிச்செய்யக்கடவர் செய்யாது மறந்தவர்க்கு எழுபிறப்பிலும் நன்மை இல்லை.

கெகிழ்ச்சியொன்றின்றிசெய்யநினைத்தகாரியத்திற்சென்று
புகழ்ச்சிசெய்முயற்சிசெய்யிற்பொருள்பயவாமையில்லை
யிகழ்ச்சியிற்கெட்டார்தம்மையெண்ணுதல்செய்வையாயின்
மகிழ்ச்சியின்மைந்துறுதவண்மைவந்தடுக்குமைந்தா. (எஎ)

அரியவென் றுகாத வில்லைபோச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

(க-ரை. மறவாத மனத்தால் ஆலோசித்துச்செய்தால் அரசனுக்கு அரியவை ஒன்றும் இல்லை.

இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

(க-ரை.) அரசர் செல்வத்திலே மகிழ்ச்சியடையும்போது முற்காலத்திலே மகிழ்ச்சியிலே மறதி அடைந்தவர்களை நினைக்கக்கடவர்.

(இதுமுதல் ஐந்து செய்யுட்களால் நன்னீதிசெலுத்து எனக்கூறியதாம்.)

எய்தியகுற்றத்தோர்கள்யாவராயினுங்கண்ணோடா
தைதெனநாடிநீதியறந்தலைப்பிழையாத்தண்டஞ்
செய்தலேசெங்கோலாகுஞ்செய்யகோலின்றேயென்னு
மெய்திசெய்மழையான்மக்களுறுபயனுற்றபோலும். (எஅ)

நிரும். அதி.—செங்கோன்மை.

அஃதாவது - அரசனுலே செய்யப்படும் முறையினது தன்மையாம். (குறள் கூ)

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

(க-ரை.) அரசன் குற்றத்தை ஆராய்ந்து எல்லாரிட்த்தும் கடவுளை பொருந்தி அரசு ஆள்வதே செங்கோலாம்.

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

(க-ரை.) உயிகளனைத்தும் மழையை நோக்கிவாழும் குடிகளனைத்தும் அரசன் செங்கோலை நோக்கிவாழும்.

மழைவளஞ்சுரக்குமா றுவயனிலம்விளையுமா றும்
விழையறம்விழையுமா றும்வேத நூல்விளங்குமா றும்
தழைபொருளீட்டுமா றுஞ்சமரிடைவெல்லுமா றும்
பிழைதபவாழுமா றும்பிறழ்தராக்கோலினுகும்.

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

(க-ரை.) வேதத்திறகும் தருமத்திற்கும் காரணமாகநின்றது அரசன் செங்கோலாம்.

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

(க-ரை.) உலகத்தார் குடிகளைத்தழுவி ஆளும் அரசனது அடியையப்பொருந்தி நிற்பர்.

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

(க-ரை.) நீதிமன்னன் நாட்டிலே மழையும் விளைவும் நிறைந்திருப்பனவாம்.

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

(க-ரை.) அரசனுக்கு வேல் வெற்றியைத்தராது செங்கோல் வெற்றியைத்தரும்.

கருஇநஞ்சாதிதம்மாற்காமாருயிரைக்கொல்வோர்
வெருவறச்சூறைகொள்வோர்மேவியாறலைப்போர்கள்வ
ருருவளர்பிறனில்வேட்போருவர்முதலோரைக்கோறல்
பருவருபாவமன்றுபயிர்க்களைகளைதல்போலாம். (அவி)

கோலையிற் கோடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

(க-ரை.) அரசன் கொடியவரைத் தண்டித்து நல்லவரைக்காத்தல் உழவன் பயிர்க்குக் களையெடுத்தல் போலாம்.

பரிசனம்பகைவர்கள்வர்படர்தருமுயிர்கடாமென்
றுரைசெயைந்திடத்தினானுமுலகிடையிடையூறெய்தா
வரிசையிற்காத்துநீதிவழுக்கினார்தம்மைமொத்தி
சுரிசறப்பொருளுங்கோடல்காவலர்தருமமைந்தா. (அக)

(பெரியபுராணத்தில் திருவாரூர்ச் சிறப்பு ௩௬-வது கவி.)

மாநிலங்காவலாவான்மன்னுயிர்புரக்குங்காலைத்
தானதனுக்கிடையூறுதன்னாற்றன்பரிசனத்தா
லூனமிகும்பகைத்திறத்தாற்கள்வராலுயிர்தம்மா
லானபயமைந்துந்தீர்த்தரசாள்வானல்லனோ—என்பதனானுமறிக.

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்.

(க-ரை.) குடிகளைக்காத்துக் குற்றம் கடிதல் அரசனது தொழிலாம்.

முறைமைமுட்டாதுசெய்துமுழுநிலங்கா பினந்த
விறைவனைச்செங்கோல்காக்குமெளியசெவ்வியனுமாகான்
குறைவளர்குற்றமோரான்குணத்தொடுமுறைசெய்யானை
நிறைதருபாவந்தேய்க்குநெடும்பகையின்றாமேனும். (அஉ)

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

(க-ரை.) அரசன் பூமியைக்காப்பான் செங்கோல் அவனைக்காக்கும்.

எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும்.

(க-ரை. எளியசமையம் உடையனாதி ஆராய்ந்து முறைசெய்யாத மன்னன் தானே கெடுவான.

(இச்செய்யுளால் அநீதியை ஒழி எனக்கூறியதாம்.)

அறுதொழிலாளர் நூல்களயர்ப்பரான்பயனின்றாகு
முறைபெயலொழியுங்கூழுங்குடிகளுமொருங்குநீங்கும்
பெறுபயனாட்டிற்குன்றும்பிறங்கொளிநிலைபெறாது
கறையின்மேற்பொருள்கைக்கொண்டுகாவலைவிடுப்பின்மைந்தா. (அங)

௫-௬ம். அதி.—கொடுங்கோன்மை.

அஃதாவது-அரசன் குடிகளைதுன்புருமாறு அநீதியாய் அரசுசெலுத்துதலாம். (௬)

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து.

(க-ரை.) அநியாயஞ்செய்யும் அரசன் கொலைசெய்பவரிலும் கொடியன்.

ஈரடோறு நாடி முறைசெய்யா மன்னவ
னெடோறு நாடு கெடும்.

(க-ரை.) குற்றங்களை ஆராய்ந்து நீதிசெலுத்தாத மன்னன் தனதுநாட்டை இழப்பான்.

சூழ்ந்குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

(க-ரை.) மநுநீதிதவறிஅரசாளும் அரசன் பொருளையும் குடிகளையும்இழப்பான்.

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

(க-ரை.) அரசர்க்குச் செங்கோன்மையே புகழாம் அஃதில்லாவிடில் அப் புகழ் உண்டாகாவாம்.

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யெல்லாது வானம் பெயல்.

(க-ரை.) அரசன் மநுமுறைதப்ப அரசாளில் அவனூட்டிலே மழைபெய்யாது.

ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறைப்பா
காவலன் காவா னெனின்.

(க-ரை.) அரசன் உயிர்களைக்காவாவிடில் அன்னூட்டிற் பசுக்கள் பால் சுருங்கும். வேதியர் வேதங்களை மறைப்பார்.

(இச்செய்யுளால் அச்சமுறுவியாதே எனக்கூறியதாம்.)

கடுமொழிகண்ணோடாமைகையிகந்திட்டதண்ட
நடுநிலையின்மைசெவ்வியின்மைநன்முகமுறுமை
யுடனுறச்சூழ்ந்துசெய்யாதுறுபிழையமைச்சர்க்கேற்றல்
படுசமர்ச்சிறைசெய்யாமைபலவுந்தீங்காக்குமைந்தா. (அச)

ருஎ-ம். அதி.—வெருவந்தசெய்யாமை.

அஃதாவது - குடிகள் அஞ்சுவதும், பகுதியென்று சொல்லப்படுகிற மந்திரி முதலாகிய அங்கங்கள் அஞ்சுவதும், தான் அஞ்சுவதும், ஆகிய தொழில்களைச் செய்யாமையாம்.

தக்காங்கு நாடித் தலைச்செல்லாவண்ணத்த
லொத்தாங் கொறுப்பது வேந்து

(க-ரை.) நடுவாய்நின்று ஒருவன் குற்றத்தை ஆராய்ந்து தக்கபடி தண்டிப் பவனே அரசன்.

அருஞ்செவ்வி யின்னு முகத்தான் பெருஞ்செல்வம்,
பேஎய்கண் டன்ன துடைத்து.

(க-ரை.) அரிய சமயத்தையும் கடிய முகத்தையுடைய அரசன் செல்வமானது பேய்கண்ட செல்வம்போலாம்.

கடுஞ்சொல்லன் கண்ணில னெயி னெடுஞ்செல்வ
னீடின்றி யாங்கே கெடும்

(க-ரை.) அரசன் வன்சொல்லுடையவனும், இரக்கமில்லாதவனுமானால் அவன் செல்வங்கெடும்.

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

(க-ரை.) வன்சொல்லும் அதிக தண்டமும் அரசன் பலன்களை யழிக்கும் அரங்களாம்.

இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.

(க-ரை.) காரியங்களை மந்திரிகளுக்கொப்பித்து அவரோடெண்ணிச் செய்யாத அரசன் அம்மந்திரிகளைக் கோபிக்கின் அவன் செலவங்கெடும்.

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

(க-ரை) அரண்கட்டிக்கொள்ளாத அரசன் விரைவிற் கெடுவான்.

(இச்செய்யுளால் தாட்சணியவானுகவிரு எனக்கூறியதாம்.)

பயின்றவர் தம்மாற்கூறபட்டனமறுக்கமாட்டா
வியன்றநற்குணங்கண்ணோட்டமித்தகுகண்ணோட்டந்தா
முயன்றுசெய்முறைக்குக்கேடுமுன்னுநர்மாட்டுக்கூடா
நயந்தபனினக்குத்தீங்குநாட்டினர்தம்பாலுட்டல். (அநி)

ருஅ-ம். அதி.—கண்ணோட்டம்.

அஃதாவது – தன்னோடு பழகினவரைக் கண்டால் அவராலே சொல்லப்பட்டதனை மறக்கமாட்டாமை, இது அவர்மேலே கண் ஓடியவிட்டத்து நிகழ்வதாகலால் அப்பெயர்பெற்றது. இது தாட்சணியமென்றும், முகங்கொடுத்தலென்றும், சொல்லப்படுகின்றது.

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

(க-ரை.) அரசனுக்குத் தாட்சண்ணியமென்னும் அழகுண்டாயிருக்கையால் இவ்வுலக முண்டாயிருக்கின்றது.-

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(க-ரை) கண்ணோட்டமுடைய அரசனுக்கு இவ்வுலகம் உரிமையுடையது.

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

(க-ரை.) தம்மை வருத்துவோரிடத்துங் கண்ணோட்டமுடைய அரசிற் தலைமையாவார்.

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

(க-ரை.) தாட்சணியம் வோண்டுவோர் சினேகர் நஞ்சிடக்கண்டும் உண் சினேகிப்பார்.

(இதுமுதல் இரண்டு செய்யுல்களால் தூதரைக்கண்ணாகக்கொள் எனக்கூறியதாம்)

உளக்கணி திநூலாகவொற்றே வெளிக்கண்ணெனவிடுத்து
விளைக்குஞ்செயலான்மொழிதன்னால்வேண்டாசுற்றவினைஞரையு
மளக்கமைந்தவொற்றாவதையுறாதயுருவோடு
துளக்கமின்றியென்செயினுஞ்சோர்விலாததெனவறிக (அக)

ருகூ-ம் அதி.—ஒற்றடல்.

அஃதாவது - பகைவர் அயலோர் நட்பினர் என்று மூன்றுதிறத்தாரிடத்தும் நிகழ்ந்தவை தெரிதற்கு ஒற்றரை ஆளுதலாம். (குறள் ரு)

ஒற்று முறைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க ன்னவன் கண்.

(க-ரை.) அரசனானவன் ஒற்றனையும் நீதிநூலையுந் தன்னிரு கண்களாகத் தெளியக்கடவன்.

எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

(க-ரை.) யாவரிடத்தும் நடப்பவைகளை ஒற்றதனாலறிதல் அரசனது தொழிலாம்.

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று.

(க-ரை.) தொழிலாளரையும், உறவினரையும், பகைவரையும் ஆராய்பவனே ஒற்றனாவான்.

கடாஅ வருவோடு கண்ணஞ்சா தியாண்டு
முகா அமை வல்லதே யொற்று.

(க-ரை.) ஐயமில்லா வடிவோடு பொருந்தி அஞ்சாதிருந்து பகைவர் ஏன் செய்யினும் உள்ளதைச் சொல்லாதவனே ஒற்றன்.

துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென் செயினுஞ் சோர்வில தோற்று

(க-ரை.) துறவிகள் விரதர்கள் வடிவாகி, எங்கும்போய் ஆராய்ந் தறிந்து பகைவர் தன்பம் செய்யினும் தன்னைக் காட்டாதவன் ஒற்ற னுவான்.

ஒருவரொருவர் தமையறியாதாருமைவினைக்கண்மூவர் தமை
மருவவிடுக்கமூவர்களும்வந்துமொழிவதாத்துவிடிற்
கருமமதனைமிகத்தெளிகருமமறைப்பவேண்டுநியேற்
பொருவிலவர்தம்பாற்சிறப்புப்புறந்தோன்றுமற்செய்திடுக. (அ௭)

ஒற்றற் றுணராமை யாள்கவுடன் மூவர்
சொற்றேக்க தேறப் படும்.

(க-ரை) ஒருவொற்றன் மற்றுமொற்றனை யறியாதிருக்கும்படி அரசனுளக்கடவன்.

சிறப்பறிய வொற்றின் கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னுது மறை

(க-ரை) அரசன் ஒன்றனுக்குப் பிறரறியச் சிறப்புச் செய்யா திருக்கக்கடவன், செய்தால் தனது இரகசியங்களை வெளிப்படுத்தி னவனுவான்.

(இச்செய்யுளால் மனேற்சாகமுடையவனுயிரு எனக்கூறியதாம்.)

ஊக்கமுடையார்கைப்பொருளையொழிந்தாரேனுமொழிவில்லா
வாக்கமுடையாரேயாவராக்கமிருந்துமசைவில்லா
வுக்கமிலரேலதுமிலருளுற்றுமுயற்சிபொருள்கொடைகொ
மேடக்கும்புகழுந்தெருக்கிவைபின்சேராவேமகண்டனே. (அஅ)

சுயம். அதி.—ஊக்கழுடமை.

அஃதாவது - மனமானது தொழில் செய்தலிலே எழுச்சியை உடைத்தாதலாம். (குறள் ச-)

உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று.

(க ரை.) உடையவரென்று சொல்லத்தக்கது மனவெழுச்சியாம் அவ்வெழுச்சி யில்லாதவர் யாது மில்லாதவர்.

உள்ளமுடைமை யுடைமை பொரு ளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(க-ரை) மனவெழுச்சி நிலையுள்ளவுடைமையாம், பொருளுடை மை நிலையில்லாததாம்.

ஆக்க மதர்வினாய் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.

(க-ரை.) மனவெழுச்சி உடையவனிடத்துச் செல்வம் வரும்.

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

(க-ரை.) மனவெழுச்சி யில்லாதவர் மதிப்படையார்.

(இச்செய்யுளால் சோம்பாதே எனக்கூறியதாம்)

மடியொன்றுளதேல்வல்விரைந்துவகுக்குந்தொழிலைநீட்டிக்குங்
கடியுமறவிதுயில்விளைக்குங்கலதிதனைச்சேர்த்திடும்பகைவர்க்
கடிமைபுகுத்துங்குடிகெடுக்குமதனைவிடுப்பினாண்மையினுங்
குடிமையிடத்தும்வேறுளவாங்குற்றம்பலவுமொழிக்குமே. (அசு)

சுக-ம். அதி.—மடியின்மை.

அஃதாவது - நினைக்கப்பட்டவைகளைச் செய்யும்போது சோம்புதலில்லாமையாம். (குறள் ச)

குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

(க-ரை.) முயர்ச்சி யில்லாதவர்க்குக் குடியுங்கெட்டுக் குற்றங்களும் பெருகும்.

நெடுநீர் மறவி மடி துயி னான்கும்
கெடுநீரார் காமக் கலன்..

(க-ரை.) சோம்பலும், தாமதமும், மறதியும், நித்திரையும், கெடுவோரேறு மரக்களங்களாம்.

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும்.

(க-ரை.) சோம்பல் அரசனிடத்துத் தங்குமானால் அது அரசன் தன்னைப் பகைவருக்கு அடிமையாக்கிவிடும்.

குடியாண்மை யுள்வந்த குற்றமொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

(க-ரை.) ஒருவன் சோம்பலை யொழிக்க அவன் குடியிலும் ஆண்மையிலும் வந்த குற்றங்களழியும்.

(இச்செய்யுளால் முயற்சியைவிடாதே எனக்கூறியதாம்.)

விடாதுதனுவிற்செயுமுயற்சிமேன்மேற்பொருளேமிகவளர்க்குங்
கெடாதுசுற்றுநட்பினர்தங்கிளையுந்தாங்கும்யாவர்க்குந்
தடாதவுபகாரமும்புரியுந்தடந்தமரையாளையுஞ்சேர்க்கும்
படாதவூழ்வந்திடுகாறும்பயனேவிளைக்கும்பழியின்றும். (கூடு)

கூஉ-ம். அதி.—ஆள்வினையுடைமை.

அஃதாவது - இடைவிடாத மெய்முயற்சியை யுடையனுதல் அது ஆளும் வினையெனக் காரியத்தாற் சொல்லப்பட்டது.(கு-ள் ரு)

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

(க-ரை.) தொழிலைக்குறித்து அருமையென்று தளரா திருக்க வேண்டும் தளரா முயற்சி பெருமைதரும்.

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

(க-ரை.) உபகாரமேன்மை முயற்சியி னிடத்து நிலைபெற்றது.

இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

(க-ரை.) தனக்கின்பம் விரும்பாதவனுகி முயற்சியை விரும்பி வோன் தன்னுறவினர் துன்பத்தைத் தாங்குந் தூண்.

மடியுளான் மாமுகடி யென்ப படியினான்
முளுளா டாமரையி ளுள்.

(க-ரை.) மூதேவி சோம்பலுடையவனிடத்தில் இருப்பாள், சீதேவி சோம்பலில்லாதவனிடத்தில் இருப்பாள்.

தெய்வத்தா னுகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

(க-ரை.) ஊழில்லாவிடினும் சரீரமுயற்சிக்கித் தக்கபலனைத்தரும்.

எடுத்தகருமமுடிவதன்முனெய்துந்தெய்வத்தானுக
தொடுத்தமுயற்சியாலுடலிற்றேறன்றும்வருத்தத்தானுக
மடுத்தபொருளின்மையினுகமைந்தாவடுக்கிவந்திடினு
மிடுக்கண்டனக்குளழியற்கவின்பமதுவெனத்தெளிக. (கூக)

கூங-ம். அதி.—இடுக்கணழியாமை.

அஃதாவது - தொழிலிலே முயல்பவன் ஊழினுலாவது பொருளில்லாமையினுலாவது மெய்வருத்தத்தாலாவது தனக்குத் துன்பம் வந்த இடத்து அதற்கு மனம் கலங்காமையாம். (கு-ள் ச)

இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதோப்ப தில்.

(க-ரை.) ஒருவன் துன்பம் வரும்போது மகிழக்கடவன் அத் துன்பத்தை நெருக்கக்கடவன்.

மடுத்தவா யெல்லாம் பகடன்ன னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

(க-ரை.) தொழில்செய்ய வல்லவனை அடைந்த துன்பமானது தானே துன்பப்படும்.

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

(க-ரை.) தைரியம் விடாதவனை அடைந்த துன்பமானது துன்பப்படும்.

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றேம்புத றேற்ற தவர்.

(க-ரை) செல்வத்தில் உலோபம் செய்யாதவர் வறுமையில் விசனப்படார்.

அங்கவியல்.

இனிமுறையானே அரசியலை நடத்துதலிலே ஒன்றற்கொன்று துணையாகிய அங்கங்களது இயல்பை முப்பத்திரண்டு அதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி அவ்வங்கங்கள் ஆறனுள்ளும் ஆக்கினை சக்கரத்தைச் செலுத்துதலிலே அவ்வரசனுக்குச் சமானமாகிய அமைச்சனது இயல்பு பத்து அதிகாரத்தினாலே சொல்லத் தொடங்கி முதலிலே அமைச்சைச் சொல்லுகின்றார்.

(இதுமுதல் நான்கு செய்யுள்களால் மந்திராலோசனைசெய்
எனக்கூறியாதம்.)

நனிபயன்பயப்பநிறுமுயற்கினலைத்தகுவினையுமற்றனைய
வினையினைத்தொடங்குங்காலதனக்குவேண்டியபொருள்களும்படையு
மினிதுறுபொழுதுமுபாயமுஞ்செயலுமிடைப்படுமூறுகணீக்கித்
தனியறமுடிவுபோக்கிடுமாறுஞ்சூழ்தாவல்லவனமைச்சன். (கூஉ)

கூசு-ம். அதி.—அமைச்சு.

அஃதாவது-அமைச்சனது தன்மை அத்தன்மை அவன் குணங்களும் செய்கைகளுமாம்.

(குறள் ஏ)

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

(க-ரை) கருவியும் காலமும் செய்கையும் தொழிலும் இவற்றை எண்ண வல்லவன் மந்திரி.

மிகைவினைவரினுமசைவுறுவன்கண்விழுக்குடிகாத்தலாள்வினைநூல்
வகையுறச்சூழ்ந்துவிடுவளவிடுத்துவகுப்பனவருத்திடல்வேண்டிற்
பகைவர்வந்துணையைப்பிரித்தறம்மிடத்துப்பயின்றவர்பகைவர்பாற்புகாமற்
தகையுறச்செய்தல்பிரிந்தவர்தம்மைத்தம்மொடுபொருத்தலுமமைச்சாம்

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் வாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

(க-ரை) அசைவு இல்லாமையும் குடிகளைக் காத்தலையும் கற்று அறிதலையும் முயற்சியையும் உடையவன் மந்திரி.

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

(க-ரை.) பிரித்தலும் காத்தலும் பிரிந்தவரைப் பொருந்தச்செய்தலும் வல்லமை உடையவன் மந்திரி.

அறிவதுஞ்செயலுமொழிவதுவரசர்க்காக்கமேகுறிந்தனவாகுந்
திறனுநன்றறியாவரசருக்குறுதிசெப்பலுஞ்செய்வனவேனு
முறுமுலகியற்கைக்கொத்திடிற்செயலுமொருவினைக்கியைந்தபல்செயலு
ணிறுவுவதொன்றுல்வாய்ப்பவெஞ்ஞான்றுங்கழ்த்தலுமமைச்சருக்கியல்பாம்.

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

(க-ரை) ஆராய்தலும் ஆராய்ந்து செய்தலும் ஒருதலையாகச் சொல்லலும் வல்லவன் மந்திரி.

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

(க-ரை.) புத்தி நுட்பத்தை உடைய மந்திரிகளுக்குமுன் நிற்கும் ஆலோசனைகள் எவையுள?

செய்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

(க-ரை.) தொழில்செய்யும் திறங்களை அறிந்தாலும் உலகநடக்கையை அறிந்து செய்யக்கடவன்.

அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

(க-ரை.) சொன்னவரது அறிவை அழித்துத் தான் அறியாதனும் அரசனுக்கு உறுதியானவைகளைச் சொல்லுதல் மந்திரியின் கடமையாம்.

முறையுறச்சூழுமாத்திரமன்றிமுடிக்கமாட்டாதமந்திரியு மிறைவனுக்கஹிதமெண்ணுமந்திரியுமெழுதுசித்திரத்தினுமாகா முறுவரிற்பிரிக்கப்பட்டவர்முதலோருளத்தினைப்பிணித்துரைருளமு மறுவறப்பிணிக்குமொழிதிறனறிந்துவழங்கல்மந்திரிகணற்குணமே.

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

(க-ரை.) தருமங்களை அறிந்து தொழில்செய்யும். திறங்களை தெரிந்தவன் மந்திரி.

பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும்.

(க-ரை.) அரசனுக்குத் தீங்குசெய்யும்மந்திரி ஒருவன் எழுபது கோடி பகைவரிலும் கொடியன்.

முறைபடச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

(க-ரை.) செய்தொழிலிலே திறம் இல்லாத மந்திரிகள் முன்பு ஒருகாரியத்தை ஆலோசித்தும் பின்பு அதை முடிவில்லாமலே செய்வார்கள்.

(இச்செய்யுளால் வசனநிர்வாகரைச்சேர் எனக்கூறியதாம்)

சுருக்கமெய்விளக்கியினிமையும்பயனுந்தொகுத்தயலார்மொழிக்கிடையாத் திருக்கிளர்மொழியைச்சேர்வறவவைக்கட்செல்லுமாறஞ்சுதலின்றி யுரைக்கவல்லவரேயமைச்சர்களாவருறுமுறைபிறழ்தரப்பலவாய் விரிக்கவல்லவர்ந்தற்றதுவிளங்கவிரிக்கமாட்டாருமெல்லியரே. (சூசு)

சூரு-ம். அதி.— சொல்வன்மை.

அஃதாவது - தான் நினைத்த தொழில் முடியும் வழியால் வார்த்தைசொல்ல வல்லவனுதலாம். (குறள் சு)

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

(க-ரை.)கேட்டாரும் கேளாதவரும் விரும்பும்படிக்குச்சொல்லுவதே சொல்லாம்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

(க-ரை.) பிறர் சொல்லுஞ்சொல்லை வெல்லுஞ்சொல் இல்லாமையைக்கண்டு சொல்லக்கடவர்.

சொலல்வல்லன் சோர்விலனஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

(க-ரை) சொல்லில் வல்லவனும் சோர்வு இல்லாதவனும் அஞ்சாதவனும் ஆகிய ஒருவனை வெல்லல் அரிது.

விரைந்து தொழில் கேட்கு ஞாலநிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

(க-ரை.) சொல்லப்படும் காரியங்களை இனிதாகச் சொல்லுதலில் வல்ல மந்திரிகளைப் பெற்றால் உலகம் ஏற்றுக்கொள்ளும்

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்ற தவர்.

(க-ரை.) குற்றமற்ற வார்த்தைகளைப்பேச அறியாதவர்கள் பல வார்த்தைகளைப்பேச விரும்புவார்கள்.

இணரூழ்த்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

(க-ரை) கற்றநூல்களை விரித்துச் சொல்லாதவர்கள் வாசனை இல்லாத மலருக்கு ஒப்பாவார்.

(இச்செய்யுளால் தொழில் நலமுடையானைச்சேர் எனக்கூறியதாம்.)

பொருள்பயந்திடினுமறம்புகழ்பயவாப்புரைபடுவினையென்றும்புரியார்
மருளின்மற்றொருகாற்புரியினுமிரங்கார்வையகத்தினையோர்போல
விருமுதுகுரவர்கற்புடைமகளிரிளமகவிவர்பசித்திடினும்
பெருமிதப்படாதவினைசெயாருலகுபேணுநற்கேமஞ்செயமைச்சர்.

கூகூ.மீ. அதி.—வினைத்தூய்மை.

அஃதாவது - செயப்படும் தொழில்கள் பொருளை மாத்திரமல்லாமல் அறமும் புகழும்தந்து நல்லவை ஆதலாம். (குறள் ரு)

என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை

(க-ரை) அரசனுக்குப் புகழையும் தருமத்தையும் தராத்தொழில்களை மந்திரிகள் விடவேண்டும்.

ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்

(க-ரை.) மேலாவோமென்று எண்ணுவோர் கெடுதற்குக் காரணமான தொழிலை விடக்கடவர்.

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

(க-ரை.) தான் வருந்தும் தொழில்களைச் செய்யாதிருக்கக் வன் அவற்றைச் செய்வானாகிலும் பின்செய்யாமை நல்லது.

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

(க-ரை.) தாய் பசியைக்கண்டானாயினும் அதைக் குறித்து பழிக்கும் தொழிலைச் செய்யாதிருக்கக் கடவன்

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

(க-ரை.) மந்திரி அரசனுக்கு வஞ்சிப்பால் பொருளைத் தேடி காத்தல் பசியமண்பாத்திரத்துள்ளே நீரைவார்த்துக் காத்த போலாம்.

(இச்செய்யுளால் காரியசமர்த்தனைச்சேர்த்துக்கொள் எனக்கூறியதாம்

ஊற்றுசோர்வினையைப்புரிதராரூழா லாறுவந்தடுப்பினுங்கலங்கார்
தேற்றுகாரியத்தைமுடிப்புழியன்றிச்செயன்மொழிபாதியாலிடையே
வேற்றுபோமாறுவிளக்குறூர்துணிந்தவினைதுளங்காதுவல்விரைவார்
வீற்றுசேரிவரையுருவுகண்டெள்ளாவேந்தனேவேந்தனுமைந்தா. (கூச

கூஎ-ம். அதி.—வினைத்திட்பம்.

அஃதாவது - பரிசுத்தமாகிய தொழிலை முடிப்பவனுக்கு வேண் டுவதாகிய மனவலிமையாம். (குறள் டு

ஊக்கமொரா லுற்றபி னெல்காமை யிவ்விரண்டி
னூறென்ப ராய்ந்தவர் கோள்.

(க-ரை.) மந்திரிகள் தணிவானது பழுதுபடும் தொழிலைச் செய் யாமையும் அத்தொழில் பழுதாகில் தளராமையுமாம்

கடைக்கோட்கச் செய்தக்கதாண்மை யிடைக்கோட்கி
னேற்ற விழுமந் தரும்.

(க-ரை.) தொழிலைமறைத்து முடிவில் செய்வதே வலிமையாம் அது நடுவில் வெளிப்படுமாகில் துன்பமாம்.

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன துடைத்து.

(க-ரை.) உலகம் தேர்க்கு அச்சாணிபோலத் தொழிலில் வலிமை யுள்ளோரை உடையது அதனால் வடிவுகண்டு ஒருவரை இகழலாகாது.

கலங்காது கண்ட வினைக்கட் டோங்காது
தூக்கங் கடிந்து செயல்.

(க-ரை) மனம் தெளிந்து செய்யத்துணிந்த தொழில் இடத்து ஆலசியம் இல்லாமல் அத்தொழிலைச் செய்யக்கடவர்.

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

(க-ரை.) துன்பம்வரினும் துணிவுடன் இன்பம்தரும் தொழிலைச் செய்யக்கடவர்.

(இச்செய்யுளால் கருமஞலியறிவானைக் கைவிடாதே எனக்கூறியதாம்)

துணிவு றுமளவுஞ்சூழ்ந்துபின்னிரந்துசூழ்வினைபொருந்துவாயெல்லாந்
தணிவறமுடித்தல்லதுதகாதாயிற்றதுபொருள்வினையிடங்கால
மணியுறுகருவியைந்துமாய்ந்திகலியடர்த்தலைலாட்டலக்கழிவுறுங்காற்
பணிவுசெய்தேனுங்காத்தன்முத்தொழிலும்பண்புடையமைச்சர்தந்தொழிலே.

கூ அ-ம். அதி.—வினை செயல்வகை.

அஃதாவது—வலிமையுடைய மந்திரியானவன் தொழிலைச் செய்யும் திறமாம். (குறள் கூ)

சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத றீது.

(க-ரை) ஆலோசனைக்கு எல்லையாவது துணிவுபெறுதல் அத்துணிவு பின்னுல் ஆலசியப்படுதல் குற்றம்.

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்

(க-ரை.) குற்றம் கூடும் இடத்தெல்லாம் தண்டித்தல் நல்லது அது கூடா இடத்து மூன்று உபாயங்களால் செய்யக்கடவன்.

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யோட்டாரை யோட்டிக் கோளல்.

(க-ரை.) பகைவரைச் சிநேகம் ஆக்கிக்கொள்ளுதல் சிநேகருக்கு நல்லவைகளைச் செய்தலினும் நல்லது.

(இதுமுதல் இரண்டு செய்யுள்களால் ஏவல்புரிவானை ஆள் எனக் கூறியதாம்.)

குடிப்பிறந்திருநூல்கற்றறிந்தமைச்சர்குணங்களுமுடையனுய்ச்சுற்றங்
கடப்பமிகாசனிடத்துறுமன்புங்கருதுவேற்றரசவாம்பண்பும்
விடப்படாவின்சொல்வன்மையுமுருவுவெருவுறுத்திண்மையுமருவி
யிடத்திதாடுசெவ்வியறிந்துகாலத்துக்கேற்றவுமுரைப்பவன்தூதன். (ஈ)

சூ கூ-ம். அதி.—தூது.

அஃதாவது - பொருத்தல் பிரித்தல்களுக்கு வேற்றரசர் இடத்தே தூதுசெல்வோரது தன்மையாம். (குறள்:

அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

(க-ரை.) அன்பும் நற்குடியில் பிறத்தலும் அரசர்விரும்பும் குணமும் உடையனுதல் தூதன் இலக்கணம்.

அன்பறிவா ராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

(க-ரை.) அன்பு அறிவு சொல்வன்மை இவை தூது சொல்லுவ
ரது குணங்களாம்.

நூலாரு ணூல்வல்ல னுகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

(க-ரை.) தூதனுக்கு இலக்கணமாவது மந்திரிகள் இடத்து
வல்லவன் ஆகுதல்.

அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றின்
செறிவுடையான் செல்க வினைக்கு.

(க-ரை.) அறிவு உருவு கல்வி இவற்றை உடையவன் தூ
செல்லக்கடவன்.

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

(க-ரை.) நீதி நூலெக்கற்றுப் பகை அரசர் மனம் கொள்ள
சொல்லி அஞ்சாதவனுப் காலத்திற்கு ஏற்க உபாயம் அறிபவனே
தூதன்.

கடனறிந்து காலங் கருதியிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

(க-ரை) முறைதெரிந்து சமையம்பார்த்துத் தக்க இடம்அறிந்து
எண்ணிச் சொல்பவனே தூதரில் தலைமை உடையவன்.

உறுபொருள்காமம்விரும்புறுத்தாய்மையுயிர்க்கழிவுறினுமஞ்சாமை
மறுபுலத்தமைச்சர்தூணைமையாந்தன்மைவாய்மைசொற்சோர்வுறுத்துணிவு
மறுவறவுடையனுப்வழியுரைப்பான்மத்திமத்தூதனுமுடங்கல்
குறுகுபுகொடுப்பான்கடைப்படுந்தூதன்கூறியவிவரையுந்தழீக்கொள்.' (ஈக)

தூய்மை துணைமை தணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

(க-ரை) சுத்தமும் துணையும் துணிவும் சத்தியமும் இந்நான்கும் தூதன் இலக்கணமாம்.

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

(க-ரை.) தன் அரசன் வார்த்தையை வேற்றரசர்க்குச் சொல்லுதற்கு உரியவனே தூதரில் வலியவன்.

இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

(க-ரை.) தனக்கு முடிவுவரினும் அஞ்சாது வேற்றரசனுக்குத் தன் அரசன் சொல்லைச் சொல்பவனே தூதன்.

(இதுமுதல் இரண்டு செய்யுள்களால் இராசசேவை வல்லானைப் பொருந்து எனககூறியாதம்.)

இறைசிறப்பாகவணிவன நுகர்வவினிதுறுமேன்மையாதிகடா
முறலறைபோதலுரிமையின்மருவலொண்பொருள்வெளவன்மன்னவன்முன்
பிறர்செவிமொழிதல்பிறரொடுநகைத்தல்பேணுறுப்பண்புவேந்திளமை
முறைமதித்திகழ்தல்விரும்புறுவினையைமுடித்தலுஞ்சேர்ந்தவர்க்காகா. (௱௨)

எய-ம். அதி.—மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அஃதாவது - மந்திரி அரசரைப்பொருந்தி நடக்கும்விதமாம். (கு ௫)

மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

(க ரை) தமது அரசரால் விரும்பப்பட்டவற்றை விரும்பா திருத்தல் மந்திரிகளுக்கு அவரால் செல்வம் உண்டாம்.

போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

(க-ரை.) மந்திரிகள் தங்களிடத்துக் குற்றம்வாராமல் காக்கக் கடவர் தம் அரசர் சந்தேகித்தபின் அவரைத்தெளிவித்தல் அரிது

செவிச் சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து

(க-ரை.) மந்திரி அரசன் இடத்து இருக்கையில் ஒருவன் செவியில் சொல்லுதலையும் ஒருவனைக்கண்டு நகைத்தலையும் நீக்கி நடக்கக் கடவன்.

இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

(க-ரை) மந்திரிகள் அரசரை இகழ்பவர் எமது சாதியார் என்று இகழாமல் மதிக்கக்கடவர்.

கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

(க-ரை.) அறிவுடையவர் அரசனாலே மதிக்கப்பட்டோம் என்று நினைத்து அவர் விரும்பாதவற்றைச் செய்யார்

பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

(க-ரை.) அரசனுக்குப் பழைமையோம் என்று நினைத்து இயல்பு அல்லாதவற்றைச் செய்யும் உரிமையானது மந்திரிகளுக்குக் கேடைத்தரும்.

குறிப்பொடுகாலமறிந்திறைவிரும்பக்கோதறுபயன்மிகப்பயக்கும்
வெறுப்பிலவினையைவிரும்பிவேண்டாதவினையினைக்கேட்பினும்விளம்பார்
சிறப்புறவோர்வதாயினுமறைதான்செப்பிடிற்கேட்பினல்லாது
மறப்பினுந்தொடாராரோர்தாரணுகார்மருங்ககலார்வினவலித்தார். (ஈக)

அகலா தணுகாது தீக்காய் வார்போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

(க-ரை:) மந்திரிகள் மாறுபாடுடைய வேந்தர் இடத்து அகலாமலும் அணுகாமலும் இருக்கக்கடவர்.

எப்பொருளு மோரார் தொடர்ார்மற் றப்பொருளா
விட்டக்காற் கேட்க மறை.

(க-ரை) அரசன் இரகசியம் பேசுகையில் கேளாமலும் அதை வினவாமலும் இருந்து அவன் சொல்வதை மந்திரிகள் கேட்கக்கடவர்.

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுபவேட்பச் சொலல்.

(க-ரை.) குறிப்பு அறிந்து சமையம்பார்த்து வெறுப்பில்லாதவற்றையும் வேண்டுவன வற்றையும் சொல்லக்கடவர்.

வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

(க-ரை.) அரசன் விரும்பிய வற்றைச் சொல்லிப் பயனில்லாத வற்றை அவன்கேட்டாலும் மந்திரி சொல்லாது விடக்கடவன்.

(இச்செய்யுளால் கருத்தறிபவனைச்சேர் எனக்கூறிதாம்)

அகத்திடைக்குறித்தகாரியமதனையையுறுதவரவர்விழியான்
முகத்திலுலறியவல்லவனுகிமுகம்விழியிரண்டினுமன்றி
யகத்திடைத்தனக்குநிகழ்த்திடுங்குறிப்பாலவரவராகக்குறிப்பறிந்து
மிகத்தெளிபவனைக்காரமுதலுறுப்புள்விழைவனகொடுத்துங்கொள்மைந்தா.

எக-ம் அதி.—குறிப்பறிதல்.

அஃதாவது-அரசர் நினைத்ததை அவர் சொல்லாமல் அறிதலாம்.(கு.ச)

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(க-ரை) மனத்தின் இடத்து நடப்பதை அறிபவனைத் தெய்வத் தோடு சமானமாகக் கொள்ளக்கடவன்.

குறிப்பிற் குறிட்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

(க-ரை.) குறிப்பால் குறிப்பு அறிபவரை வேண்டுவன கொடுத் துக் கொள்ளக்கடவர்.

முகநோக்கி நிற்க வமையு மகனேக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

(க-ரை.) மனதைக் குறிப்பால் அறிந்து உற்றதை அறிவாரைப் பெற்றால் அவர்முகம்பார்த்து நிற்கப்போதும்.

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

(க-ரை.) அரசர்கருத்தை அளக்கும்கோலாவது அவர்கள் கண் களே அல்லாமல் வேறில்லை.

(இச்செய்யுளால் சபாநிர்வாகனைப்பரிபாலி எனக்கூறியதாம்.)

தொகைப்படுமின்சொலிலக்கணச்சொல்லேசூழ்ந்திடுங்குறிப்புச்சொன்மூன்றின்
வகையறிந்துயர்ந்தோரொத்தவர்தாழ்ந்தோர்மருவுமூன்றவையுமாராய்ந்து
தகையுறவுபர்ந்தோரவையின்முந்துரையார்சமத்தினவ்வாற்றினுங்களப்பார்
நகைப்படமையினென்றையுமொழியார்நவைபடாச்சொற்பொருளாய்ந்தோர்.

எஉ-ம். அதி.—அவையறிதல்.

அஃதாவது - அரசனேடிருந்த சபை இயல்பை அறிதலாம். (கு. எ)

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

(க-ரை.) சொல்லின் தொகையை அறிந்தவர் சபை அறிந்து சொல்லக்கடவர்.

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர்.

(க-ரை.) சொல்லின் நடை அறிந்தவர் சமையம் அறிந்து வி
லக்கடவர்.

நன்றென் றவற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு.

(க-ரை.) அறிவுடையோர் சபையில் அவர் முன்னம் ஒன்
சொல்லாத அடக்கமானது நன்மை எல்லாவற்றுள்ளும் நல்லது.

கற்றறிந்தார் கல்வி விளக்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து

(க-ரை.) குற்றம் அறக் கற்றவர் சபையில் கற்றவர்
விளங்கும்.

உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சோரிந் தற்று.

(க-ரை.) கற்றவர் சபையில் கற்றவர் ஒன்றைச்சொல்லல் பா
யில் நீர்விட்டாற்போலும்.

புல்லவையுட் போச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

(க-ரை.) நல்லோர் சபையிலே நற்பொருளைச் சொல்பவர் பு
சபையிலே மறந்தும் சொல்லாதிருக்கக்கடவர்.

அங்கணத்து ளுக்க வமிழ்தற்றுற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(க-ரை.) தம் இனத்தர் அல்லார் சபையில் ஒன்றும் சொல்
இருக்கக்கடவன் சொல்லுதல் சேற்றுள்வீழ்ந்த அமிர்தம் ஒக்கும்

(இச்செய்ளால் சபை அஞ்சாதவரைச்சேர் எனக்கூறியதாம்.)

வல்லவரவையுட்கற்றதஞ்சாதுவகுத்துரைத்தவருண்மிக்கான
நல்லவைகேட்பார்கற்றவர்தம்முணன்குமதித்திடப்படுவார்
சொல்லவையஞ்சிக்கற்றனசெலுத்தாச்சோர்வினர்கற்றுங்கல்லாத
புல்லியரிருந்தும்பொன்றினரதனற்போற்றுகவவையஞ்சாதவரை(

எஉ-ம். அதி.—அவையஞ்சாமை.

அஃதாவது-சொல்லுதற்கு உரியசபையை அறிந்து சொல்
கால் அதற்கு அஞ்சாமையாம். (குறள் எ.)

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
முகையறிந்த தூய்மை யவர்.

(க-ரை.) சொல்லினது தொகையை அறிந்தவர் சபையினது வகையை அறிந்து பிழைபடச்சொல்லார்.

கற்ருருட் கற்ரு ரெனப்படுவர் கற்ருற்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

(க-ரை.) கற்றவர் சபையில் கற்றவற்றைச் சொல்லவல்லவர் கற்றவர் எல்லாருள்ளும் கற்றவர் என்று சொல்லப்படுவார்.

கற்ருர்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

(க-ரை.) கற்றவர்முன் கற்றவற்றைச் சொல்லித்தாம் கற்றவைகளினும் மேலானவற்றைக்கற்றவரிடத்துத் தெரிந்துகொள்ளக்கடவர்.

பல்லவை கற்றும் பயமிலரே ரல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

(க-ரை) நல்லவர் சபையிலே நல்லபொருளைச் சொல்லாதவர் பல நூல்களைக் கற்ருராயினும் பயன் இல்லாதவராவர்.

கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

(க-ரை.) கற்றிருந்தும் கற்றவர்சபைக்கு அஞ்சுபவர் கல்லாதவரிலும் கடையராவர்.

உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

(க-ரை.) சபைக்கு அஞ்சிக் கற்றவற்றைச் சொல்லாதவர் உயிரோடிருந்தும் இறந்தவரோடு ஒப்பர்.

(இதுமுதல் மூன்று செய்யுள்களால் நாட்டை வளப்படுத்து எனக் கூறியதாம்.)

இருபுனல்வாய்ந்தமலிவருபுனலுமிடவியநகர்களுமுடைத்தாய்ப் பெருகவெப்பொருளுமொழிவறவிளைக்கும்பெருங்குடிகளுங்கலங்காலாற் பொருள்பலவீட்டுஞ்செல்வருமறையோர்புரையறுதவத்தினர்துறவோர் மருளறுகிளைஞராதியோர்பலருமன்னிவாழ்ந்திருப்பதுநாடு (ஈஎ)

எசு-ம். அதி.—நாடு.

அஃதாவது-இவ்விதவளப்பங்களை உடையது நாடாம். (கு.எ.)

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

(க-ரை) உழவரும் அறிவோரும் செல்வரும் கூடி வாழ்வதே நாடாம்.

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

(க-ரை.) நீரும் மலையும் மலையில் வருநீரும் ஈகரும் நாட்டி உறுப்பாம்.

பழுதுசீர்நாட்டுக்கமரர்கள்சாதிபற்றுசங்கேதத்தினீண்டுங்
குழுவுமாறலைக்குங்கள்வர்பொய்குறளைகூறுவோர்பன்றிமான்முதலா
கெழுவுமுட்பகையுமளவுபார்த்தரசைக்கெடுக்குங்கொல் குறும்பரு
மழைமழையின்மையெலிகிளிவிட்டின்மன்னராற்கோளுமாமைந்தா

பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

(க-ரை) அளவு இல்லாப் பொருள் உடைமையால் பிறரால் சிக்கத்தக்கது ஆகிஅழிவு இன்மைபொருந்தி மிகவிளைவதே நாடா

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.

(க-ரை.) பலகூட்டமும் பகையும் கொலைத்தொழிற் குறும்பு இல்லாததே நாடாகும்.

ஆதலிற்குடிகளாதியோர்தொகவுமழிவுசெய்குழுமுதலகன்று
போதவுங்காவல்புரிபிணியின்மைபுகழ்திருவிளைவின்பமனைத்துங்
கோதறநாளுமிகவுளதாகுங்குலைந்தயனாடுகளுறினு
மேதகத்தாங்கும்வருந்துறாதெவையும்வேண்டுழியளித்திடுமைந்தா

பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கியிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

(க-ரை.) பிறநாட்டுப்பாரம் தன்மேல் வரும்போது அவற்றை தாங்கித் தன்அரசனுக்கு இறைப்பொருள் முற்றும்தருவதே நாட

பிணியின்மை செல்வம் விளையின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(க-ரை.) நோய் இல்லாமையும் செல்வமும் பயிர் விளைவும் இன்
மும் காவலும் இவ்வைந்தும் நாட்டிற்கு அழகாகும்.

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(க-ரை.) தேடாத செல்வத்தை உடையதை நாடு என்று சொ
லுவர் தேடிவந்த செல்வத்தைத் தருநாடுகள் நாடுகளல்ல.

(இச்செயயுளால் அரணைக்காக்க எனக்கூறியதாம்.)

மருங்குநீர்க்கிடங்குவெள்ளிடைகானமலையுறவகன்றுயர்ந்துரங்கொண்
டொருங்குபல்பொறியுமணிந்துபேரிடத்தாயுறுசிறுகாப்பினல்வீரர்
பெருங்குபல்பொருளுந்தழுவியெத்திறத்துநேலர்கொளப்படாதாகிச்
சருங்கையாதிகளும்பொதிந்தகத்துறைவோர்தொழிலினிதாற்றுவதரணே.

எரு-மீ. அதி.—அரண்.

அஃதாவது - இன்னின்ன தன்மையை உடையது அரணும்.

மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தாண்.

(க-ரை.) நீரையும் வெளிநிலத்தையும் மலையையும் காட்டையும் உடையது கோட்டையாம்.

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்.

(க-ரை.) உயர்வு அகலம் வலிமை அருமை இந்நான்கின் மிகுதியையுடைய மதிலைக் கோட்டை என்று சொல்லுவர்.

(இச்செய்யுள் கம்பராயணம் கோட்டைச்றப்பு சிலேடைப்பொருள்.)

மேவரவுணாமுடிவிலாமையினல்வேதமுமொக்கும்விண்புகலாற்
தேவருமொக்குமுனிவருமொக்குந்திணிபொறிபடக்கியசெயலாற்
காவலிற்கலேபூர்கன்னியையொக்குஞ்சூலத்தாற்காளியையொக்கும்
யாவருமொக்கும்பெருமையாலெய்தற்கருமையாலீசனையொக்கும்—என்பத
[னனுபறிக.

(இச்செய்யுளால்ப் பொருட்குவைதேடு எனக்கூறியதாம்.)

அருளொடுபுரக்கப்படுங்குடியன்போடளித்திடுமாறினிலொன்று
மிருநிலத்தெடுத்தபழம்பொருளுரிமையின்றியேயிறந்தவர்பொருளு
மருவியசுங்கப்பொருளுமொட்டலரைமாட்டியபொருளுமீட்டுகவிப்
பொருளறமின்பம்புகழ்தரும்பகையைப்புரட்டுமெவ்வினைகளுமுடிக்கும். (ஈகக)

எசு-மீ. அதி.—பொருள்செயல்வகை.

அஃதாவது-இவ்விதவகையை அடையச் செய்வது பொருளாம்.

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(க-ரை.) வறியவரை யாவரும் இகழ்வர் செல்வரை யாவரும் புகழ்வர்.

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

(க-ரை.) பொருள் என்னும் விளக்கானது பகை என்னும் இருளைக் கெடுக்கும்.

(இதுமுதல் இரண்டுசெய்யுள்களால்ச் சேனைப் பரிபாலி எனக்கூறியதாம்)

கரிபரியிரதந்தானையுமமைந்துகருதுமூறஞ்சுருதிகல்வேந்
திரிதரப்பொருதுவெல்வதெப்படைதானெய்துகூலிப்படைநர்ட்டுப்
பரிபடைகாட்டுப்படைதுணைப்படைகைப்படைமூலப்படையெனவாருத்
தெரிபடையிவற்றுட்சிறந்ததுமூலப்படையிதிற்சிறந்தவர்வீரர். (ாகஉ)

எஎ-ம். அதி.—படைமாட்சி.

அஃதாவது - சேனையினது தன்மையாம்.

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

(க-ரை.) போரில் அஞ்சாது நின்று வெல்லும் படையானது அரசன் செல்வம் யாவற்றிலும் தலைமையானது.

உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

(க-ரை.) அஞ்சாது நின்று தாங்கும் சௌரியமானது அரசன் பழையசேனைக்கு அல்லது மற்றவர்க்கு இல்லை

விரையவன்பகையையெல்லும்வன்கண்மைவேந்துதாழாவகைகாக்கும்
புரையறுமானம்போரினஞ்சினரைப்பொருதடாவொளியறைபோகா
வரையறுதேற்றமுடையரேயானும்வறுமையுஞ்சிறுமையும்வெறுப்பு
நிரைதரின்வெல்லார்தலைவரில்வழியுநேர்ந்திரும்பகைவரைவெல்வார். (ாகங)

மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

(க-ரை.) சௌரியமும், மான்மும் நல்வழிச் செய்கையும், நம்பிக்கையும் ஆகிய இந்நான்கு குணமும் சேனைக்கு அரண் ஆகும்.

சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும்படை.

(க-ரை.) சிறிதாகலும் வெறுப்பும் வறுமையும் இல்லாவிடின் சேனையானது பகையைவெல்லும்.

(இச்செய்யுளால் வீரரை மேம்படுத்து எனக்கூறியதாம்.)

வேலெதிர்வரினும்விழித்தகண்ணிமையாவீறுமெய்யூறுகாணுமே
யாலியசினத்தினாழிலாட்டியருமாண்மையுமழியினல்லாது
சீலவஞ்சினஞ்செய்யாதமையாததீரமும்வேந்துசீறினுஞ்செல்
வாலியமறமுமன்கணீருகுப்பமடிதலும்படைச்செருக்காகும். (ஈகசு)

எஅ-ம். அதி.—படைச்செருக்கு.

அஃதாவது - சேனையினது மறமிகுதியாம்.

கைவேல் களிற்றெறிபோக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

(க-ரை) கைவேலை யானைமேல் எறிந்து வருபவன் தன்மெய் வேலைப்பிடுங்கி மகிழ்வான்.

விழித்தகண் வேல்கொண்டெறிய வழித்திமைப்பி
னூட்டன்றே வன்கணவர்க்கு.

(க-ரை.) கோபித்துப்பார்த்த கண் வேல்கொண்டு எறிய இமைக்குமாயின் தோற்பு அல்லவா?

(இச்செய்யுளால் சினேகங் காப்பாற்று எனக்கூறியதாம்.)

அழிதருநெறியிற்செலவினைவிலக்கியாம்வழிசெலுத்தியூழ்வினையா
லழிவுவந்தடுப்பினதற்குடனல்லாந்தாக்கைவேறன்றியாருயிர்க
ளொழிவகையின்றியுணர்ச்சியொத்தருநூலுணர்தொறுமுறுநயபோலக்
கழிமகிழ்நாளும்பயில்தொறும்வளரக்கலப்பதேநட்பெனப்படுமால். (ஈகஇ)

எகூ-ம். அதி.—நட்பு.

அஃதாவது - இன்னவிதமாய் நடப்பது நட்பாம்.

நவிறொறு நானயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

(க-ரை.) நற்குணம் உடையவர் நட்பானது படிக்கும்தோறும் நால் பயன்கொடுத்தல் போலாம்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

(க-ரை.) இருவர்க்கும் ஒத்த அறிவே சினேகம்தரும்.

(இச்செய்யுளால் இன்மறிந்து பழகு எனக்கூறியதாம்.)

நன்மதியுடைமைகுடிகுணங்குற்றநல்லினத்தானுமெச்சிறத்தும்
பன்முறையாய்ந்துநட்பினைக்கொள்கபாம்பொடுபழகினும்பிரித
லின்மையாமதனுலாய்ந்தலாலொருவரிடத்துநட்புறேலுறினவர்செய்
புன்மையும்பழியும்புணர்ந்திருபயனும்போக்குவதுண்மைபுத்திரனே. (ஈகசு)

அ0-ம். அதி.—நட்பாராய்தல்.

அஃதாவது - முன்சொல்லப்பட்ட இலக்கணம் உடையவனை ஆராய்ந்து அறிந்து சிநேகிக்க வேண்டுதலாம்.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

(க-ரை.) சிநேகிப்பவர்க்குச் சிநேகித்தபின் சிநேகத்தை விடுதல் இல்லை ஆராயாமல் சிநேகித்தல்போல் கேட்டைத்தருவது ஒன்றில்லை.

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

(க-ரை.) ஆராய்ந்து கொள்ளாதவன் சிநேகம் சாவதற்கு ஏதுவான துன்பம் தரும்.

(இச்செய்யுளால் பழமைபாராட்டே எனக் கூறியதாம்)

கெடுதியிலுதவவல்லவர்நட்பாற்கிளந்திடாதொன்றினைச்செயினுங்
கெடுவகைசெய்தல்வேண்டினதாமேகெழுவுதல்பணிவச்சமின்மை
படுதருமூழிற்புரியினுமவற்றைப்பழமையென்றறிந்துளமுவப்பி
னெடுநிலமுழுதுங்கேண்மையாமைந்தாநேரலார்தாமுங்கேளாவார். (நாகள)

அக-ம். அதி. பழமை.

அஃதாவது - நட்பினரது பழமையாம் தன்மை பற்றி அவர் செய்த பிழைகளைப் பொறுத்தலாம்.

பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கிழ்ந்திடா நட்பு.

(க-ரை.) பழமை என்று சொல்லப்படுவது யாது எனில் பழமையோர் செய்தவற்றைச் சிதையாமல் கொள்ளும் நட்பாம்.

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

(க-ரை.) நட்பாளர் உரிமையால் கேளாது செய்தால் அறிவுடையோர் அதனை விரும்புவர்.

(இச்செய்யுளால் ஆகாநட்பினரை ஒழி எனக்கூறியதாம்.)

காதலரேனும்விடுவிலமாதர்கள்வரிற்றமக்குறல்குறிப்போர்
பேதையர்கெடுதியுற்றழியுதவார்பெரும்பொருணகுவித்துப்பறிப்பார்
ராதருகருமந்தம்மினுகாததாகவேவடிப்பவருளமு
மோதலுமொவ்வார்மனைக்கெழீஇமன்றினுறப்பழிப்பாரிவர்தமையே. (நாகள)

அஉ-ம். அதி.—கீநட்பு.

அஃதாவது - தீக்குணத்தாரோடு உண்டாகிய நட்பாம்.

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது.

(க-ரை.) நற்குணம் இல்லாதவரது நட்பானது பெருகுதலினும் சிறுகுதல் இனிதாம்.

உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு மேர்.

(க-ரை.) நட்பின்பயனை எண்ணுவாரும் வேசையரும் கள்ளரும் தம்மில் ஒப்பாவர்.

(இச்செய்யுளால் கூடாநட்பினரை விலக்கு எனக்கூறியதாம்)

நல்லனபலநூல்கற்பினுங்கூடாநட்பினர்மனநலனெய்தார்
சொல்லின்முன்வணங்கும்வணக்கமுந்தொழலுஞ்சொரிந்தகண்ணீருந்தப்பாஅ
கொல்லும்வன்படையாமாதலிற்பகையுட்கொண்டவர்க்கவரெனநீயு
மொல்லுகவதுவுநீக்குறுக்காலமுற்றுழியல்லதுவேண்டா. (ாகசு)

அஊ-ம். அதி.—கூடாநட்பு.

அஃதாவது - பகைமையால் உள்ளே கூடாதிருந்தே சமையம் கிடைக்கும் அளவும் புறத்திலே கூடி நடப்பவர் நட்பு.

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ாகுதன் மாணூர்க் கரிது.

(க-ரை.) பலநூலைக்கற்ற இடத்தும் மனநலத்தர் ஆகுதல் பகைவர்க்கு இல்லை.

நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லெரல்லை யுணரப் படும்.

(க-ரை.) நட்பாளர்போல நல்லசொற்களைச் சொன்னலும் பகைவர் சொற்கள் நலம் தாாமையை அறியப்படும்.

(இச்செய்யுளால் பேதமை உடையோரை அகற்று எனக்கூறியதாம்.)

பழிமுதனணர்செய்வனதவிர்வபார்த்திடர்ர்குடிப்பிறப்பொழுக்க
மெழில்வளர்கல்வியாதிகள்பேணுரெவரையுமுறிக்குஞ்சொற்செயலார்
கழிமகிழ்வுடையார்கெடுதிகொண்டாக்கங்கைவிடுவார்செல்வமுறினுங்
கொழிபயனெய்தார்பிறற்கலாற்றமவர்க்குக்கொடாரிவர்பேதையசொழிக. ()

அசு-ம். அதி.—பேதமை.

அஃதாவது - யாதொன்றும் அறியாமையாம்.

பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டீதியம் போக விடல்.

(க-ரை.) அறியாமை என்பது யாது என்றால் குற்றங்களைக் கைக் கொண்டு இலாபத்தை விடுதல்.

நாணுமை நாடாமை நாரின்மை யாதான்றும்
பேணுமை பேதை தொழில்.

(க-ரை.) நாணுமையும் நாடாமையும் ஆசை இன்மையும் யாதொன்றையும் பேணுமையும் அறிவினனுடைய தொழில்களாம்.

(இச்செய்யுளால் வெளிற்றறிவினரைவிடுக எனக்கூறியதாம்.)

தன்னையெப்பொருளுமறிந்தவனுகத்தான்மிகமதிக்கும்புல்லறிவின் வன்மையையுடையானுறுதிசொற்கேளான்வல்லதல்லாதுங்கொண்மைத்துப் புன்மையைத்தெறிப்பானைவைபுரிந்துலகோர்போனடிப்பான்றனையுணர்த்து நன்மதியினரையறிவிலராகநாட்டுவனிவனையுநண்ணேல். (ரூஉ)

அரு-ம். அதி.—புல்லறிவாண்மை.

அஃதாவது - தான் சிற்றறிவினனுயிருந்தே தன்னைப் பேரறிவனுகமதித்து உயர்ந்தோராலே சொல்லப்படும் உறுதிச் சொல்லைக் கொள்ளாமையாம்.

வெண்மை யெனப்படுவ தியாதெனி லெண்மை
யுடையமை யென்னுஞ் செருக்கு

(க-ரை.) அறிவில்லாமை என்று சொல்லப்படுவது யாது எனில் கல்லறிவுடையோம் என்னும் மயக்கமாம்.

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற,
வல்லதூஉ மையந் தரும்.

(க-ரை.) கல்லாத நூல்களைக் கற்றோமென்று சொல்லுதல் கற்ற நூல்களையும் சந்தேகப்படுத்தும்.

(இச்செய்யுளால் மாறுபடுகுணம் தவிர் எனக்கூறியதாம்.)

இகலெனுமதித்தின்னுமைபிழையியற்றினுர்க்கும்புரியாயேற்
பகையுமுறவாம்பெருஞ்செல்வம்பலிக்குங்கெடாதபுகழுண்டா
மிகலின்மிகுந்தின்னுவியற்றினினியதமருமேதிலராய்
பகைமைவளரும்வலிதாலேயும்பாழ்க்கும்பாழாவாழ்க்கையுமே. (ரூஉ)

அசு-ம். அதி.—இகல்.

அஃதாவது-இருவர் தம்முள்ளே போர்செய்து வலிமை தொலைத்தற்கு ஏதுவாகிய மாறுபாடாம்.

பகல்கருதிப் பற்று செயினு மிகல்கருதி
யின்னாசெய் யாமை தலை.

(க-ரை.) ஒருவன் வெறுப்பானவற்றைச் செய்தான் ஆயினும் துன்பம்தரும் அவைகளைச் செய்யாமை தலைமையாம்.

இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந்தரும்.

(க-ரை.) ஒருவனுக்கு மாறுபாடாகிய துன்பம் நீங்குமாயின் அது மிகுந்த இன்பத்தைத்தரும்.

(இச்செய்யுளால் ததுதியறிந்து பகைகோள் எனக்கூறியதாம்.)

வலியார்பகைகொள்ளேல்சுற்றம்வலிகள்பொருணட்பேபடையின்
மெலியாரச்சமறியாமைமேவாத்தன்மைகொடையின்மை
நலியாவெகுளிமறையின்மைநனியாங்காமங்கல்லாமை
யொலியார்பழிநோக்காமைமறுவுடையாரிவர்மேற்பகையுறுக. (ஈஉக)

அஎ-ம். அதி.—பகைமாட்சி.

அஃதாவது - அரசர்க்கு எவ்வழிபாலும் பகையில்லாமையால், மேலே பொதுவகையால் விலக்கப்பட்டதாம்.

வலியார்க்கு மாறேற்ற லோம்புகவோம்பா
மெலியார்மேன் மேக பகை.

(க-ரை.) வலியவர்க்கு எதிர்தலை நீக்கக்கடவர் மெலியவர்க்குப் பகையாதலை விரும்பக்கடவர்.

அன்பிலை னன்ற துணையிலன் முன்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு.

(க-ரை) அன்பும் துணையும் வலிமையும் இல்லாதவன் பகைவனது வலிமையை எப்படி நீக்குவான்.

(இதுமுதல் இரண்டு சோய்யுள்களால் வன்பகைக் கொதுங்கு எனக்கூறியதாம்.)

பாரம்பரிக்கவேண்டினுறுபகைநட்பாகக்கொண்டொழுகல்
வீரந்தணியாதொடுபொரினும்விதிநூலினோடிகலாமை
சாருந்துணைநிற்பினும்பலரைப்பகையாக்காமைத்தனிமையுறி
னேருந்துணையாவிருவகையுணீக்கியொன்றையுறவாக்கல். (ஈஉச)

அஅ-ம். அதி.—பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது - மாட்சிமைப்படாத பகையை ஆக்குதற்குற்றமும் முன்னுய்நின்ற பகையுள் நட்பாக்குந் தன்மையதும், அயலாக்குந் தன்மையதும், அவைகளிலே செய்வதும், மற்றதைக்களையக்கூ

யதும் அதனிடத்தே செய்வனவும், களையும்பருவமும், கள்ளு போலல்படும் இழுக்கமும், என்று இவ்விதங்களை ஆராய்தலாம்.

வில்லே ருழுவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழுவர் பகை.

(க-ரை.) வீரர்பகையைக் கொண்டாலும் மந்திரிகள் பகை கொள்ளாது இருக்கக்கடவன். சொல்லேருழுவர் மந்திரிகள்.

ஏமுற் றவறினு மேமுழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

(க-ரை.) தனித்து இருந்து பலர் பகையைக்கொள்பவன் பிரிலும் மறிவில்லாதவனுவான்.

மெலியதெனவெள்ளியபகையேமிகுந்துகெடுக்குமிகுந்திடுமு
னலிகவினைதாழ்வுறிற்றெனிந்தநல்லாரெனவுந்தெளியாத
மலினரெனவுகொதுமலரைமருவலொழிதல்புரியற்க
வலிசெய்பகையாதிகள்பெருக்கவகையாய்ந்திருக்கபகைமையற.

தேறினுந் தேரு விடினு மழிவின்கட்
டேரூன் பகாஅன் விடல்.

(க-ரை.) பகைவன் தெளிந்தான் ஆயினும் தெளிந்திலனும் தாழ்விடத்துக் கூடானுகியும் நீங்கானுகியும் இருக்கக்கடவன்

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

(க-ரை.) தொழில்வகை அறிந்து தன்னைக்காக்கப் பகை செருக்கும் கெடும்.

(இச்சேய்யுளால் உட்பகையாளரை ஒழி எனக்கூறியதாம்.)

சமராயிருந்துபுறப்பகையைச்சார்வாய்க்காலம்வருமளவு
மமராநிற்குமுட்பகையையஞ்சிக்காக்கவுறிற்கடிக
நமராமெனவேகண்ணேடிநல்லவமைச்சாதியைத்தேய்க்கு
நமராமினத்தைத்தணப்பிக்குநன்னெக்குடியோடெளிதழிக்கும்

அகூ-ம். அதி:—உட்பகை.

அஃதாவது - புறப்பகைக்கு இடமாக்கிக் கொடுத்து அவ்வெல்லுமளவும் உள்ளாய் நிற்கும் பகையாம்.

நிழனீரு மின்னுத லின்னு தமர்நீரு
மின்னுவா மின்னு செயின்.

(க-ரை.) ஒருவனுக்கு நிழலும் நீரும் நோய்செய்யும் அப்போலத் தம் இனத்தார் இயல்புகளும் துன்பம் செய்யும்.

வாள்போல் பரைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(க-ரை) வெட்டுவோம் என்னும் பகைவர்க்கு அஞ்சாது இருக்கக்கடவர் உறவினர்போல் இருக்கும் பகைவர்க்கு அஞ்சக்கடவர்.

(இச்செய்யுளால் மேலோரை அவமதியாதிரு எனக்கூறியதாம்)

ஆற்றல்மிகுந்தவேந்தரையுமரியதவத்துமுனிவரையும்
போற்றியொழிகினெப்பொருளும்போற்றலாகுமவமதிப்பிற்
றேற்றமிகுஞ்சார்பினரேனுஞ்சிதைவர்திகழ்முப்புரார்சூரன்
சாற்றிந்திரன்மாலாதியருந்தளர்ந்தாரெனிற்சாற்றுவதென்னே. (ஈஉஎ)

கூ0-ம். அதி.—பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது - பெரியாயினுரை அவமதித்து நடவாமையாம்.

ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

(க-ரை.) வல்லவருடைய வல்லமைகளை இகழாமையே காவல் எல்லாவற்றுள்ளும் தலை.

யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

(க-ரை) வல்ல அரசனுல் கோபிக்கப்பட்ட அரசர் எவ்விடத்துச் சென்றும் உயிர்வாழார்.

(இச்செய்யுளால் மாதர்மொழிகொள்ளாதே எனக்கூறியதாம்)

தன்னுலாளப்படுமினவிதன்னுலாளப்படுவானே
லின்னுற்கறனுபொருளுமுளவாகாதெல்லைப்பொருளானு
மன்னுபயன்களினமுடியாமறுமையணுகாதெப்பிழையு
முன்னும்பின்னும்பெருநாணுமுவாப்பழியுமறிமைந்தா. (ஈஉஅ)

கூக-ம். அதி. பெண்வழிச்சேறல்.

அஃதாவது - தன்வழி நடத்தற்கு உரியவளாகிய மனையவள் வழியேதான் நடத்தலால் வரும் இழிவு.

மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.

(க-ரை.)மனையவள் வழியிலே நடப்பவர் தருமத்தை அடையார்

பேணுது பெண்விழைவா னுக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும்.

(க-ரை.) மனையவள் பெண் தன்மையை விரும்புவோன் செல்வம் வெட்கத்தைத் கொடுக்கும்

(இச்செய்யுளால் பரத்தையரை விரும்பாதே எனக்கூறியதாம்)

எழிலாற்பாடலாடலினாலிச்சைபெருக்கியுளமொவ்வா
மொழியாற்செயலால்வயமாக்கிமுற்றும்பொருளைப்பறித்துவிடும்
பழிநாணாதபரத்தையரைப்பற்றாராய்ந்தபண்புடையா
ரொழியாரவரைப்பேதைமையிலொழியாரேமகண்டே. (௱௨௧)

கூஉ:ம். அதி,—வரைவின்மகளிர்.

அஃதாவது - தந்நலம் விலைகொடுப்பவர் யாவர்க்கும் விற்பதாம்

அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்.

(க-ரை.) அன்பால் விரும்பாது பொருளால் விரும்பும் வேசையர்களின் சொல் துன்பம் தரும்.

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

(க-ரை.) பொருட்பயனைக்குறித்து நயம்பேசும் வேசையர் நடக்கை யறிந்து அவரை விடக்கடவர்.

(இச்செய்யுளால் மதுபானம்செய்யற்க எனக்கூறியதாம்.)

அறிவையழிக்குஞ்செயலழிக்குமழியாமானந்தனையழிக்குஞ்
செறியுமறிஞர்மதியாதசெருக்கைவிளைக்குமீன்றாளு
முறியும்வெறுப்புமிகவிளைக்குமுனிவுவிளைக்கும்பகையஞ்சாக்
குறிகள்விளைக்குநகைவிளைக்குங்கொள்ளேல்கள்ளுண்டலைமைந்தா. (௱௩௦)

கூஙு-ம். அதி.—கள்ளுண்ணாமை.

அஃதாவது - இனி ஒழுக்கமும் உணர்வும் அழித்தலில் பரத்தையரோடு ஒப்பதாகிய கள்ளினை உண்ணாமையது சிறப்பாம்.

உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார்.

(க-ரை.) அறிவுடையோர் கள்ளை உண்ணாதிருக்கக்கடவர். மதிக்கத்தகாதவர் உண்ணக்கடவர்.

ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

(க-ரை.) தாய்முன்னம் கள்ளுண்டு களித்தல் துன்பமாம் பெரியோர்முன் கள்ளுண்டு களித்தல் என்னபயனாம்.

(இச்செய்யுளால் சூதாடாதே எனக்கூறியதாம்)

வென்றிவரினுமதனான்முன்மேவுமொன்றற்காயிரம்பின்
மனறவிழக்குமதுவன்றிவைத்தபொருளும்வருவாயு
மன்றியனைத்தும்பகைகொள்ளுமமைச்சராதியுறுப்பொழியு
மொன்றுமொளிகல்விகண்மறுமையுறுதியிலையாஞ்சூதாடேல்.

(௱௩௧

கூச-ம். அதி.—சூது.

அஃதாவது - இனி அக்கள்ளுண்டல்போல் அறம் பொருள் இன்பங்களுக்குத் தடையாகிய சூதாடலையும் சொல்லுதலாம்.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(க-ரை.) வெல்ல வல்லவனாயினும் சூதை விரும்பாமல் இருக்கக் கடவன். வென்றபொருளுந் தூண்டில் இரும்பை மீன்விழுங்கியது போலும்.

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு.

(க-ரை) ஒருபொருளைப் பெற்று நூறுபொருளை இழக்கும் சூதாடுவோர்க்கு நன்மை பெற்று வாழும்வழி உண்டாமோ.

(இச்செய்யுளால் நோய்க்கி இடங்கொடேல் எனக்கூறியதாம்)

மனம்மெய்மொழிகள்வருந்தாமல்வகுக்குந்தொழிலைமாறுபடா
வினியவுணவைமிகப்பசித்தவிடத்தினுடற்குப்பொருந்தவுணின்
முனிசெய்பிணிகட்கிடனின்றாமுறைகள்பிறழ்ந்துவந்துவிடிற்
புனிதமுடையவயித்தியரால்வழிநின்றவற்றைப்போக்குகவே. (ரஙஉ)

கூரு-ம். அதி.—மருந்து.

அஃதாவது - பழவினையாலும் காரணங்களாலும் வரும் வாத முதலிய பிணிகளைத்தீர்க்கும் மருந்தின் திறத்தைச் சொல்லுதலாம்.

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

(க-ரை) உணவும் தொழிலும் மிகுந்தாலும் குறைந்தாலும் பிணி மூன்றும் துன்பம் செய்யும்.

அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு.

(க-ரை.) உடலைக்கொண்டவன் அவன் உடலிருக்கும்படி சீரணித்த அளவு அறிந்து உண்ணக்கடவன்.

ஒழிபியல்.

இதுமுதல் பதின்மூன்று செய்யுள்களால் ஒழிபியல்க்கூறுகின்றார்.

இனி அவ்வரசியன் முதலானவைகளிலே அடங்கா தொழிந்தவைகளின் இயல்பைப் பதின்மூன்று அதிகாரத்தினாலே சொல்லத்தொடங்கி முதலிலே குடிமை சொல்லுகின்றார்.

(இச்செய்யுளால் குலாசாரம்பேணுக எனக்கூறியதாம்.)

உன்னல்மொழிதல்செயல்மூன்றொத்தொழுக்கம்வாய்மைநாணிழுக்கார்
மன்னுமனையிற்பிறந்தார்கண்மலர்தலீகையிகழாமை
நன்னர்மொழியுமவர்க்கேயாநன்மைபயவாவினைவறுமை
யின்னலிடத்தும்புரியார்களேமகண்டாயினியறிமோ. (௱௩௩

கூகூ-ம். அதி.—குடிமை.

அஃதாவது-உயர்ந்த குடியினிடத்துப் பிறந்தவரது தன்மையாம்

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லையியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

(க-ரை.) செம்மையும் நாணமும் நல்ல குடியில் பிறந்தவர்க்கு அல்லது மற்றவர்க்கு இல்லை.

ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார்.

(க-ரை.) உயர்குடியில் பிறந்தவர் நல்ல நடக்கை சத்தியம் வெட்கம் இம்மூன்றிலும் தவறார்.

(இச்செய்யுளால் மானம் அழியாதே எனக்கூறியதாம்.)

பெருக்கத்துயர்வாம்பணிவொழியல்பேணாப்பணிவுசுருக்கத்திற்
செருக்கலின்றியமையாதசிறப்பிற்றேனுமுயர்மான
முருக்கும்வினையைச்செயநினையன்மொய்ம்பார்மானங்கெடவூழ்வந்
துருக்குமெனிற்சாமரைமானையுன்னலேமகண்டனே. (௱௩௪)

கூஎ-ம். அதி.—மானம்.

அஃதாவது - எந்நாளும் தன்னிலையிலே தாழாமையும் ஊழால் தாழ்வு வந்தகாலத்து உயிர் வாழாமையுமாம்.

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.

(க-ரை.) மிகவும் சிறப்பு உடையவை ஆயினும் தங்குடிதாழவரும் செயல்களை விடக்கடவன்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

(க-ரை) நல்ல குடியில் பிறந்தவர்க்குச் செல்வத்தில் வணக்கமும் வறுமையில் வணங்காமையும் வேண்டும்.

(இச்செய்யுளால் பெருமைதேடெனக்கூறியதாம்)

ஐதுகுடியிற்பிறந்தருநூலாய்ந்துசெல்வத்துயர்ந்ததனா
வெய்தலரிதுபெருமையஃதெய்துங்கொடையொப்புரவாதி
செய்தற்கரியசெய்துபிறர்செயிர்கூறாமற்றருக்காம
லுய்திநெறியிற்பிறழாமலொழுகுவார்க்குள்ளதுமைந்தா.

(௱௩௫)

கூ அ-ம். அதி.—பெருமை.

அஃதாவது-செய்தற்கரிய செய்தல் செருக்கு இல்லாமை பிறர் குற்றம் சொல்லாமையாம்.

ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்.

(க-ரை) ஒருவனுக்கு ஒளியாவது மன எழுச்சியாம் இளியாவது மனவெழுச்சி இல்லாமையாம்.

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில வேற்றுமை யான்,

(க-ரை.) மக்களுக்குப் பிறப்பு இயல்பொத்திருக்கும். தொழில் வேற்றுமையால் சிறப்பு இயல்பு ஒவ்வாவாம்.

(இச்செய்யுளால் மாட்சிமைப்படு எனக்கூறியதாம்.)

அன்பொப்புரவுகண்ணோட்டமழியாவாய்மைநாணுதி
யின்பம்பெருக்குநற்குணங்களெல்லாநிறைந்தசான்றோர்க
ளென்புற்றவர்க்குமினியனவேசூழ்வர்துணையின்வினைமுடிப்பர்
வன்பிற்றளராதார்நட்டார்க்குமடங்கித்தோற்றலுணரே. (ஈகூ)

கூகூ-ம். அதி.—சான்றாண்மை.

அஃதாவது - பல குணங்களாலும் நிறைந்து அவைகளை ஆளும் தன்மை.

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

(க-ரை.) பெரியோர்களுக்கு நற்குணங்களை மேற்கொள்ளுதல் கடமையா இருக்கும்.

ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

(க-ரை.) காரியமுடிப்பவர் வல்லமையாவது பணிதல் அது சத்துருக்களை வெல்லும் படையாம்.

(இச்செய்யுளால் நன்னிலைதவராதே எனக்கூறியதாம்.)

ஆன்றகுடியன்பெண்பதநல்லறநீதிகளின்வழுவாமை
சான்றமக்கட்பண்பாகுந்தன்னையுடையார்கையாலு
மான்றுமிகழார்பகையிடித்துமதியாரவர்தந்நற்குணமே
யேன்றவுலகம்பாராட்டுமெல்லாப்பயனுமவர்மாட்டாம். (ஈகூஎ)

கஂஂ-ம். அதி —பண்புடைமை.

அஃதாவது - பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லார் இயல்புகளும் அறிந்து நடத்துதலாம்.

எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(க-ரை.) யாவர் இடத்தும் எளிய சமயத்தராக இருக்கி புடைமை என்னும் நல்வழி அடைதல் எளிதாம்.

அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(க-ரை.) ஒருவனுக்கு அன்புடைமையும் நல்ல குடியில் பி லுமே நல்லவழியாம்.

(இச்செய்யுளால் செல்வப்பயனை நுகரெனக்கூறியதாம்.)

வைத்துப்பொருளைத்தானுகரான்வழங்காதிருந்துஞ்செத்தானே
செத்தபின்னரென்செய்வான்தீயார்கொள்வரீட்டுதலான்
மெத்தும்வருத்தமேயன்றிவேறொன்றில்லையாதலினாற்
பொத்தும்வெறுக்கைநன்றியுறல்புசித்துவழங்கலேயாகும்.

கo க ம். அதி.—நன்றி பில்செல்வம்.

அஃதாவது - சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்பா இல்லாத செல்வத்தின் இயல்பாம்.

வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணா
செத்தான் செயக்கிடந்த தில்.

(க-ரை.) பெரும்பொருளைத் தேடிவைத்தவனாகி அப்பொ அநுபவியாதவன் இருந்தாலும் இறந்தவனுக்கு ஒப்பாவன்.

பொருளானா மெல்லாமென் றீயா திவறு
மருளானா மாணாப் பிறப்பு.

(க-ரை.) பொருளைச் சம்பாதித்துக் கொடாமையால் உண்டாம்.

(இச்செய்யுளால் நாணம் அழியாதிரு எனக் கூறியதாம்)

இழிந்ததொழிலினாணுவதேயெய்தற்கரியநாணென்ப
ரொழிந்தமனவாக்குடலொடுக்கமொளிவாணுதலார்நாணேயாங்
கழிந்துவிடநாண்மண்கோடல்கருதார்நலமெல்லாம்வளர்ப்பார்
ரழிந்துநாணற்றுயிர்வாழாராவியழிந்துநாணாள்வார்

கo உ-ம். அதி.—நாணுடைமை.

அஃதாவது - முன்சொல்லப்பட்டசால்பு பண்பு முதலா குணங்களால் உயர்ந்தோர் தமக்குத் தகாக கருமங்களில் நாணு உடையராம் தன்மை.

கருமத்தா னாணுத னாணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற.

(க-ரை.) நாணமானது கருமங்காரணமாக நாணுவதாம். நாணங்கள் பெண்களுடைய நாணங்கள் போலாம்.

ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(க-ரை.) உணவு ஆடை மற்றவை யாவர்க்கும் பொதுவாம். நன்மக்களுக்குச் சிறப்பாவது நாணம் உடைமையாம்.

(இச்செய்யுளால் குடிநலம்பெருக்கு எனக்கூறியதாம்.)

டுத்தகருமமுற்றாமையெய்தின்முடித்தேவிடுவலெனத்
தொடுத்தமுயற்சியறிவிரண்டிற்றோலாதுயர்வார்குடிசெய்வா
டுத்தபருவங்குறித்துமடியாக்கிமானங்கருதுவார்
கெடுத்தல்புரிந்தாராதலினாற்கிளர்ககுடியூன்றவின்மைந்தா. (௱௪௦)

கo௩-ம். அதி.—குடிசெயல்வகை.

அஃதாவது - ஒருவன் தான்பிறந்த குடியை உயரச்செய்தலின் விதமாம்.

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

(க-ரை.) ஒருவன் கருமம் செய்தற்குக் கைவிடேன் என்னும் பெருமைபோல் மேன்பாடு உடையது இல்லை.

ஆள்வினையு மான்ற வறிவுமென விரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

(க-ரை.) முயற்சியும் அறிவும் ஆகிய இரண்டின் தொழிலால் ஒருவன்குடி உயரும்.

(இச்செய்யுளால் வேளாண்மைபேணு எனக்கூறியதாம்)

உழுவித்திருவரிருவருழுவித்துமுழுதுமுணலாகு
முழுதுண்பவரேதமக்குரியருபகாரியரென்பாரவரே
தொழுதுண்பரேபிறர்க்குரியார்தொழின்முற்றுழந்துமுழவினர்பான்
முழுதுமடுப்பவேண்டுதலின்முதன்மைத்துழவென்றறிமைந்தா. (௱௪௧)

கo௪-ம். அதி.—உழவு.

அஃதாவது - சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாகிய உழுதற்றொழிலாம்.

சுழன்று மேர்ப்பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை

(க-ரை.) உலகம் ஏருடையார் வழியது ஆயிற்று தலைமையான தொழில் உழவே ஆம்.

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

(க-ரை.) உழுபவர் உலகத்தார் ஆகிய தேர்க்கு அச்சாணி ஆவார்.

(இச்செய்யுளால் வறுமை அடையாதே எனக்கூறியதாம்.)

வறுமைபோலவின்னாதுவறுமையன்றிவேறில்லை
மறுவின்மொழிகள்சோர்வுபடும்வாய்த்தகுடிநற்செயல்மொழிக
ளிறுதிபடுமற்றிரப்பாதியெல்லாத்துயருமுடனாகும்
பிறனினோக்குமீன்றாளுபிள்ளாயதுவந்திடினிறத்தல்

கo௫-ம். அதி.—நல்குரவு.

அஃதாவது - அனுபவிக்கப் படுவன யாவும் இல்லாமையாம்.

இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது.

(க-ரை.) தரித்திரம் போலத் துன்பம் செய்வது எது எனி அதுவே.

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகை
யாக, நல்குர வென்னு நசை.

(க-ரை.) தரித்திரம் என்னும் ஆசையானது பழங்குடி வரவையும் அதற்கு உரியசொல்லையும் கெடுக்கும்.

(இச்செய்யுளால் யாசகரியற்கையை யறியெனக்கூறியதாம்.)

குறிப்பினுணர்ந்துமொழியாமுன்கொடுப்பார்முன்னின்றிரந்துயிரைத்
துறப்பதின்றிச்சிலர்வாழ்வர்தூய்மைமானங்கெடாமையினா
லிறப்பவுயர்ந்தகொடைமையரேயெனினுமிரப்பாரில்லாக்காற்
சிறப்பென்பெறுவரவரானேசிறப்பர்கரவாதவர்மைந்தா.

கo௬ம். அதி.—இரவு.

அஃதாவது-இனி மானம் கெடாத இரத்தல் இரவாமையே ஒத்தலால் இறத்தலை விலக்குதலாம்.

இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று.

(க-ரை.) தரித்திரர்கள் கொடுப்பவர்களைக் கண்டால் யாசிக்கக் கடவர்கள். அவர் ஒழித்தார் ஆகில் அவர்க்குப்பழி அல்லது தமக்குப்பழி அல்ல.

இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின்.

(க-ரை.) ஒருவனுக்கு யாசித்த பொருள்கள் துன்பம் அடையாமல் வந்தால் யாசித்தலும் இன்பமாம்.

(இச்செய்யுளால் ஏற்பதிகழ்ச்சியெனக் கூறியதாம்)

கண்ணிற்சிறந்தார்தம்மிடத்துங்காழ்த்தமானங்கெடநாவாற்
பண்ணற்குரியவறங்குறித்தும்படர்ந்தொன்றிரவார்பெருமையினா
வெண்ணிற்சிறந்தார்முயற்சியினாலேலாவுப்பில்வறும்புற்கை
வுண்ணற்கமைந்ததமைந்ததெனவுவப்பரேமகண்டனே. (ஈசச)

க0எ-ம். அதி.—இரவச்சம்.

அஃதாவது - மானம் கெடவரும் இரத்தலுக்கு அஞ்சுதலாம்.

கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.

(க-ரை.) ஒளியாது கொடுக்கும் ஒப்பானவர் இடத்தும் யாசியாது இருத்தல் கோடிமடங்கு நன்மை ஆம்.

இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(க-ரை.) பிரமன் உலகத்தோரை யாசகம்செய்யப் படைத்தான் ஆகில் அவன் கெடக்கடவன்.

(இச்செய்யுளால் கீழ்மையகற்று எனக்கூறியதாம்)

அழுக்குற்றெவர்க்கும்வடுக்காண்பாரச்சமாசையாலன்றி
யொழுக்கம்புரியார்மறைபிறர்பாலுய்த்துமொழிவார்தம்போல
விழுக்குக்கேதுங்கவலார்முனேற்றமாகிச்செம்மாப்பார்
மழுக்குளார்க்கேபயன்படுவார்வறிதும்வறியார்க்கிடார்கயவர். (ஈசரு)

(இ-ள்) கீழ்மக்கள் எல்லோரிடத்தும் பொறாமையினால் குற்றங்காட்டுவார்கள் அச்சத்தாலுமாசையாலுமன்றி ஒழுக்கஞ்செய்யமாட்டார்கள் இரகசியத்தைப் பிறரிடஞ்சென்று வெளியிடுவார்கள் தம்மைப்போல (பிறர்க்கு) அவமானம்நேரிடின் (அதர்க்காகச்) சிறுதுங் கவலைப்படார் அதற்காக முற்படப் பூரித்துக்களிப்பார்கள். தம்மை தண்டிப்பவர்க்கே கொடுப்பார்கள் எளியவர்க்கு ஒன்றுங் கொடுக்கமாட்டார்கள். (எ-று)

க0அ-ம். அதி.—கயமை.

அஃதாவது -- முன்னே அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும் சிறப்பு வகையால் சொல்லப்பட்ட குணங்களுள் ஏற்புடையவைகளைக் குறிப்பினால் யாவர்க்கும் பொருந்த வைத்தமையால் அங்கே குறிப்பால் சொல்லியவையும், இங்கே ஒழிபியலுள் வெளிப்படச் சொல்லியவையும், அகியகுணங்களுள் யாதுமிலராகிய கீழோரது தன்மையாம்.

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடியுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

(க-ரை.) கீழ்மக்கள் இரப்பவர்க்குக் கொடார் வருத்துவோர்க்குக் கொடுப்பர்.

உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

(க-ரை.) கீழ்மக்கள் பிறர் உண்டாலும் உடுத்திருப்பதும் கண்டால் பொறாமை கொள்வார்கள்.

அறத்தோடரசநீதிபுரிந்தகிலம்புரந்து பொருளீட்டித்
திறத்தால்வாழும்வகையெல்லாஞ்செல்வக்குமரற்கிவ்வாறங்
குறத்தானியம்பித்திறற்சோமகாந்தனுலகபாரமவ
னெறுழ்த்தோட்பெயர்த்துக்கொடுப்பான்பினிதனைப்புரிந்தான்புலவீர்காள்.

(இ-ள்) இவ்வகையாக மனுதர்மமுறையுடன் இராசதருமத்தை நடத்தி உலகத்தைக் காத்து (தருமவழியிற் பொருள்தேடி) வலிமையோடு வாழ்கின்ற வகை முழுவதையும் தன் செல்வப் புதல்வனுகிய ஏமகண்டனுக்கு வெற்றி பொருந்திய சோமகாந்த மன்னன் தன்னுலகபாரத்தை அவனுடைய வலிதங் கியதோளிற் பெயர்த்துக் கொடுக்கும்படி இதனைச் செய்வானுயினன் புலவீர்ளே.

இப்புத்தகத்தில் அடங்கிய சரித்திரங்களாவன.

விநாயகர்துதி (கவி 1.) நாட்டுச்சிறப்பு (கவி 1.) நகரச்சிறப்பு (கவி 1.) அரசன் சிறப்பு (கவி 5.) மந்திரிகளின் பெயரும் தன்மையும் (கவி 2.) சேனைப்பெருக்கம் (கவி 1) அரசன் மனைவிசிறப்பு (கவி 1.) சோமகாந்த ராசனும் அவன் மனைவியும் மந்திரிகளும் ஏமகண்டனும் உரையாடல் (கவி 5.) அரசியற்கைப்படலம் (கவி 15ல்) இதில் (கவி 10) நித்தியகருமவிதி கூறப்பட்டது மீத (கவி (146-ம்) திருக்குறள் அதிகாரமுறையால் நீதிபோதித்தல் அச்செய்யுளுக்கு அவதாரிகை (73) மேற்கூறிய செய்யுளின் கருத்திற்கிணங்கிய திருக்குறள் கருத்துரையுடன் (388).

காமத்துப்பால் அதிகாரம் (25) இதில் களவியல் அதிகாரம் (7) தலைவியுரைப்பது அதிகாரம் (12) அவ்விருமுரைப்பது அதிகாரம் (6) இதனை சோமகாந்த ராசன் தன் புதல்வனுக்குப் போதிக்காமையால் புராணிகரும் அதையெடுத்துக்கூறவில்லை.

திருக்குறள் விளக்கம் அரசியற்கைப்படலம் முற்றுப்பெற்றது.

திருகைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்க தேசிக மஹாசந்நிதானம் அவர்கள்
திருவடிவாழ்க.

அலைமகள் கலைமகள் மலைமகள்

இம்மூவர்களின் தாரதனமய வனாவிடை.

இஃது

இதுமுதல் ஒன்பது செய்யுள் துறைமங்கலம்

சிவப்பிரகாச சுவாமிகளால்

செய்யப்பட்டது.

கலைமகளைமருமகளாக்காதலித்துக்கொண்டவிந்தக்கனகமங்கை
சிலைமகளைத்தன்கணவன்றங்கையெனப்பெற்றதிருச்செழியநங்கை
தலையுலகிற்கலையுணர்வார்க்கருந்தனங்கள்தாராததன்மையென்னே
நிலையுணராப்புல்லியர்பாலிவர்செலவுந்தனமுதவுநெறிதானென்னே. (க)

அருமைமருமகளிடத்துங்குறைநினையாமாமியிந்தவகிலத்தில்லை
பெருமையினாலிவர்சமமாம்வரிசையினாற்பேதமுறும்பெற்றியாலே
திருவனையாரிவரொருமித்தருள்செய்தாலிகபரங்கள் சித்தியாகும்
ஒருமையிவர்க்குண்டாகத்தலைவர்களேசமனோக்கமுதவவேண்டும். (உ)

மகளின்மருமகளதிகமெனவுலகம்பாராட்டும்வரிசையானும்
மிகவரியபதங்களிலேயிவர்மருவியருள்நிறைந்துவிளங்கலானும்
தகைமையுறவுலகமெலாமேன்மேலும்பலவளங்கள்தழைதலானும்
அகனமர்ந்தெமுளத்திருந்துதனங்கல்வியிரண்டுவணருள்செய்வாரே. (ங)

திருமகளைக்கலைமகளும்பலமறையாற்றுதிசெய்துதிகழ்தலானும்
மருமகளையரியபதத்திருத்தியுயர்வளமையுறவைத்தலானு
மிருவருமுள்ளன்புடையாரெனமதித்தோமியாமினியிங்கினிமையாக
வொருமையுறவுளத்திருத்தியிருபொருளும்பெறலாகுமுறுதியீதே. (ச)

கலைமகளைப்போற்றினர்க்கிங்கறம்பொருளின்பம்வீடுகாட்டுந்தீம்பா
லலைமகளைவாழ்த்தினர்க்குமிம்மையிலேநாற்பயனுமளித்துக்காக்கு
மலைமகளையேத்தினர்குப்பவமகன்றுமுத்திபெறுவழியுண்டாகு
நிலைமையிதுநான்மறையாகமங்களெலாநிச்சயித்துநிகழ்த்துமன்றே. (ரு)

வன்னெஞ்சக்கொடியவர்பால்மலர்மங்கையிருந்துதனம்வழங்கக்கண்டோம்
நன்னெஞ்சமில்லவர்பாற்கலைமங்கையிருந்ததொருநாளுங்காணோம்
கன்னெஞ்சக்கொடியோர்நல்லோர்பொருளைவஞ்சனையாற்கவர்ந்துகொள்வா
ரின்னெஞ்சநல்லோர்தங்கலைப்பொருளையினிதாகவெவர்க்குமீவார். (சு)

[illegible] தாயும்மிவர் [illegible] பாதத்தை
குழைகனல்வாலெவர்கள் குவாழ்நாளுக்கியை [illegible]
[illegible] புதல்வருக்கல்லாலெ [illegible] தைபாலிக்கின்றார்
[illegible] டைப்மகன்றாமார்க்கி [illegible] வேறென்புல்லத்தானே.

ஆதலினற்றிருத்தாயேவஞ்சகரையகன்றுநல்லோரகத்திருத்து
மேதகையதனமாதி*பதிஞறுபேறுதவவேண்டுகின்றேன்
நீதியிதுகலைமகன்வாழ்மனேகவெலாமேலாகவெடிதிங்கோங்கும்
பாதகஞ்செய்வஞ்சகரும்பவமகன்றுநன்மையுறப்பாலிப்பாயே.

என்னிருகண்மணியானபொன்மாதுங்கலைமாதுமினிதுவாழ்க
மன்னியநற்செல்வர்களுங்கலைஞர்களுமேன்மேலுமருவிவாழ்க
பன்னியவஞ்சகொழியநல்லோர்கள்நாடோறும்பல்கிவாழ்க
வின்னியவிவ்விருவிடையின்பொருளுணர்ந்துபோற்றுமன்பரினிதுவாழ்க

இச்செய்யுள் 5ம் திருவாலவாய்கட்டளையுலுள்ள பதிஞறுபேறுகள்

*மறைகள்நிந்தனைசைவநிந்தனைபொறுமனமும்
நறுகணம்புலன்வழியிலேச்செல்லுறுத்தகையும்
பிறவிதீதெனுப்பேதையர்தம்மொடுபிணக்கும்
உறுதிநல்லறஞ்செய்பவர்தங்களோடுறவும்

யாதுநல்லன்பர்கேட்கினுமுதவிடுநலனு
மாதவத்திலெவெறுக்கினும்வணங்கிடுமகிழ்வுந்
மோதுநல்லுபதேசமெய்யுறுதியுமன்பர்
தீதுசெய்யினுஞ்சிவச்செயலெனக்கொளுந்தெளிவும்

மனமும்வாக்குநின்னன்பர்பாலொருப்படுவளனும்
கனவினுமுனதன்பருக்கடிமையாங்கருத்து
நினைவின்வேறெருருநெய்வத்தைவழிபடாநிலையும்
புனிதநின்புகழ்நாடோறும்போற்றிடும்பொலிவும்.

தீமையாம்புறச்சமையங்களொழித்திடுதிறனும்
வாய்மையாகவேபிறன்பொருள்நச்சிடாவளனு
மேழுறும்பிறதாரநச்சிடாதநன்றெனும்பும்
தூய்மைநெஞ்சினிலியானனைச்சருக்குறுத்துறவும்.

துறக்கமீதுறைகினுமின்பந்துய்க்கினு
மிறக்கினும்பிறக்கினுமின்பந்துய்க்கினு
பிறைக்கொழுந்தணிசடைப்பெருமவிவ்வரம்
மறுக்கிலாதெனக்குநீவழங்கலவேண்டுமால்.

——:o:——

ஸ்டார் பிரஸ், கெஹட் ஆபீஸ், - கும்பகோணம்